வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்
SUTANTIRAN

194A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு 12.

புத்தகம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 1993 மார்கழி திங்கள் 8-ம் நாள் (23 –12—1962) ஞாயிற்றுக்கிழமை றஜபு 25 | இதழ் 30




# சீனாவில் கோர உணவு பஞ்சம்

## நிதி நெருக்கடி: நிலைமை மோசம்

## உணவு தேடி உலகெங்கும் ஓடும் சீனக் கோஷ்டி

**சீனாவில் கடுமையான உணவுப் பஞ்சம்-பொருளாதார நெருக்கடி. மா. சே. துங்கின் புதிய "கொம்யூன்" விவசாயத் திட்டம் படு தோல்வி அடைந்துவிட்டது. அதனால் கடுமையான உணவுப் பற்றுக் குறை ஏற்பட்டுள்ளது. மிடுக்காக உடையணிந்த சீன வர்த்தகர்கள் உலகம் முழுவதும் நாடு நாடாகச் சென்று கோதுமை, சோளம், ரவை முதலிய தானியங்களைக் கோடிக் கணக்கான டன் வாங்கி வருகிறார்கள். உணவுப் பஞ்சத்தோடு நிதி நெருக்கடியும் வேறு நாட்டின் நிலைமையைப் படுமோச மாக்கியுள்ளது என்று ஹொங்கொங்கிலிருந்து வெளியாகும் "சீனச் செய்திச் சேவை"யின் 1962 செப்டம்பர் 6-ந் திகதியிட்ட பிரசுரம் கூறுகிறது.**

ஹொங்-கொங்கின் கை தாக் விமான நிலையத்தில், அழகாக உடை உடுத்த சீன வர்த்தகர்கள் ஒரு சிலர், டோக்கியோவுக்கும், கிழக்கு நோக்கி வேறு இடங்களுக்கும் செல்லும் விமானத்தில் ஏறுவதற்கெனக்காத்து நின்றார்கள். நடை உடை பாவனையில், 'கிழக்கின் முத்து' எனப்படும் செழிப்பான இத் துறைமுகத்திற்கு மேலும் மேலும் வியாபாரத்தையும், வர்த்தகத்தையும், கொண்டு வந்து சேர்க்கும் நோக்கத்துடன் வெளியூர் செல்லும் பல வியாபாரிகளைப் போலவே அவர்களும் காட்சியளித்தார்கள். ஆனால், இவர்கள் ஹொங்-கொங் வியாபாரிகளல்ல.

கனடாவுக்கு ஒரு விசேஷ வர்த்தகத் தூது செல்லும் கொம்யூனிஸ்டு சீன வர்த்தகர்களே அவர்கள்.

பீக்கிங் அரசாங்கம், பிற நாடுகளிலிருந்து அவசியம் தேவையான உணவுப் பொருட்களைக் கொண்டு வரும் பொறுப்பை, இத்தகைய தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சிலரிடம் கொடுத்துள்ளது.

கை தாக் விமான நிலையத்தில் விமானத்துக்காகப் பார்த்துக் கொண்டு நின்ற சீன வர்த்தகக் குழுவினர், ஏற்கெனவே கைச்சாத்திடப்பட்ட, இரண்டரை வருட கால ஒப்பந்தம் ஒன்றின் கீழ், மேலும் உணவுத் தானியங்கள் பெறுவதற்காக, டொரொன்ரோவுக்குச் செல்லும் மார்க்கமாகவே அங்கு வந்திருந்தனர்.

கடந்த வருடத்தில், கனடா சீனாவின் தானியப் பண்டகசாலைகளுக்குள் 2,376,000 தொன் கோதுமையையும், ரவையையும் கொட்டி வைத்துள்ளது. இவ்வருடம், சீனா இன்னும் 20 லட்சம் தொன் பெற்றுள்ளதுடன், கனடாவினால் கொடுக்க முடியுமெனில், மேலும் பெறுவதற்கும் விரும்புகிறது.

### அளவு கடந்த தேவை

கொம்யூனிஸ்டு சீனாவின் விவசாய திட்டத்தின் தோல்வியினால் ஏற்பட்டுள்ள நிலைமை, அளவு கடந்த உணவுத் தானியங்களை வேண்டி நிற்கின்றது. இந்தத் தேவையைப் பூர்த்தி செய்வதற்குக் கனடாவின் அதிகப்படி தானியம் போதாது. 1960ம் ஆண்டின் கடைசிக் கட்டத்திலிருந்து, கனடாவில் மட்டுமன்றி, அவுஸ்திரேலியா, பிரான்ஸ், மேற்குஜெர்மனி, பர்மா, ஆர்ஜெண்டைனா ஆகிய நாடுகளிலிருந்தும்

(8-ம் பக்கம் பார்க்க)



காரிருள் சூழ்ந்து துன்பக்
கடலிடை கலசமாகி
கலங்கிடும் எமக்குத் தூய
கலங்கரை விளக்காய் நின்று
கவலைகளனைத்தும் நீக்கி
காத்தருள் புரிந்திடுவார்
பாரினில் மாந்தர்க்காக
பாலகனான தேவன்

நத்தார் வாழ்த்துக்கள்



திடீரென இந்தியாவை ஆக்கிரமிக்க முன் வந்த கொம்யூனிஸ்ட் சீனாவில் கொடிய உணவுப் பஞ்சம் தாண்டவமாடுகிறது. தானிய உற்பத்தியில் மிக சின்னதமான முன்னேற்றம் கண்ட கனடாவிலிருந்து உணவுத் தானியங்களை வாங்குவதற்காகப் புறப்பட்ட கொம்யூனிஸ்ட் சீனாவின் வர்த்தகக் குழுவின் தலைவர் ஹொங் கொங் நகரின் கை தாக் விமான நிலையத்தில் தமது குழுவினருடன் விமான மேறக் காத்துக்கொண்டிருக்கும்போது எடுத்த படம்.

### ஹட்டனில் தமிழரசாரின் மாபெரும் கூட்டம்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சீன ஆக்கிரமிப்புக் கண்டனக் கூட்டமும், பிரசாரக் கூட்டமும் 23ம்திகதி ஞாயிற்றுக்கிழமை ஹட்டன் டன்பார் மைதானத்தில் நடைபெறும்.

இக் கூட்டத்திற்குக் கட்சித் தலைவர் திரு. எஸ். எம். இராசமாணிக்கம் தலைமை வகிப்பார். கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட மற்றும் பலர் உரை நிகழ்த்துவார்கள்.

---

### பறிமுதல் ரஷ்ய அட்லஸ்

ரஷ்ய அரசாங்கம் ஆறுவது, ஏழாவது வகுப்புகளுக்கென்று வெளியிட்டுள்ள பூகோள அட்லஸ் புத்தகம் ஒன்றின் மீது பாரத அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இப்புத்தகத்தின் சில பக்கங்களில் வெளியாகியுள்ள படங்கள் இந்தியாவின் எல்லை உரிமைகளையும், பிரதேச உரிமைகளையும் மறுப்பனவாக அமைந்துள்ளன. ஜம்மு, காஷ்மீர் பெரும் பகுதியும் நேபாவின் முழுப் பகுதியும் சீனாவின் பகுதிகளாகக் காட்டுவதாக அவைகள் அமைந்துள்ளனவாம்.

### பேர்ஸ் டயறிகள் [PURSE DIARIES] 1963

| | |
|---|---|
| இங்கிலிஷ் பேர்ஸ் டயறி (No. 5) (இரண்டு பக்கத்திற்கு ஒரு கிழமை) | 2-10 |
| இங்கிலிஷ் பேர்ஸ் டயறி (No. 4) (ஒரு பக்கத்திற்கு இரண்டு நாள்) | 2-60 |
| தமிழ் ஆங்கில பேர்ஸ் டயறி (No. 2) (ஒரு பக்கத்திற்கு இரண்டு நாள்) | 2-60 |
| தமிழ் ஆங்கில பேர்ஸ் டயறி (No. 1) (ஒரு பக்கத்திற்கு ஒரு நாள்) | 3-10 |
| பிஸ்னஸ் பேர்ஸ் டயறி (Business) (ஒரு பக்கத்திற்கு ஒரு நாள்) | 3-85 |
| டெஸ்க் பிளாஸ்டிக் டயறி (பெரியது) (மூன்று பக்கத்திற்கு ஒரு கிழமை) | 2-95 |
| டேபிள் பிளாஸ்டிக் டயறி (பெரியது) (ஒரு பக்கத்திற்கு ஒரு நாள்) | 4-35 |
| புள்ஸ்காப் டயறி (கலிகோ பைண்ட்) (ஒரு பக்கத்திற்கு ஒரு நாள். வர்த்தகர்கள் கணக்குப் புத்தகமாகப் பாவிக்கக் கூடியது) | 13-50 |
| வலற் (Wallet) டயறி (2-50 பெறுமதியான வலற் பேர்ஸ் கொண்டது) | 4-85 |
| டேபிள் கலண்டர் (Table Calender) (பிளாஸ்டிக் ஸ்டான்டுடைய மேசைக் கலண்டர்) | 4-75 |

குறிப்பு : விரும்பும் டயறியின் விலையையும், டயறி ஒன்றுக்கு 35சதம் தபாற் செலவும் அனுப்பினால் பார்சலில் அனுப்பப்படும்.

**மெய்கண்டான் அச்சியந்திரசாலை,**
161, செட்டியார் தெரு, கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னல்படும் எமக்கு இயேசு வழியே சிறந்தது

## சத்திய வழியில் சென்று வெற்றி காண்போம்

—வித்துவான் நீ. மே. யோ. வேதநாயகம், பி. ஏ.—

ஈழம் வாழ் தமிழ் பேசும் மக்களாகிய நாம் இன்னல்கள் படுகின்றோம். உரிமைகளனைத்தையும் பறிகொடுத்துவிட்டு அடிமைகளாக்கப்பட்டு வருகிறோம். இதே வேளையில் கிறிஸ்து பெருமானின் வாழ்க்கை நெறி நமக்கு ஒளிவிளக்காக அமையும் என்பதில் ஐயமில்லை. கிறிஸ்து காட்டிய, காந்தி காட்டிய, சத்திய வழியிலே செல்வோமாக. அவ்வழியே வேறு எந்த விதமான ஆயுதமுமற்ற எங்களுக்கு உறுதுணை புரிவதாகுக.

ஏறக்குறைய ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த யூதர்கள் தங்கள் இனத்தை இரட்சிக்க இறைவன் மனித உரு எடுப்பார் என நம்பியிருந்தனர். 'மெசியா' எனப்படும் அவரின் வருகை பற்றித் தீர்க்கதரிசிகள் பலவாறு கூறியுள்ளனர்.

சற்றேறக்குறைய ஆயிரத்து தொளாயிரத்து அறுபத்திரண்டு ஆண்டுகளின் முன்னர், அல்லது சிறிது காலம் பின்னர் கலிலேயா நாட்டிலுள்ள நசரேத்து என்னுஞ் சிற்றூரில் வாழ்ந்த மரியம்மாள் என்ற ஒரு கன்னிகை முன் வானவர் தூதன் ஒருவன் தோன்றி, அவளை வாழ்த்தி அவள் இறைவனின் தாயாகப் போகுஞ் செய்தியைக் கூறினன்: இச்செய்தியினல் மரியம்மாள் வியப்பும் அச்சமும் ஒருங்கே அடைந்தனளேனும், தேவதூதனல் தேற்றப்பட்டுத் தன்னைக் கடவுளின் சித்தத்துக்கு அர்ப்பணித்தனள்.

இறைவன் கன்னிமரியம்மாளின் திருவுதரத்தில் கருவுயிர்த்துப் பத்துத் திங்கள் சென்றது. அவ்வேளை உரோமப் பேரரசனன அகுஸ்துஸ் சீசர் தனது ஆணைக்கு உட்பட்ட நாடெங்கும் குடிமதிப்பு எடுக்கக் கட்டளையிட்டான். எனவே, மரியம்மாள் தனது தலைவனுகிய யோசேப்புடன் பெத்தலேகம் என்னும் சிற்றூருக்குச் சென்று, தங்களைப் பதிவு செய்ய வேண்டியதாயிற்று. அவர்கள் அவ்விடத்தை அடைந்தபோது, ஊரில் பொதுவிடுதிகளிலோ, தனியார் வீடுகளிலோ தங்க முடியவில்லை. அதனல் ஆடு, மாடு வந்தடையும் ஒரு குகையில் தங்கினர்கள். அங்கே நடு இரவில் மரியம்மாள் தேவசுதனை ஈன்றனள்.

இச்சுப செய்தியை வானவர் தூதர் அங்கு வாழ்ந்த இடையர்களுக்கும், ஆயர்களுக்கும் தெரிவித்தனர். அடுக்கு மெத்தை வீடுகளில் உல்லாச வாழ்க்கை வாழுகின்ற செல்வர்களுக்குக் கிடையாத பேறு இவ்விடையர்களுக்கும், ஆயர்களுக்கும் கிடைத்தது. இறைவனின் இனிய திருமுகதரிசனமும், அவனுடைய பாத மலர்களைப் பணியும் பேறும் அவர்களுக்கன்றே கிடைத்தது!

இடையர்களோ, இடைச்சியர்களோ, ஆயர்களோ, ஆய்ச்சியர்களோ மாசுபடாத வெள்ளை உள்ளத்தவர்கள் தேவகுமரன் பிறந்த செய்தியைக் கேட்டனர்; முல்லை முதலிய மலர்களைப் பறித்துமாலையாகத்தொடுத்தனர்; பாலன் பிறந்திருந்த குகையெங்கும் பரப்பினர்; உலகை ஈடேற்ற உதயமான ஞான சூரியனைக் கண்டு களியுவகை கொண்டனர்; கனிவுடன் வாழ்த்தினர்; வணங்கினர். இவ்விடையர்கள் நாடோறும் அக்குகைக்குச் சென்று, தேவதாயின் திருக்கரத்தில் தவழ்ந்து புன்முறுவல் பூத்துப் பொலிவுடன் விளங்கும் தேவகுமாரனைத் தொழுதார்கள், தேவதாயாருடனும், சூசையப்பருடனும் அளவளாவி மகிழ்ந்தார்கள்!

திருக்குழந்தை பிறந்த எட்டாம் நாள் விதிப்படி அவருக்குப் பெயரிடப்பட்டது. "உலகைப் புரக்கும் புரவலன்" என்னும்பொருள்படும் யேசு என்னும் பெயரை வானவர்கள் சொல்லி வணங்கினர். எங்கும் இன்பம் பொங்கியது.

வேத நூல்களில் குறிப்பிடப்பட்டபடி சுடர்விடும் விண்மீன் ஒன்று தேவபாலன் பிறந்த அன்று ஆகாயத்தில் புதிதாய்த் தோன்றிற்று. அதையறிந்த ஞானிகள் மூவர் இறைவனை நேரில் கண்டு வணங்க வெவ்வேறு இடங்களிலிருந்து புறப்பட்டு, மூவரும் ஒரிடத்தில் கூடி, மேலும் நடந்து இறுதியாகக் குகைக்கு வந்து தேவபாலனை வணங்கினர். பலவகைக் காணிக்கைப் பொருள்களையும் தேவபாலனின் பாதமலர்களில் வைத்துப் பணிந்தனர்.

ஆண்டு தோறும் கிறிஸ்துவின் பிறப்பை நினைவு கூருகிறோம். கிறிஸ்தவ உலகம் இந்நாளைப்பெரு விழாவாகக் கொண்டாடுகிறது. கிறிஸ்து பிறந்தபோது வானவர்கள், 'உன்னதத்தில் இருக்கிற கடவுளுக்கு மகிமையும், பூமியில் நல்ல மனதுள்ளவர்களுக்குச் சமாதானமும் உண்டாவதாக' எனப் பாடினர்களன்றே! இன்றைய உலகின் நிலை யாது? போர் மேகங்கள் குமுறுகின்றன. படைக் கருவிகள் அசுரவேகத்தில் பெருகி வருகின்றன. மனித குலத்தையே வேரழிக்கும் புதிய படை ஆயுதங்கள் செய்யப்படுகின்றன. கிறிஸ்தவர்களே பல பிரிவாகப் பிரிந்திருக்கிறர்கள். எனவே, கிறிஸ்துவின் செய்தியை தத்துவத்தை எங்களிலனேகர் சரிவர உணரவில்லை என்பது தெரிகிறது. கிறிஸ்து ஒரு இனத்தாருக்கென்றே, ஒரு தேசத்தாருக்கென்றே, ஒரு மதத்தாருக்கென்றே தோன்றவில்லை. உலக மக்கள் யாவரும் ஈடேற வேண்டுமென்பதுதான் அவருடைய தணியாத அவா. ஆகையால் எல்லோரும் கிறிஸ்துவின் குரலுக்குச் செவி கொடுக்க வேண்டும். அவர் மனித உடலெடுத்த இறைவன். இறைவனைப் பற்றி அறிந்தவர், அவரைப் போல வேறொருவர் இருக்க முடியாது.

(15-ம் பக்கம் பார்க்க)




## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

ANANDA MEDICAL HALL TRADE MARK ஆனந்தா 174, SEA STREET, COLOMBO

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும், மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினல் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11.


## பொங்கலன்று கலைவிழா போட்டிகள்

### தமிழரசுக் கட்சிக் கிளை உடுப்பிட்டியில் நடாத்தும்

இலங்கைத் தமிழரசுக் கட்சி அரசியல் விடுதலையில் மாத்திரமல்லாமல் பொருளாதார விடுதலை, சமூகசீர்திருத்தம், கல்வி, கலாச்சாரத் துறைகளிலும் மக்களை ஈடுபடச் செய்யவும், உழைக்கவும் வேண்டுமென்பது அறிந்ததே.

இந்நோக்கோடு எதிர்வரும் தைப்பொங்கல் திருநாளன்று ஓர் கலை விழா நடாத்த உடுப்பிட்டிக்கிளை தீர்மானித்துள்ளது. அவ்விழாவில் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, சங்கீதப் போட்டி, நடனப் போட்டி, நாடகப் போட்டி முதலியன இடம் பெறும்.

பேச்சு, கட்டுரைப்போட்டிகளில் பங்குபற்றுவோர் மூன்று பிரிவாக இருப்பர். 16 வயதுக்குட்பட்டோர் ஒரு பிரிவு, 16 தொடக்கம் 25 வயதுவரை ஒரு பிரிவு, 25வயதுக்கு மேற்பட்டோர் ஒரு பிரிவு ஆகும்.

பேசசும், கட்டுரையும் பின்வரும் விஷயங்களுள் ஒன்ருய் இருத்தல் வேண்டும்.

விஷயங்கள் — 1. சீதனம், 2. சாதி ஒழிப்பு, 3. சமஷ்டி அரசியல், 4. நம் எதிர்காலம், 5. தமிழ் பேசும் மக்கள் பொருளாதார விருத்தி, 6. சிக்கன வாழ்வு, 7. செல்வநாயகம்.

பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டிகட்கு ஒவ்வொரு பிரிவுக்கும், மூன்று பரிசில்களும், சங்கீதம், நடனம், நாடகம் ஒவ்வொன்றுக்கும் மூன்று பரிசில்களும் வழங்கப்பெறும்.

பேச்சு 10 நிமிடங்கட்கு மேற்படாததாயும், கட்டுரை ஆயிரம் சொற்களுக்கு மேற்படாமலும், சங்கீதம், நடனம் 15 நிமிடங்கட்கு மேற்படாமலும், நாடகம் ஒரு மணித்தியாலத்துக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். நாடகம் ஓரங்க நாடகமாயிருத்தல் விரும்பத்தக்கது.

உடுப்பிட்டித் தொகுதியிலுள்ளவர்கள் மாத்திரம் பங்கு பற்றலாம்.

பங்குபற்ற விரும்புவோர் தயவு செய்து 5—1—63க்கு முன் கீழ்க்காணும் விலாசத்துக்கு அறிவித்தல்வேண்டும்.

நா. செல்லையா, காரியதரிசி, இ. த. அ. கட்சி உடுப்பிட்டிக்கிளை, துன்னலை தெற்கு, கரவெட்டி.

## கொழும்பு மாநாடு சீனவுக்கு வெற்றி

### இந்தியத் தலைவர் கருத்து

பிரஜா சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் திரு. அசோக மேத்தா, பம்பாயில் ஒரு கூட்டத்தில் பேசும் போது, அண்மையில் நடந்தேறிய கொழும்பு மாநாட்டை "சீனவின் பலத்துக்கு ஒரு வெற்றி" என்று வர்ணித்தார்.

## அகில இலங்கை தமிழ் மறைத் தேர்வு

### பரிசில்கள் பெறுவோர் விபரம்

சென்ற செப்டம்பர் மாதம் நாற்பது இடங்களில் தமிழ் மறைக் கழகம் நடத்திய அகில இலங்கைத் தமிழ் தேர்விலே பரிசில் பெறுவோரின் பெயர்களைக் கீழே காண்க.

முதற் பரிசிலுக்குத் தங்கப் பதக்கமும் ஏனையவற்றிற்கு வெள்ளிப் பதக்கங்களும் தமிழ் மறைக் கழகத்தின் பதினொராவது திருக்குறள் மாநாட்டில் திருவள்ளுவர் திருநாளாகிய 6-6-63 அன்று வழங்கப்படும். (பெயர்களை அடுத்துள்ள இடங்கள் தேர்வு நடைபெற்ற இடங்களாகும்.) சான்றிதழ் பெறுவோர் விபரம் பின்னர் வெளியிடப்படும்.

#### மேற்பிரிவு

முதலாம் பரிசு: நா. ஆறுமுகம், தெல்லிப்பழை. இரண்டாம் பரிசு: இ. புட்பராணி, சுழிபுரம். மூன்றும் பரிசு: இ. சற்குணராசா, சுழிபுரம். நான்காம் பரிசு: நா. பாலசுப்பிரமணிய ஐயர், முன்னியவளை.

#### மத்திய பிரிவு

முதலாம் பரிசு: த. சச்சிதானந்தன், கல்முனை இரண்டாம் பரிசு: இ. கிருஷ்ணபிள்ளை, களுவாஞ்சிக்குடி. மூன்றும் பரிசு: அ. வேல்நாயகி, யாழ்ப்பாணம். நான்காம் பரிசு: வே. ஹரிதாஸ், மட்டக்களப்பு.

#### கீழ்ப் பிரிவு

முதலாம் பரிசு: சு. கமலநாயகி, யாழ்ப்பாணம். இரண்டாம் பரிசு: கு. தேவசகாயம், மட்டக்களப்பு. மூன்றும் பரிசு: சி. கனகாம்பிகை, யாழ்ப்பாணம். நான்காம் பரிசு: ஆ. கௌரிதேவி, மட்டக்களப்பு.

#### தொடக்கப் பிரிவு

முதலாம் பரிசு: நா. வைத்தியநாதன், கொழும்பு. இரண்டாம் பரிசு: த. நளினு, கீரிமலை. மூன்றும் பரிசு: ச. திரேசா பூமலர், கொழும்பு. நான்காம் பரிசு: வை. சிவாஜி, யாழ்ப்பாணம்.

#### மிகக் குறைந்த வயதினருக்குரிய பரிசில்:

நா. லிங்கேசுவரி, யாழ்ப்பாணம் (பிறந்த தேதி 18—8—55).

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




பி. பரமசிவன், கொழும்பு-14.

கே: சீனன் செய்யும் அக்கிரமத்தை சிவபெருமான் பார்த்துக் கொண்டிருக்கிறாரே ஏன்?

ப: அவர் வேறு என்ன செய்ய முடியும்? இமயத்தில் அவர் வசிக்கும் கைலயங்கிரியைத்தான சீனன் கைப் பற்றி விட்டானே!

ஃ

செ. மகேந்திரன்,
அநுராதபுரம்.

கே: பெண்களைக் காதலிப்பது சட்டப்படி 'குற்றம்' என்கிறேன் நான்! உமது அபிப்பிராயம் என்ன குயுக்தியாரே?

ப: ஆண்களைக் காதலிப்பது மட்டும் சட்டபூர்வமானதாக்கும். காதலுக்கு வேலியமைக்க சட்டத்தால் முடியாதையா!

ஃ

"கேக்கே" அட்டன்.

கே: யாரை நம்ப வேண்டும்? யாரை நம்பக் கூடாது?

ப: யாரை வேண்டுமானாலும் நம்பலாம், சீனனையும் இலங்கை மந்திரிகளையும் தவிர.

ஃ

இம்மானுவல், மூதூர்.

கே: நான் ஒரு சிங்களப் பெண்ணைக் காதலிக்கிறேன். அவளைக் கைவிட மனமில்லை. அவளை மணந்தால்நான் தமிழ்த் தாய்க்குத் துரோகம் செய்து விடுவேனோ என்ற பயமும் உண்டு. தயவு செய்து இதற்கு ஒரு வழி கூறுங்கள்,

ப: உங்கள் காதலியைத் தமிழ்ப் பெண்ணாக மாற்றி விடுங்கள்.

ஃ

மு. கருணாநிதி, ஏழாலை மேற்கு.

கே: உலகிலே கவலையில்லாத மனிதன் யார்?

ப: இதயமற்றவன்.

கே: ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே! தங்கள் அபிப்பிராயம்?

ப: அது ஆண்களுக்கு— ஆவதும் ஆணாலே, அழிவதும் ஆணாலே! இது பெண்களுக்கு.

ஃ

க. தமிழ்த்தாசன்,
கொச்சிக்கடை.

கே: படித்தவன் படியாதது போல் நடிப்பது எப்போது?

ப: படியாதவனுடன் பழகும் போது.

ஃ

இ. ஆறுமுகம், நுகேகொடை.

கே: சீனப் பிரதமர் சூ என்லாயும், பாரதப் பிரதமர் ஸ்ரீ நேருவும், நெருங்கிய சிநேகிதர்களாக இருந்தும், இந்தியா மீது சீனர் படை எடுத்தார்களே? அதே போல் ரஷ்ய பிரதமர், குருசேவ், இப்பொழுது நன்மை செய்த கையால் தின்மை செய்யத் தொடங்கினால் உலகம் என்னவாகும்?

ப: மேற்கத்திய ஜனநாயகத்திடம் சிக்கிவிடும்.

ஃ

ஆனந்தராசா, மாதகல்.

கே: இந்திய சீன யுத்தம் முடிய இன்னும் எவ்வளவு நாள் ஆகும்?

ப: ஐந்து வருடங்கள் என்கிறார் பாரதப் பிரதமர்.

ஃ

"எஸ். கே, எஸ்",
வண்ணார்பண்ணை.

கே: குயுக்தி மாமா! இலங்கை மந்திரி சபையிலுள்ள ஒருவரையும் நம்ப முடியவில்லையே?

ப: நீர் நம்புவது ஒருபுறமிருக்கட்டும்! அவர்களே ஒருவரை ஒருவர் நம்பவில்லையே!

ஃ

செ. பாக்கியநாதன்,
முல்லைத்தீவு.

கே: சிவாஜி கணேசன் வேட்டையாடுவதில்கெட்டிக்காரராமே! அவர் சீனர்களையும் வேட்டையாடினாலென்ன?

ப: வேட்டையாடுவார். ஆனால் அவர்கள் ஸ்டுடியோவுக்கு வரவேண்டுமே!

ந. அரசு, பதுளை.

கே: படித்த மாணவர்கள் சொந்தத் தொழில் செய்வதென்றால் எத்தகைய தொழிலைச் செய்யலாம்?

ப: இரு தேசிய கைத் தொழில்கள் இலங்கையில் உண்டு. ஒன்று எறிகுண்டு உற்பத்தி—மற்றது கசிப்பு உற்பத்தி.

கே: சீன-இந்தியத் தகராறில், இந்தியாவின் நிலையைப் பற்றி கென்னடி என்ன நினைக்கிறார்?

ப: சீனக் கொம்யூனிஸம் இந்தியாவில் வந்து சிக்கிக் கொண்டதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறார்.

ஃ

வீ. ராமலிங்கம், பண்டாரவளை.

கே: விதியை மனிதனால் வெல்ல முடியுமா?

ப: விதி சதி செய்யாதிருந்தால் மதியால் வெல்லலாம்.

ஃ

சி. பொ. ஈழத்துமணி,
யாழ்ப்பாணம்.

கே: குயுக்தியாரே, சீனாவின் திடீர் போர் நிறுத்தம் பற்றித் தங்கள் கருத்தென்ன?

ப: வெடி மருந்தை வீணாக்காமல் நடு நிலைமை நாடுகளைக் கொண்டு காரியத்தைச் சாதிக்க.........

ஃ

ஆர். கணபதி, கேகாலை.

கே: சிறிமா பண்டாரநாயக்கா கூட்டிய உச்சி மகா நாட்டைப் பற்றி என்ன கருதுகிறீர்கள்?

ப: இமயமலைச் சாரல் பற்றிய தகராறைத் தீர்க்க மலை உச்சியிலே உச்சி மகாநாடு கூட்டியிருந்தால் ஒருவேளை வெற்றிபெற்றிருக்கலாம்.

ஃ

க. சுப்பிரமணியம், காரைநகர்.

கே: "உங்கள் கையைக் காட்டுங்கள்" என்றாள் ஒருத்தி, நான், கையைக் காட்டினேன். கையை அவள் பார்த்தபின் "ஏன் பார்த்தீர்கள்? என்ன பார்த்தீர்கள்?" எனக் கேட்டபோது "அது சொல்ல முடியாது" எனக் கூறி மறுத்து விட்டாள். இதன் மர்மம் யாதோ?

ப: "தனரேகை"யைப் பார்த்திருப்பாள்.

திருவாளர்
**குயுக்தியார்**
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

எஸ். கே. வேலு, தெரனியகலை.

கே: இந்தியாவை சீனா ஆக்கிரமிப்பு நடத்தவில்லை, இந்தியா தான் சீனாவை ஆக்கிரமிப்பு நடத்துகிறது என்று நமது இலங்கை கொம்யூனிஸ்டுகளும் சமசமாஜிகளும் சொல்லி வருகிறார்களே, இவர்களை இலங்கை வாழ் தமிழர்கள் இனிமேலும் நம்பலாமோ?

ப: இப்பொழுது நம்பினால்லவா இனிமேலும் நம்பப் போகிறார்கள்!

கே: கல்கண்டு ஆசிரியர் தமிழ்வாணன் அறிஞர் அண்ணாவைத் தாக்கி எழுதுகிறாரே, இதன் மர்மம் என்ன?

ப: அண்ணாவின் செல்வாக்கு ஓங்கி வளர்வதுதான் காரணம்.

ஃ

"கேள்விப்பிரியன்", கிண்ணியா.

கே: புதிதாக மில் வைத்திருக்கும் சிலர், மூதூர் இரண்டாவது எம். பி.யின் வாலைப் பிடிப்பதன் காரணமென்ன?

ப: அவருக்கு வால் வேறு முளைத்திருக்கிறதா?

கே: 'எம். ஜி. ஆரை நீங்கள் ஏன் நல்லவர் என்கிறீர்கள்' என்று ஒருவர் என்னிடம் கேட்டால் நான் என்ன பதிலைச் சொன்னால் அவர் அதிகம் அளக்க மாட்டார்?

ப: பாரதமண்ணைச் சீனன் ஆக்கிரமிக்கிறான் என்ற செய்தி கேட்டதும், பாதுகாப்பு நிதிக்கு ரூ. 75,000 சுளையாகத் தூக்கிக் கொடுத்தாரே! வேறு எந்த நடிகரையா இப்படி வாரி வழங்குவார்? இது ஒன்று போதாதா எம். ஜி. ஆரின் விரோதியை மடக்க......

ஃ

'கிண்டல் பேர்வழி', கிண்டலூர்.

கே: அறுவர் சேர்ந்து மூன்று நாள் குசுகுசுப்பு முட்டை இட்டார்களே! அது குஞ்சானதா? கூழானதா?

ப: ஆக்கிரமிப்பை ஆக்கிரமிப்பு என்றுகூடக்கூற அஞ்சுபவர்களின் குசுகுசுப்பு பிசுபிசுத்துப் போவதில் ஆச்சரியமென்ன?

கே: வேலையற்ற மந்திரிக்கு மாதம் ரூ- 1500 கொடுப்பதைப் போல வேலையற்றோருக்கும் சம்திங் கொடுத்தாலென்ன?

ப: வேலையற்றோர் பிரதமரின் மருமக்களா,என்ன?

எஸ். எஸ். எஸ். பிள்ளை,
ஹாலி-எல.

கே: 16. 12- 62 சுதந்திரனில் சீன தேச படம் தரும் திடுக்கிடும் தகவல்கள் உலக சமாதானத்தை எவ்வளவு தூரத்தில் கொண்டு போய் விடும்?

ப: சமாதானமா? முதலாளித்துவ முறை உலகில் இருக்கும் வரை சமாதானமே சாத்தியமில்லை என்பதல்லவா சீனக் கொம்யூனிஸ்ட் சித்தாந்தம்!

ஃ

அ. கணேஷ், சாவகச்சேரி.

கே: சிங்களம் தெரியாத காரணத்தால் இதுவரை அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் அதிகமானோர் சிங்களவர்கள் எனக் கூறுகின்றார்கள். இது உண்மையா?

ப: உண்மையோ, பொய்யோ! சிங்களவர்கள் அநேகர் சிங்களம் பயில முடியாததால் ஓய்வு பெறும் போது ஒரு சில தமிழர்கள் விழுந்து விழுந்து சிங்களம் படிப்பதல்லவா அதிசயமாயிருக்கிறது!

ஃ

சூ. மரியதாசன், உருத்திரபுரம்.

கே: என்னுடைய நண்பனொருவன் சாராயத்திலேயே தினசரி குளித்து முழுகி வந்தவன், திடீரென சாராயக் கடையைக் கண்டதும் கண்ணெடுத்தும் பார்க்காமல் போகின்றான். என்ன காரணம்?

ப: தண்ணீரில் குளிக்க ஆரம்பித்துவிட்டாராக்கும்!

ஃ

ஐ. தாஜுர், பெரிய கிண்ணியா.

கே: இந்த அரசாங்கத்தின் சட்டதிட்டங்கள்ஒன்றும் எனக்குப் பிடிக்கவில்லை; இத் திட்டங்களை மாற்றியமைக்கும்படி கேட்டிருக்கிறேன் என்று மூதூர் இரண்டாவது பிரதிநிதி மஜீது கூறுகின்றாரே.

ப: ஓகோ! இவர் தன்னை இந்த நாட்டின் பிரதம மந்திரியென்று நினைத்துக் கொண்டிருக்கிறாரோ! இவருக்குப் பிடிக்கவில்லையென்றால் சட்டதிட்டங்களையெல்லாம் மாற்றி விடுவார்களோ?

ஃ

மு. சுப்பிரமணியம்,
மாவிட்டபுரம்-

கே: சுபாஷ் சந்திரபோஸ் இப்பொழுது இருந்தால்...?

ப: இந்தியா மீது படையெடுக்க சீனாக்காரன் கனவில் கூட நினைத்திருக்கமாட்டான்!

## ஆட்சிக் கொடுமைக்கொரு சாட்சி!

—பரிமளா-ராஜதுரை—

சிப்பைத் தலையில் ஏந்தும் சாதி—எங்க
சிங்கார நாடு கொண்ட சேதி—அசல்
வேப்புக் கருங்காயாய்க் கைக்கும்—கவி
வேகம் உணர்வோர் நெஞ்சிற் தைக்கும்

மான்கள் மருண்டு தாவுங் காடு—புற
மதில், உள்ளே எங்கும் நெற்சூடு—பூத்
தேன்கள் வழிந் தொழுகும் 'படுவான்'*—அதைத்
தேடிக் குடிபுகுந்தான் கெடுவான்!

பட்டிப் பளை அருவி நெளிந்து—தமிழ்
பாடிக் கொண் டோடிவரும் வழிந்து—அணை
கட்டி மறிக்கத் திட்டம் முடிந்தார்—அக்
'காருண்யரும்' வீழ்ந்து மடிந்தார்

நெய்யுந் தயிருந் தரும் மாடு—கூடி
நிரையாக மேய் பட்டிக் காடு—அங்கே
கொய்யுங் கதிர்கள் காவி முன்னம்-தோள்கள்
கொண்ட 'வடு' எம் குலச் சின்னம்

வேப்போடு பிள்ளையாரைப் பிடுங்கி—வீசி
வெள்ளரசி நாட்டியநாட் தொடங்கி—தமிழ்
காப்பாற்ற எத்தனையோ கட்சி—கூட்டைக்
கலைவாட விடுமோடா, பட்சி...?

அம்மானைப் பாட்டொலித்த வாடி—எங்கும்
றவ்வாணங் கொட்டுகிறான், கூடி—வள்ளிப்
பெண்மானைச் சிறைமீட்ட வேலும்—கூடப்
பேசாதோ.. இந்தக் கலி காலம்?

கண்ணான கண்ணிழந்தா லென்ன—செழும்
பொன்னான பெண்ணிழந்தா லென்ன—நம்
மண்ணான மண்ணிழந்து விட்டோம்—தாய்
மடியைப் பறிகொடுத்துக் கெட்டோம்

போச்சுது! போச்சுதெங்கள் பூமி—பண்டா,
பொடிநோனா வோடப்பு காமி—நீர்ப்
பாய்ச்சி விதைத்ததுக்குக் காட்சி—ஒற்றை
ஆட்சிக் கொடுமைக் கொரு சாட்சி!

* 'படுவான்'—மேற்குக்கரை.

தொலைபேசி 693. HIRATA தந்தி "சேகரன்"
உறுதியான
நைலோன்,குறுலோன்
நூல்களும்,
வலைகளும்



கிடைக்குமிடம்:
சேகரம் & சன்ஸ்
74, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகமே சேவைகளிற் சிகரமானது

## இறுதிவரை தியாகம் செய்து இதயங்களில் புகுந்தவர் இயேசு பெருமானே

**சத்தியத்துக்காகப் போர் புரிவோம், நாங்களே தேசத்தலைவர்கள், மார்க்க அனுசாரிகள் என்றெல்லாம் தம்பட்டமடிப்பவர்கள் தங்கள் நலனுக்காகவே வாழ்பவர்கள். பொது நோக்கங் கொண்டவர்களல்லர். பணிவுடைமைக்கும், சேவைக்கும் சிகரமாயமைந்த தியாகம், உலகத்திலேயே தலை சிறந்து விளங்குவது கிறிஸ்து பெருமானின் வாழ்விலேதான். ஒரு மனிதன் உயரிய தியாகம் செய்யும் போது அதைப் போற்றிப் புகழுவதனாலேயே சிறுமை அடைந்துவிடுகிறான். தனது மகிமையைத் துறந்து சிறந்த தியாகத்தை இறுதிவரை செய்தவர் இயேசு பெருமானே.**

'நாவிலினிமையா நற்சிகவாய்
நல்ல யேசு பெயர் உருவாய்
நாடி வந்த பெருநாளே
நத்தார் திரு நாள்'

பூவுலக மக்களெல்லாம் பாவ நிலையில் அமிழ்ந்து கிடக்க மன்னுயிரைக் காக்க வென்று இயேசு பெருமான் விண்ணிருந்து மண்ணுக்கு வந்துதித்த சத்தியத்தை நினைவூட்டும் திருநாளே நத்தார் பெருநாள். இத் திருநாளை நினைக்கும் போதெல்லாம் மனதிற் கிளம்பும் சிந்தனைகள் பற்பல.

"கந்தைத் துணியில் சுற்றினார்; குழந்தை தனை நைந்த புல்லில் கிடத்தினார். விந்தைக் கோலமிதென்ன!" என பக்தன் ஒருவன் பாடியுள்ளான். "தந்தை மெய் மைந்தன் கொண்ட தாழ்மையின் மாண்பிதென்ன?" என்று இப் பக்தன் தொடர்ந்து பாடிய கேள்வியில் தான் இந்த விந்தையின் கருத்தை நாம் காணலாம். இக் கருத்தைக் கண்டு விளங்கிக் கொள்வது மாத்திரம் போதாது. இதை உணர்ந்து மனதிற் பதித்துக் கொள்வதே அன்றும் இன்றும் நான் மக்களாகிய நம்மைப் பொறுத்த கடமையாகும்.

மானிட வர்க்கத்திலுள்ளவர் எவரும், எக்காலத்திலும் எவ்விடத்திலும் ஏதோ தங்கள் வழியில் ஆசித்துத் தேடும் நித்திய மெய்ப் பொருள் எவ்வாறு தெய்வீகத்துடன் மனுஷீகத்தையும் எடுத்துக் கொள்ளும்; பக்தர் நெஞ்சில் அரூபியாய் உறையும் சொரூபி, அறிவின் மூலம் தேடுவோருக்குத் தோன்றியும் மறைந்தும் கொண்டிருக்கும் திருவிளையாடன் எவ்வாறு மனிதனும் உலகில் தோன்றிவாழ்வான், என்றெல்லாம் மக்கள் இன்றும் தான் கேட்டுக் கொண்டிருக்கின்றனர். இதற்கெல்லாம் ஒரே பதிலாக, எக்காலத்துக்கும், எத்தேசத்தருக்கும், அறிஞரும் அறிவிலிகளுக்கும், பாதகருக்கும் பேதையருக்கும், வறிஞருக்குச் செல்வந்தருக்கும், பெரியவருக்கும் சிறியவருக்கும், அனுபவ சான்றாக கடவுள் கொடுத்துள்ள ஒரே வெளிப்படுத்தல் நத்தார் காலத்தில் நமக்கு நினைவூட்டப்படும் கிறிஸ்துவின் முதல் வருகை.

"ஆதியிலே கடவுள்" என்றதும் கடவுளை மறுக்காத எவரும் ஏற்றுக் கொள்ளும் உண்மை. இதை "ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது" என்று கீழைத் தேசங்கட்கும் பிரத்தியேகமான பொருத்தம் வாய்ந்ததெனக் கருதப்பட்டும் பாராட்டப்பட்டும் வருகிற சுவிசேஷத்தை ஆக்கிய



வணக்கத்துக்குரிய
ஜே. ஜே. இரத்தினராசா

யோவான் முனிவர் குறிப்பிட்டனர். "அந்த வார்த்தை மாம்சமாகி.... நமக்குள்ளே வாசம் பண்ணினார்" என்றது கிறிஸ்தவ விசுவாசத்தைத் தழுவுவோர் விசுவாசிக்கும் ஆதார சத்தியம்.

நாம் முன் குறித்தபடி, கடவுளை எவருக்கும், எவ்வித பேதமுமின்றி, அனுபவ மூலம் உணர்ந்து கொள்ளும் வகையில் முற்றும் வெளிப்படுத்திய கிறிஸ்துவின் பிறப்பை நினைக்கும் பொழுதெல்லாம் அவரை நமக்கு மனச் சாந்தியும், அனுதாபமும், உடன் மக்களுடன் சமாதான வாழ்வும் சகல உலக ஆசிர்வாதங்களும் தருகிறவராய் சந்திக்க

ஆண்டவன் என்று நாம் அழைக்கும் கிறிஸ்து உண்மையில் நமது நாளாந்த வாழ்வில் நம்மை ஆண்டு கொள்கிறார் என்பதை நமது செயல்கள் மூலம் காட்டுவது தான் நமது முக்கிய கடமையாக வேண்டும்-வேண்டியது மாத்திரமல்ல மக்களாகிய நமது கடமை.

கிறிஸ்துவின் பிறப்பை நாம் திரும்பவும் நினைவூட்டும் இக் காலத்தில். அன்று ஈராயிரம் ஆண்டுகட்கு முன் அவர் பிறந்த பெத்தலகேம் ஊரில் தோன்றிய தாரகையை காவியத்திலும் ஓவியத்திலும் நினைவூட்டும் இக் காலத்தில், ஆண்டவர் இயேசுவைக் குறித்துக் காட்டி நிற்கும் இத் தாரகையை முப்புரிகளால் திரிக்கப்பட்ட ஒரு பொன்னூலில் மக்கள் கிறிஸ்து பெருமான் வந்து உறைய இடம் தேடும் தங்கள் உள்ளமாகிய மார்பில் தொங்க வைக்க வேண்டுமென ஆசிப்பது இன்று நமது கடமை. இந்த முப்புரிகளும் இரட்சா பெருமானாகிய கிறிஸ்துவில் உருவெடுத்து, உலகில் எடுத்துக் காட்டாகத் தோன்றிய மூன்று பெரும் உண்மைகளுக்கு, இன்று நம்முலகத்தில், விசேடமாக நம் தேச மக்களுள், நமது இல்லங்களில், தனித் தனியே நம் மொவ்வொருவரிலும் திகழ வேண்டிய மூன்று முக்கிய சிறப்புக் குணங்களுக்கு முன்மாதிரியாயிருக்க வேண்டியவை. இவை, பணிவு, சேவை, தியாகம். இம் மூன்று சற்குணங்களும் கிறிஸ்துவின் பிறப்புச் சம்பவத்தில் ஒன்றோடொன்று இணைபிரியாது கலந்து அவரில் உருவெடுத்துக் காட்சியளிப்பவை.

"தந்தை மெய் மைந்தன் கொண்ட தாழ்மையின் மாண்பு" என்று நாம் முன் குறித்த பக்தன் பாடியதில் சர்வஞானமும், வல்லமையும் மகிமையும் நிறைந்த கடவுள் தம்மைத் தாழ்த்தி மானிடர்க்குத் தம்மை வெளிப்படுத்தச் சித்தம் கொண்டவர் என்ற உண்மை புலனாகிறது. இன்றைய மக்களாகிய நமக்கு மாத்திரமல்ல, நமது நாட்டில் இன்று நமக்கிருக்கும் தேசிய கடமையில் மாத்திரமல்ல, என்றைய மக்களுக்கும் வரும் காத்திரமான கருத்து இது தான்.

சத்தியப் போரின் முன்னணியில் வெற்றியுடன் நிற்பவன் பணிவுயெனும் இரகசிய ஆயுதத்தைத் தரிக்க வேண்டும். தாழ்மையுடன் நாம் ஈடுபடும் சத்தியப்போர் நம்மைத் தானாகவே சேவை செய்ய ஏவி விடும். "சேவை செய்யும் தாசன்" என்று இயேசு பிறப்பதற்கு முன், தீர்க்கதரிசிகளினால் அவர் குறிப்பிடப்பட்டார்.

அவர் உலகத்தில் பிறந்து சீவித்த காலத்திலும், "ஊழியம் செய்யவே வந்தேன்" எனக்கூறியது மாத்திரமல்ல, அவ்வாறே எங்கும் சுற்றித் திரிந்து நன்மை செய்தார்.

சத்தியத்துக்காகப் போர் புரிபவர்கள், தேசத்தலைவர்கள், மார்க்க அனுசாரிகள், தலைவர்கள், என்றெல்லாம் தங்களையே அழைத்துக் கொண்டு ஊழியம் செய்யவல்ல—ஊழியம் கொள்ள முன் வந்து, சத்தியத்தையும் நேர்மையையும் வளர்க்கவல்ல—[illegible] அழிக்க முன் வரும் தலைவர

([illegible] பக்கம் பார்க்க)

வெளிநாட்டிலிருந்து

இப்போதுதான்

இறக்குமதிசெய்யப்பட்டுள்ளன!

* பக்கிங்ஹாம் ஸ்பிரிங் கட்டில்கள்
(சிறந்த இங்கிலிஷ் தயாரிப்பு)

* சாதாரண - மடிப்புடைய
கல்வனைஸ்ட் தகடுகள்
(இங்கிலிஷ், ஜப்பானிய தயாரிப்புகள்)

உங்கள் தேவைகளை முன்கூட்டியே
பதிவு செய்து வையுங்கள்..

சென்ற் அந்தனீஸ்
ஹாட்வெயார் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்,
516, ஸ்கின்னேர்ஸ் றேட் தெற்கு,
கொழும்பு-10.

# கவிதைப் பூங்கா

## தூயவன் நாமம் வாழ்க!

—"தமிழ் மாறன்"—

அன்பொடு அறத்தைப் பேணி
அவனியில் அமைதி காத்துக்
துன்பங்க ணீங்கி நெஞ்சில்
தூயவே யெண்ணி யென்றும்
தன்னல மறந்து மக்கள்
தமக்குறு துயரம் மாற்றி
மண்பதை வாழ வந்த
மன்னன் நம் யேசு போற்றி!

உலகெங்கு மிருளைப் போக்கி
உள்ளத்தில் மாசு நீக்கி
கலகங்கள் தவிர்த்து எங்கும்
கருணையே வளர்த்து மாந்தர்
கலங்கிடும் நிலைமை மாற்ற
கண்ணீரைச் சிந்தி மாற்றுர்
சிலுவையிற் செத்த மேலோன்
சேவடி சரணம் நாங்கள்!

அவரிலை யென்றால் மேற்கில்
அருளிலை அன்பு மில்லை
தருமத்தின் ஆட்சி யில்லை
'தட்டுங்கள் திறக்கும்' போன்ற
முது மொழி கிடைப்பதில்லை
மூடர்க்கு மன்னிப் பில்லை
கதியிலை மானி டர்க்கு
கவலைகள் தீர்வதில்லை

சூரிய ஒளியின் வெப்பம்
குளிர் பனி நீக்கல் போல
மாயையைப் போக்கி மக்கள்
மனதில் ஒளியை யூட்டி
நீதியைக் காக்க வேண்டி
ஆவியைத் தந்த ஐயன்
பூமியிற் பிறந்த நாளில்
பூவினைச் சொரிந்து நிற்போம்!

தொல்லைகள் தீர்க்க வந்த
தூயவன் நாமம் போற்றி!
கல் லையுமுருக வைக்கும்
கருணையின் வடிவம் போற்றி!
எல்லையில் பாவம் போக்கி
இரட்சிக்க வந்த எங்கள்
வள்ளலே! போற்றி! உந்தன்
வழி எமக் கின்னல் தீர்க்கும்!

## மீண்டும் பிறவும்!

—ரீ. பாக்கியநாயகம்—

மன்னுயிர் தன்னைக்காக்க
மனத்திலில் சித்தம் கொண்டு,
அன்னையாம் மரியின் சூலில்
அவதரித்திட்ட பாலா,
இன்னிலம் சிறக்க வந்த
இயேசுவே இறைவா போற்றி:
மன்னியும் அடியார் பாவம்
மனத்திலில் நினையாதேயும்.

இத்தலம் புகழ அன்று
இரவினில் மாட்டுக் கொட்டில்
பெத்தலை ஊரில் வந்து
பிறந்திட்டாய் பாவம் தீர்க்க;
சத்திய வாழ்வு வாழ்ந்து
சகலரும் சமமே என்றாய்;
புத்திகள் பல மொழிந்தாய்;
பூதல விளக்காய் நின்றாய்.

காலமோ இன்று மாறி
காரிருள் எங்கும் தோன்றி,
ஞாலத்தில் நேர்மை, நீதி
ஞானமும் புதைக்கப்பட்டு,
சாலமும் இருளாய்த்தோன்றும்
சாமத்தில், இயேசுநாதா,
பாலகா, மீண்டும் நாட்டில்
பலமுறை பிறக்க வாரும்.

நீதியை நாட்டும் என்றும்
நிலைக்கட்டும் உரிமை, வாழ்வில்,
சாதிகள் பிரிவு மாறி
சகலரும் சோதரராய்,
மேதினி தன்னில் வாழ
மீண்டுமே கிருபை செய்யும்;
ஆதியாம் சோதி இயேசு
ஆண்டவா பிறவும் மீண்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமைகள் இழந்து நிற்கும் மலையக மக்கள்

## கல்வி நிலைக்கு ஆபத்து

———*———

## பொதுநலம் புரிவோர் பேசாதிருப்பதேனோ?

தேயிலை—ரப்பர் தோட்டங்களில் வாழும் தமிழ்ப் பெருங்குடி மக்கள் குடியுரிமை இழந்தனர்; வாக்குரிமையைப் பறிகொடுத்தனர். அத்தோடு மனித உலகுக்கே விழியான கல்வி உரிமையையும் இழந்துள்ளனர். இதை எண்ணும்—காணும்—உணரும் மனித உள்ளங்கள் உண்மையிலேயே இரத்தக் கண்ணீர் வடிப்பது இயற்கை.

மலையக மக்களின் குடி உரிமை — வாக்குரிமையைப் பற்றிப் பேசுவோர் அவசியம் அவர்களின் ஆருயிர் மக்கட் செல்வங்களின் கல்வி உரிமையைப் பற்றி அக்கறை காட்டவேண்டும். இக்கருத்தினை வலியுறுத்துவதும், மலையக மக்களின் கல்வி நிலையினை வரையறுத்துக் காட்டலுமே இங்கு முக்கிய நோக்கமாகும்.

### தோட்டப் பள்ளிகள் தோன்றக் காரணம்

அன்றைய நாட்களில் தேயிலைத் தோட்டத்திலே வளர்ந்த தொழிலாளர்களின் பிள்ளைகள்-விளையாடும் பாங்கில் அங்குள்ள தேயிலைக் கொழுந்துகளைக் கிள்ளி எறிந்தனராம். அச்செடிகளை ஒடித்தனராம். இன்னும் எத்தனையோ திருவிளையாடல்களை எல்லாம் தேயிலைச் செடிகளின் பால் காட்டினராம். இதனைக் கண்டுப்பொறுக்க இயலாத "வெள்ளைத் துரைமார்"கள்-போட்ட திட்டத்தின் விளைவே-தோட்டப் பள்ளிகள். இப்பள்ளிகளின் முழுநோக்கம்-தொழிலாளர்களின் பிள்ளைகளால்-தேயிலைச் செடிகளுக்குத் தொந்தரவோ-தீங்கோ வராமல் கண்காணித்துக் கொள்வதேயாகுமே அன்றி, அவர்களுக்குக் கல்வியறிவைப் புகட்ட வேண்டுமென்பதல்ல. இதற்கு அன்றைய—அவர்களின் தோட்டப் பாடசாலைகள் பற்றிய திட்டமே தெளிவு. இவ்வமைப்பு இன்னும் மாற்றவோ, திருத்தவோ படவில்லை. இவ்வுண்மையினைக் கல்வியறிஞர்களும், கல்வி நெறியாளர்களும்— ஏன் தொழிலாள மக்களின் பால் நாட்டங் கொண்டவர்களும் நன்கு உணர்வர். இருந்தும், நம் தோட்டப் பள்ளிகளின் நிலை-அங்கு கற்பிக்கப்படும் கல்விநிலை-மாறியதா? 'இல்லை' எனில் ஏன் உரியவர்கள்-பொது நலம் புரிவோர் ஈடுபடவில்லை? அது அவர்கட்கே வெளிச்சம்.

### கண்டியில் தேசியக் கல்வி மாநாடு

ஆனாலும், மலையக மக்களின் எல்லா நலங்களிலும்—நல்லுரிமைகளிலும் ஆர்வமும் அக்கறையுங் கொண்ட நம் இளைஞர்களின் செயலைக் குறிப்பிடவே வேண்டும்.

மலையக இளைஞர் மன்றம் (ம. ந.வா.சங்கம்) இவ்வாண்டின் முற்பகுதியில், கண்டியில் தேசியக் கல்வி மாநாடு கூட்டியது. அதில் மலைநாட்டின் முக்கியப் பகுதிகளிலிருந்தும்—அறிக்கைகள் தரப்பட்டன. அவை பெருமளவில் தோட்டப் பகுதிகளில் வளரும் பிள்ளைகளின் கல்வி நிலை எத்துணைப் பிற்பட்டுள்ளது என்பதை அழகுற எடுத்துக் கூறின.

"கல்வி மாநாடு", அத்தருணம் வெளியிடப்பட்ட கல்விக்குழுவினரின் ஒருதலை நோக்கான அறிக்கையையும் அறிமுகப் படுத்தப்பட்ட 'அநியாயமான' புதுத்திட்டங்களையும் அலசி ஆய்ந்து கண்டித்து, உரியவர்களிடம் முறையிட்டது. அதன் எதிரொலி பாராளுமன்றத்திலும் கேட்டது. பயன்......?

இனி, 1964ம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து தோட்டப் பிள்ளைகளின் கல்வி நிலை பெரிதும் பாதிக்கப்படும். எப்படி? ஒவ்வொரு பட்டணத்திலும் (குறிப்பாக மலைப் பகுதிகளில்) அதனைச் சுற்றி இரண்டு மைல்எல்லைக்குள் வசிக்கும் (பிள்ளைகள்) முதற் கண் அங்கங்குள்ள கல்லூரிகளில் சேர்க்கப்பட வேண்டும். மேலும் அப்படியே தோட்டப் பிள்ளைகளைச் சேர்ப்பினும் ஆறும் வகுப்புகளுக்கு மேற்கொண்டேயிடம், அதற்கும் குடியுரிமை குறுக்கே நிற்கின்றது. இந்நிலையில் மலையகத்தொழிலாளத் தோழர்களின் குழந்தைகள் எவ்வாறு ஒளிபெற முடியும்? உயர வழிகள் எங்கே உண்டு?

இதே நோக்கில் தோட்டங்களைசுற்றியும் சூழ்ந்தும்-இடைப்பட்டுமுள்ள நாடுகளில் (கிராமங்களில்) வாழும் நம் சிங்களச் சகோதரர்களின் கல்விநிலை மின்னல் வேகத்தில் முன்னேறி வருவதைநாம்-தோட்ட மக்கள்-கண்கூடாகக் காண்கின்றோம். "அவர்களின் பிள்ளைகள் கல்வியறிவில் உயர்ந்துள்ளனர். ஆனால் நமது செல்வங்கள்?" என்று ஏக்கப் பெருமூச்சு விடுகின்றோம்.

நம் இலங்கையில் ஏனைய பகுதிகளில் வாழும் ஒரு சாதாரண பிள்ளை படிக்க உள்ள வசதி-அதற்கான செலவு எல்லாமே பெருமளவு வாய்ப்பாக அமைந்துள்ளது. தோட்டப் பகுதியில் வாழும் ஒரு தொழிலாளியின் மகன்-ஆறும் வகுப்புக்கு மேல் படித்து முன்வருவதற்கு மாதாமாதம் சராசரி குறைந்தது ஐம்பது (50) ரூபாயாவது செலவாகின்றது.

—தமிழோவியன்—

தோட்டங்களில், மற்றப் பகுதிகளில் கிராமங்களில் (நாடுகளில்) இருப்பது போல் கல்லூரிகளோ-உயர் நிலைப் பள்ளிகளோ இல்லாமையே இதற்குக் காரணம்.

நாமும்—நம் வழிகாட்டிகளும் புத்தப் பிக்குகள் சிங்கள மக்களுக்குச் செய்த—செய்யும் கல்வித் தொண்டைப் பாராட்டிப் பின்பற்றவே வேண்டும். இலங்கையில் கிறிஸ்தவப் பாதிரிமார்களும்— அமைப்புகளும்—ஆற்றிய கல்விப் பணியைப்பின் பற்றியே பிக்குகளின் பணியும் அச்சமூக மக்களுக்குப் பயனுற அமைந்துள்ளது. எவ்வாறு......?

மலைகளின் மத்தியிலும் — ஊடேயும் — தோட்டங்களை இணைந்தும் இலங்கும் 'நாடு'களில் வாழும் சிங்கள மக்களிடையே கல்வி மணம் கமழச் செய்த பெருமை பிக்குகளையே சாரும். வசதிகள் குறைந்த நிலையில் ... ஞானம் சாற்ற நுழைந்த—முன் வந்த-புத்தபிக்குகள் தாங்கள் தங்கியுள்ள 'பன்சாலை'களில் (கோயில்களில்) வகுப்புக்களை ஆரம்பித்துத் தாங்களே நடத்தினர்.

பின்னர் துணையாக ஆசிரியர்களை நியமித்தனர். கல்வி என்பதே எதற்கு? என்னும் நிலையில் இருந்த குடிகளுக்கு அதன் சுவையினை— இன்றியமையாச் சிறப்பைச்செயல் வழியே காட்டினர்.

நாட்கள் ஆக ஆகப் பள்ளிகளைப் பெருக்கினர். அதற்கான பணத்தைத் தாங்களே முன்நின்று முழுமுயற்சியுடன் பல்வகையிலும் பல சிரமத்துடன் திரட்டினர்.




திறமையான முறையில் கல்விக் கூடங்களைக் கட்டி இன்று அவையனைத்தும் அரசினரின் ஆதரவுடன் பெரிய கல்லூரிகளாக— ஏன்? பல்கலைக் கழகத் தகுதி கொண்டவையாக இயங்கத் துணை நின்றனர். இன்னும் கல்வித் தொண்டு புரியும் தன்மையிலே நாட்டுப் புறங்களில் (மலையகத்தில்) உள்ளனர்.

இதனைத் தொழிலாளர் நலங் காப்போர் இதயத்திற் கொண்டு இனியாவது கல்வி நலம் காக்க முனைய வேண்டும்.

### வருமானம் குறைவு எனினும் கல்வி அதிகம்

இன்று தோட்டத் தொழிலாளியின் மாத வருமானத்தை விட நம் சகோதரச் சிங்களத் தொழிலாளர் (நாட்டில்-கிராமத்தில்- வசிப்பவர்) அடையும் வருமானம் குறைந்தது தான். ஆனால் அவர்களின் குழந்தைகள் கல்வியறிவில் கொண்டுள்ள நிலையைத் தமிழ்த் தொழிலாளியின் பிள்ளையின் திறனோடு ஒப்பிடும் போது— நம் தலை குனிகின்றதே ஏன்?

அவர்கட்குச் சிறு சிறு கிராமங்களில் கூட (இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் தான்) நல்ல கல்வி கற்கும் வாய்ப்பும் இடமும் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் நம் தொழிலாளரின் பிள்ளைகட்கோ அப்படி இல்லை.

ஒரு பாட்டாளி தனது பிள்ளை உயர் கல்வி கற்க வேண்டின்; அவன் பட்டணத்திற்குத் தன் பிள்ளையை அனுப்ப வேண்டும். அவ்வாறு செய்யும் பொழுது அவனுக்கு மாதா மாதம் ஆகும் செலவு என்னவென்பதை அறிய வேண்டும். இதனை அறிந்து விட்டால் கல்வி நிலை இழ் மட்டத்தில் கிடப்பது தெளிவாகும். மர்மம் வெளிப்படும். மனிதயனமும் கலங்கும்.

### கல்வி வளரக் காணும் வழிகள்

எனவே, இத்தகைய இழிவான நிலையை இன்னும் வளரவிட்டு வாய்மூடி இருத்தல்— மலையக மக்களின் எதிர்காலத்திலேயே கெட்ட 'வடு'வை ஏற்படுத்தும். இதை உணர்ந்த பெரியவர்கள் — தலைவர்கள் மறக்கவொண்ணாத் துணிவுடன் செயல்படட்டும். 'அதற்கு என்ன வழி?' என்பது எழுப்பப்படின் இதோ பதில்.

இன்று— மலையகந்தே வாழும் தமிழ்ப் பெருங் குடிகள் அநேகர் ஓரளவு பொருளாதார வளமுடன் உள்ளனர். அவர்களிடம் அவர்களின் இரத்தத்தில் உருவான இளஞ் சந்ததியார்களின் வளர்ச்சிக்கு— வாழ்வுயர்வுக்கு வாய் திறந்து கேட்டால் போதும் வாரி வாரி வழங்குவார்கள்.

அத்தோடு தோட்டங்களில் ஆண்டுகள் தோறும் கொண்டாடப்படும் ஆடிவேல் (ஆடிப்பூசை) விழாக்களுக்கு அளவுகடந்து, ஆறுயிரம், ஏழாயிரம் என்று போட்டி போட்டுக் கொண்டு செலவிடப்படுகின்றது. இத் தொகையில் அரைவாசியைக் கல்வி நிதிக்குக் கேட்பின், அன்போடு அள்ளிக் கொடுப்பர். அந்த அளவு அவர்களின் நெஞ்சங்கள் தெளிவுற்றுள்ளன.

செல்வம்படைத்த தொழிலாளர் தலைவர்கள் என்போர் 'அடிபிடி' வம்புகள் தீர்ப்பதிலும்— பிறவிலும் மட்டும் மனங்கொண்டிருக்காமல் அவசியமான கல்வித் துறையிலும் ஆர்வம் காட்டுமாறு அன்புடன் கேட்கின்றோம்.

வீடு நிறைய விளையாடும் பிள்ளைகளின் வருங்காலப் பாடு— வாழ்வு எத்தகையது என்பதற்கு வழி காட்டுங்

(13-ம் பக்கம் பார்க்க)

## ஏனிந்த வேஷம்?

—ஈழக்குமார்—

மனிதர்கள் உரிமை தினமாம் அதனுயர்
மாண்பினை விளக்கக் கூட்டங்கள் கூட்டிய
மனிதரே முதலில் இந்தநம் நாட்டில்
மனிதருக் கு(உ)ரிமை எத்தனை உண்டு?

ஃ ஃ ஃ

தம்முழைப் பிநது ஈழத்தைக் காக்கும்
தீரராம் மலையக மக்கள் தம்வாழ்வில்
இம்மியும் உரிமைகள் உண்டா கூறிடும்;
இதுவா மனிதர் உரிமையின் தத்துவம்?

ஃ ஃ ஃ

ஒட்டிடும் உரிமையை பறித்து அவர்
ஊரற்ற கூட்டம் எனநீக்கி வைத்து
திட்டினீர் சட்டங்கள் துரத்திட எண்ணி!
திருமிகு உரிமை காத்திடல் இதுவா?

ஃ ஃ ஃ

உழைத்திடும் மக்கள் பிள்ளைகள் அறிவை
உயர்த்திடும் கல்வி உரிமையைப் பறித்து
பிழைத்திடும் வேலை வாய்ப்புகள் நீக்கிப்
பேதங்கள் வளர்த்தீர்; இதுவெந்த உரிமை?

ஃ ஃ ஃ

மொழியினில் பேச்சில் தனிமனி தனுக்கும்
முழுமையாய் நாட்டில் உரிமைகள் உண்டெனும்
வழியினை அமைத்த சாசனக் கொள்கை
வாழுதா இங்கு? சிறிதெண்ணிப் பாரும்!

ஃ ஃ ஃ

பெரும்பான் மையர்போல் சிறுபான் மையர்க்கும்
பேதமிலா நல உரிமைகள் உண்டெனும்
பெருமையைக் கூறும் சாசன உண்மையை
பேணிடா உமக்கு ஏனிந்த வேஷம்?


## நல்லறிஞர் புகழும்

சித்திரக் கலண்டர்

ரூபா 1-73 மட்டுமே

இவர்களை நாளாந்தம்




கலண்டரில் சந்தியுங்கள்

லீலா ஸ்டோர்ஸ்

கொழும்பு 11. போன்: 5924/7452


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தித்து வந்தவை

காலைகண்டன்

தேச சஞ்சாரம் புறப்பட்டுச் சென்ற அம்மானைத் தொடர்ந்து நானும் சென்றேன். அம்மாடி இனிமேல் அந்த மனுசனோடே அலையிற வேலை எனக்கு இந்த ஜென்மத்திலே வேண்டவே வேண்டாம். ஆள் வாட்டசாட்டமாக உருட்டுச்சட்டி பொம்மை மாதிரி இருந்தாலும் படுபொல்லாத ஆள் இந்த அம்மான்.

உடல் பெருத்துவிட்டால் ஆட அசைய அங்கங்கள் இடம் கொடுக்காது என்று சொல்லுவார்கள். ஆனல் இந்த அம்மான் விஷயத்தில் அத்தனையும் பொய்யாகி விட்டது. உடம்பு மெலிந்து ஒல்லியாகவுள்ள என்னல் கூட அம்மானின் நடைக்குச் சரிக்கட்ட முடியாது போய் விட்டது.

நான் ஒரு எட்டு வைப்பதற்குள் அவர் பத்தடி முன்னடி ஓடி விடுவார். புகமுடியாத இடங்களுக்கெல்லாம் புகுந்து, பெற முடியாத அந்தரங்கச் செய்திகளையெல்லாம் தேடிப்பிடித்து விடுகிருரே! இந்தப் பொல்லாத அம்மானுடன் 'புறப்பட்டுச் சென்ற என்பாடு திண்டாடித்தினற வேண்டியேற்பட்டது.

இனிமேல் எந்த ஜென்மத்திலும் அம்மானுடன் செய்தி வேட்டைக்குப் புறப்படுவதேயில்லை என்று தீர்மானித்துவிட்டேன்.

★

வல்வெட்டித் துறையில் ஒரு சுமாரான வீட்டுக்கு முன்னர் ஒரு விலையுயர்ந்த மோட்டார் ஒன்று வந்து நின்றது. இரவு வேளைதான்; வெளிச்சம் சற்று மங்கலாக விருந்தபோதிலும் மோட்டாரை விட்டு இறங்கிய உருவத்தை அவதானிக்க முடிந்தது. அம்மான் ஓடோடி என்னிடம் வந்து, டேய் காலகண்டா அங்க பாரடா ...... நமது இலங்கை மந்திரி சபை உறுப்பினர் ஒருவரை என்று காட்டினர். மின்னல் முழங்காமல் மழைவந்த மாதிரி வரவேற்போ வைபவமோ, மேளதாளமோ எதுவுமின்றி மந்திரி வந்திருக்கிருரே.........அதுவும் இவர் வீட்டுக்கு ஏன்?

இப்படி விடயமறிந்தவர்களெல்லாம் கேட்கத்தான் செய்கிருர்கள். நோயால் பீடிக்கப்பட்டவன்தான் வைத்தியசாலையை நாடுவான் மந்திரிக்கும் ஏதோ நோய் கண்டுள்ளதுபோலும் .........அதனுல்தான் வைத்தியசாலைகளைப் பார்வையிடுவது போல் வல்வெட்டியில் உள்ள பல பெரிய புள்ளிகளின் வீட்டை 'அடிக்கடி' நாடுகிருர்.

★

கோப்பிக் கொட்டைக்கு இப்ப ஏற்பட்டிருக்கிற கிராக்கி இருக்கிறதே! அது கோப்பி உலகத்தில் தோன்றிய காலத்திலே இருந்து ஏற்படாதது.

திறமான கோப்பிக் கொட்டை மார்க்கட்டில் கிடைப்பதேயில்லை. ஆனல் ஆகக் குறைந்த ரகம் றுத்தல் விலை 8/- ரூபா.

இதே வேளையில் கோப்பித் தூள் என்னமோ சுலபமாகக் கடைகளில் கிடைக்கிறது. ரயிலில் பிரயாணம் செய்பவர்களுக்கும் கல்வோயா, மாஹோ, பொல்காவலை ஆகிய சந்திகளில் இரவுவேளைகளில் 15 சதத்துக்கு ஒரு கிளாஸ் காப்பி எப்போதும் போல் கிடைக்கிறது. கோப்பிக்கொட்டை தாராளமாகக் கிடைத்த காலத்திலும் சரி, கிடைக்காத இக்காலத்திலும் சரி இந்த ரயில்வே காப்பி 'குணத்திலும் மணத்திலும்' என்றும் போல் இன்றும் தன்னிகரற்று விளங்குவதற்கான காரணம் பலருக்குத் தெரியும்.

புளி கிடைக்காத இந்த நாட்டில் புளியங் கொட்டைக்குப் பஞ்சமில்லையல்லவா? புளியங் கொட்டைகளே கோப்பிக் கொட்டைகளாக மாறிவிடுகின்றன.

புளியங் கொட்டையுடன் கடலையும் பெரிய அளவில் சேர்க்கப்பட்டுத்தான் இந்தக் கோப்பித் தூள் தயாரிக்கப்படுகிறதாம்.

★

4 மூட்டை அசல்—திறமான கோப்பிக் கொட்டை. அடடா! கேட்கவே உடம்பு என்னவோ செய்கிறதே. வட பகுதி பொலிஸ்காரர்களால் கடற்கரையில் வைத்து இந்த 4 மூட்டை கோப்பிக் கொட்டையும் கைப்பற்றப்பட்டன. கோர்ட்டுக்கு இக் கோப்பி மூட்டைகள் சென்றனவாம். ஆனல் ஒரு மூட்டை மட்டும் காணப்படவில்லையாம். பிடிபட்டதோ 4 மூட்டைகள். ஆனல் கோர்ட்டுக்குப் போனதோ மூன்று மூட்டைகள்.

நான்காவது மூட்டை கோப்பிக் கொட்டை எங்கே?

அம்மானுக்கு விபரம் தெரியும். உங்களுக்குத் தெரியுமோ?

அம்மானையும் என்னையும் காணவில்லை என்று கேள்விப்பட்டதும், அவர்களின் நடமாட்டம் தெரிந்த ஒருவர் வட பகுதியிலுள்ள பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யப் போனாராம். அங்கே அவருக்கு திறமான காப்பி ஒரு கிளாஸ் வழங்கப்பட்டதாம்.

★

மொறட்டுவையில் ஒருவரிடத்தில் 10 றுத்தல் அபின் இருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டது. வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு கோர்ட்டில் அபின் பார்சல் அளிக்கப்பட்டபோது அங்கு அபினுக்குப் பதில் சோள மா இருக்கக் காணப்பட்டதாம்.

இதே போலத்தான் கஞ்சா, கள்ளு, வடிசாராயம் போன்றவைகள் பிடிபடும் போதிருக்கும் தொகையை விட, கோர்ட்டில் சமர்ப்பிக்கப்படும்போது தொகையிலும், அளவிலும் குறைந்து விடுவது வழக்கம். ஏன்— பண்ட மாற்றங்களும் ஏற்படுவது இயற்கை.

★

★ வல்வெட்டித்துறை செல்லும் மந்திரி

★ கோப்பிக்கொட்டை மூட்டை(கோட்டை)

★ பௌத்த சைவ....,பௌத்த சைவ....

★ சிதைந்தது மனக்கோட்டை

★

நாகவிகாரையில் அண்மையில் நடைபெற்ற மதமாற்றத்தில் பங்குகொண்டு, கணவனும் மனைவியுமான இருவர் பௌத்தர்களானுர்கள். மதம் மாறியது மானசீகமாகவா? அல்லது சுயநலங் காரணமாகவா? என்ற ஒரு சோதனைக்குள் ஆளாக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது கணவனுக்கு. அவருடைய தந்தையார் காலமானுர். மரணச் சடங்குகளில் பௌத்த சமயத்தவர்கள் எவரும் கலந்து கொள்ளாதது ஓரளவு அவருக்கு நன்மையை ஏற்படுத்தியுள்ளது போலும். தந்தையின் இறுதி யாத்திரைச் சடங்குகளை முடிப்பதற்கு அவர் பழையபடி சைவராக வேண்டிருந்ததாம். பூ நூல் தரித்து கொள்ளி குடம் ஏந்திச் சென்ருராம்.

தந்தையின் இறுதிச் சடங்குகள் முடிவடைந்து ஐந்தாம் நாள் புத்தகோயில் கட்டுவதற்கான முஸ்தீபுகள் நடைபெற்றன. புத்த கோயில் கட்டுவதற்கு காணி கொடுத்தால் 4 பரப்புக்கு கூலியாக 4000 ரூபாய் கிடைக்கும் என்று எண்ணி ஏமாந்த சம்பவமும் இடம் பெற்றிருக்கிறது.

தந்தையாரின் அந்தியட்டியிலும் இந்தநவீன 'பௌத்த அவதாரம்' சைவ முறைப்படி வேடமிட்டு பிராமணிகளுக்கு முன்பு பயபக்தியுடன் காட்சியளித்ததாம். இந்த மதமாற்றம் சுயநல நோக்குடன் நடைபெற்றதா? அல்லது போலி வேடமா? அல்லது வேறு இத்தியாதி காரணங்களும் உண்டா?

★

மலைநாட்டிலுள்ள ஒரு அரசாங்க காரியாலயத்தில் கடமை பார்க்கும் ஒரு தமிழர் தன் உத்தியோகத்தில் ஆகக் கூடுதலான நிலையை எட்டிப் பிடித்து விட்டார். கடைசிச் சம்பள உயர்வும் பெற்று வருடங்கள் பல உருண்டுவிட்டன. இன்னும் இரண்டு வருடங்களில் ஓய்வு பெறவேண்டியவர்.

விழுந்து விழுந்து படித்து படித்து சிங்களச் சோதனையில் 5வது வகுப்பைத் தாண்டிவிட்டார்.

இவருடைய மனைவி ஒரு சிங்களப் பெண். கடைசி இரு வருடங்களையாவது தனது மனைவியின் ஊருக்குச் சென்று, அங்குள்ள பிரிவுக் காரியாதிகாரி காரியாலயத்தில் கடமை பார்த்துவிட மனப்பால் குடித்தார்.

சோதனை சித்தியானதும் பிரிவுக் காரியாதிகாரி காரியாலயப் பணிக்கான விண்ணப்பத்தையும் தாக்கல் செய்தார். ஆனல் அவருடைய மனக்கோட்டை தகர்ந்து சுக்குநூருகியது.

சிங்களம் 5ம் வகுப்பல்ல, 10வது பாஸ் பண்ணினுலும் உமக்கு அப்பதவி கிடைக்காது, தனிச் சிங்களவரொருவருக்குத்தான் அப்பதவி கிடைக்கும் என்று கூறிவிட்டார்களாம் அதிகாரிகள்.

விழுந்தும் மீசையில் மண்ணெட்டவில்லை என்ற நிலையில் பழையபடி தன் பழைய பதவியில் ஒட்டிக் கொண்டு விட்டாராம் சிங்களப் பிரியர்.

## தமிழனு?...... உனக்கு இடமில்லை......

மத்திய வங்கியில் எழுதுவினைஞராகக் கடமை பார்க்க மனுப் பண்ணியவர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடைபெற்றது. மொத்தம் 1504 பேர் இந்தப் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர் என்று தெரிகிறது.

உத்தியோகம் கொடுக்கும் போது, அரசினர் மாவித்தியாலயங்களில் பயின்று வெளியேறிய மாணவர்களுக்கு 60 வீதமான இடங்கள் கொடுக்கப்பட வேண்டுமென்ற ஒரு விதியும் இருக்கிறதாம். ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பரீட்சை சித்தியடைந்தவர்கள் மட்டுமே கண்டிப்பாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். தமிழ் படித்தவர்களுக்கு மத்திய வங்கிச் சேவையில் இடம் கிடையாதாம்.

சிங்களத்தில் சி. பா. தா. பத்திரப் பரீட்சை திறமையுடன் சித்தியெய்திய ஒரு தமிழ் மாணவரும் இப் பரீட்சையில் பங்குகொண்டு குறிப்பிடத்தக்க அளவு திறமையும் காட்டினுராம். ஆனல் இறுதியில் அவரைத் தேர்ந்தெடுக்க முடியாதென்று அதிகாரிகள் கூறிவிட்டார்களாம்.

சிங்களத்தில் எவ்வளவுதான் திறமையுடன் சித்தியடைந்தாலும் ஒரு தமிழராக இருக்கும் பட்சத்தில் அவரைத் தெரிவு செய்ய முடியாது என்று கண்டிப்பாகக் கூறிவிட்டனராம்.

## அம்மானின் திருவுருவம்

காணுமற்போன அம்மானையும், காலகண்டரையும் தேடி வாசகர் பட்டாளம் புறப்பட்டு எங்கெல்லாமோ தேடியதாம். உண்மையான அம்மானையும், மருமகனையும் கண்டுபிடிப்பதென்பது அவ்வளவு சுலபமா என்ன? யார் யாரையோ கண்டு பிடித்துவிட்டு இவர்தான் அம்மான்! இவர்தான் காலகண்டன்! என்றெல்லாம் தப்புக் கணக்குப் போட்டனர்—ஏமாந்தனர். தற்செயலாக அம்மான் காணுமற்போய்விட்டாலும் அல்லது துப்பறியுமிடங்களில் துன்பங்களுக்குள்ளாக நேர்ந்தாலும், சௌகரியமாக விருப்பதாக அம்மானின் திருவுருவப் படத்தை சந்தியில் விரைவில் பிரசுரிக்கத் தீர்மானித்துள்ளோம்.

எதிர்பாருங்கள்!

ஆ—ர்

## டி. எம். பீக்கு வீர வாள் பரிசு

இலங்கையில் மலையக மக்கள் மத்தியில் இலக்கிய விழிப்பையும், வளர்ச்சியையும் ஏற்படுத்த திரு. டி. எம். பீர்முகம்மது அயராது உழைத்தார். இலங்கையில் அவர்கள் ஆற்றிய இலக்கியப் பணியைத் தமிழகத்தில் செய்திருந்தால் நிச்சயம் நல்ல பயனைப் பெற்றிருப்பார்.

இவ்வாறு கடந்த வாரம் தாயகம் செல்லும் திரு. டி. எம். பீர்முகம்மதுவுக்கு அளிக்கப்பட்ட பாராட்டு விழாவில் உரை நிகழ்த்துகையில் திரு. இரா. அதிமணி அவர்கள் கூறினுர்கள்.

திரு. டி. எம். பீர்முகம்மது அவர்கட்கு அவரது அன்பர்களால் வீரவாள் ஒன்றும், பணமுடிப் பொன்றும் வழங்கப்பட்டது.


## இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 12 பொயிண்ட் ரோமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரோமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் சுதந்திரன் ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

8, 10, 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விவரத்துக்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

சுதந்திரன் ரைப் பவுண்டரி,

194 ஏ. பண்டாரநாயக்க மாவத்த,
கொழும்பு—12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியம்:

# பார்த்த மாத்திரம் போதை தருவாள்!

— தேனீ —

'கள்ளை' உட்கொள்கின்றோம்.

என்ன நடக்கிறது?

போதை உண்டாகிறது; தலை சுற்றுகிறது; மயக்கம் வருகிறது.

இவ்வளவும்—கள்ளை நாம் குடித்ததன் பின்பே.

கள்ளை நாம் பார்த்தவுடன் மயக்கம் வருவதும் உண்டோ?

இல்லை.

ஆனால்...............

கண்டதும் மயங்கச் செய்யும் ஒன்று—ஒருத்தியும்—உண்டு தான்.

ஆமாம், அவள் தான் என் தலைவி!

இன்ப நுகர்ச்சிக்கு இனிய பொருளாக விளங்கும் அவளைக் கண்ட மாத்திரமே எனக்குப் போதை உண்டாகின்றதே!

அந்த அழகியின் உருவம் என் கண் முன் தோன்றியதும், நான் என் நிலை மறந்து, எண்ணம் மறந்து செயலிழந்து நிற்கிறேனே!

ஆகவே, அவளுடைய போதைச் சக்திக்கு முன்னால், கள் கூடப் பின்வாங்கத்தான் வேண்டும்.

மதுவின் போதை, மதுவை அருந்தியபின்னர்தான். ஆனால், என் மனத்தில் இடங்கொண்ட இம் மாதுவின் போதையோ, பார்த்தவுடனேயே தனது வேலையை ஆரம்பித்து விடுகின்றதே!

என் தலைவியிடம் தான் எத்துணை சக்தி நிறைந்து காணப்படுகின்றது!

விழிகளைப் பாய்ச்சி, என்னைத் தன் வலையில் வீழ்த்தி விடுகிறாள்!

தலை குனிந்து, பெருவிரலால் தரை கீறி நயனங்களை ஒரு கோணத்தில் வைத்து, நாணத்துடன் பார்க்கும் பார்வையினால் என் உயிரையே குடித்து விடுகிறாள்!

இளமை ததும்பும் தனது அழகுருவின் அசைப்பினால், என்னை மதிமயக்கத்தில் ஆழ்த்தி விடுகிறாள்!

பருகிக் குடித்து இன்புறும் போதை நிலையிலும் பார்க்க, பார்த்து நிற்கும் நிலையிலேயே இவள் அதிக இன்பம் தருகிறாளென்றால், பருகும் நிலையில்..............?

ஆமாம். அந்த நிலையை நான் கற்பனை செய்து பார்க்கும் பொழுதே, என் மெய் சிலிர்க்கிறது.

தலைவியைக் கண்டதும், இவ்வாறு இன்ப போதையில் எண்ணும் தலைவனைத்தான், வள்ளுவனின் இன்பத்துப் பாலில் வரும் பின்வரும் குறளில் நாம் சந்திக்கிறோம்.

உண்டார்க ணல்ல தடுநருக் காமம்போற்
கண்டான் மகிழ்செய்த லின்று.

# காலத்தை வென்று நிற்கும் சங்கத்துக் கலித்தொகை

[ தமிழ் இலக்கியம் சிறப்பு வாய்ந்தது; தொன்மை வாய்ந்தது; உயிர்த் துடிப்பு நிறைந்தது; அழிய, அழிக்க முடியாதது.

தமிழ் இலக்கியத்தின் பொற்காலம் சங்ககாலம் என்பது அறிஞர் கருத்து. இக் கருத்தை வலியுறுத்தும் வகையில், கட்டுரையாளர் தமிழிலக்கியம் பற்றியும், குறிப்பாகச் சங்ககால இலக்கியம் பற்றியும் இங்கு குறிப்பிடுகிறார்.]

இலக்கியம் என்றால் என்ன?

காலத்தை வென்று நிற்பது எதுவோ, அழியும் சமுதாயத்தில் அழியாது நிற்பது எதுவோ, சூழ்நிலைகள் மாறும்போது நிலைத்து நிற்பது எதுவோ, அதுவே இலக்கியம்.

இருபது நூற்றாண்டுகளுக்கு முன் தோன்றிய சங்க இலக்கியங்கள், இன்றும் பசுமை மாறாது நமக்குக் காட்சியளிக்கின்றன. ஆனால்......

கடந்தஆண்டுகளில் வெளிவந்த எத்தனையோ மறைந்து விட்டன!

எனவேதான்,

இலக்கியம் என்பது காலத்தால் அழியாத ஒன்று என்கிறோம்.

மனிதன் இன்று இருப்பான், நாளை இறந்தொழிவான்.

மாடமாளிகைகள், கூடகோபுரங்கள் தகர்ந்து தரைமட்டமாகலாம்.

ஆனால் இலக்கியமோ என்றும் அழியாது, காலம் என்னும் காட்டாற்றைக்கடந்து நிலைத்து நிற்பது.

## ஏன் அழியவில்லை?

அன்று தமிழன் ஆண்டஇனமாக வாழ்ந்தான்; இடையில் அடிமைப்பட்டு. அல்லலுற்றுத் தொல்லைகள் பல கண்டான்.

ஆனால் அன்று தமிழன் படைத்த இலக்கியம் அழியவில்லை. ஏன்?

உண்மை இலக்கியத்தை, உயிருள்ள இலக்கியத்தைப் படைத்து வைத்தான், அதை யாராலும், எந்தச் சக்தியாலும் அழிக்க முடியவில்லை.

நல்ல இலக்கியம் மக்கள் நாவிற் நர்த்தனமாடுமல்லவா? இதயத்தில் நிலைத்து விடுமல்லவா?

புதுமைச்சிற்பி

இன்று நமக்குப் பச்சையாகக் காட்சியளிக்கின்ற, எத்தனையோ, இலக்கியங்களின் ஏடுகள் அன்று மாற்றான் கையில் சிக்கியன. அவற்றை அழித்தொழிக்க அவர்கள் முயற்சிகள் பல செய்தார்கள்.

முடிந்ததா அவர்களால்?

இல்லை—முடியவே இல்லை. காரணம்? சங்க இலக்கியங்கள் உயிருள்ள இலக்கியங்கள். அவற்றை யாராலும் அழிக்க முடியாது.

## உயிருள்ள இலக்கியம்

சங்க இலக்கியங்கள் உயிருள்ளவை என்கிறோம். ஏன்?

உண்மையுணர்ச்சிகள் தோன்ற எழுத பட்டவை சங்க இலக்கியங்கள்.

உணர்ச்சி மட்டும் இருந்து விட்டால் நல்ல இலக்கியம் காணமுடியுமா?

இல்லை.

உயிரூட்டவும் வேண்டும்.

அப்படியாயின்?

வாழ்க்கையுடன் ஒட்டிய உண்மை உணர்ச்சிகளைத் திறமையுடன் எழுத்திலே வடித்து எடுத்தால், உயிருள்ள இலக்கியத்தைக் காண முடியும்.

இத்தகைய இலக்கியங்கள் பல நம் மத்தியில் உள.

## கலித் தொகை

அவற்றுள் ஒன்று கலித் தொகை.

தமிழ் இலக்கியங்களனைத்தும், இரு பெரும் பிரிவுள் அடங்கும்.

அவையாவன: அகம், புறம்.

மக்களின் அகவாழ்வைக் குறிப்பன அனைத்தும், அஃதாவது ஒத்த அன்பினராகிய தலைவனும் தலைவியும் உள்ளத்து உணர்வால் அனுபவிக்கும் இன்பத்தை இனிதே கூறும் அனைத்தும் அகத்துள் அடங்கும்.

மேற்கூறிய ஒத்த அன்புடையாராலேயேயன்றி எல்லாராலும் அனுபவித்து அறியப்பட்டு இது இவ்வாறு இருந்ததெனப் பிறர்க்குக் கூறப்படும் பொருள், அஃது புறப் பொருளில் அடங்கும்.

கலித் தொகை அகம் என்ற பெரும் பிரிவுள் அடங்குகின்றது.

கலித் தொகை என்றால் கலிப் பாக்களின் தொகுப்பு என்று பொருள்.

துள்ளல் ஓசையுடையது கலிப்பா.

தொகுப்பு என்றதும், பல பாடல்களின் கூட்டு என்பது புலனாகிறது.

அப்படியாயின், இவை அனைத்தும் ஒருவரால்பாடப்

(15-ம் பக்கம் பார்க்க)

# அடுத்த வீட்டுப் பெண்ணுக்கு ஆசை வைத்துப் போகலாமா?

—அ. டேவிற் இராசையா—

சிற்றூர்களில் வதியும் மக்கள் தம் ஓய்வு வேளைகளிலும் தொழில் புரியும் வேளைகளிலும் தெள்ளிய தமிழில் எவ்வளவு இனிமையாகத்தான் கவிதைகளை பாடுகிறார்கள். அந்தக் கவிதைகளின் வாயிலாக அச்சிற்றூர் மக்களின் மன எழுச்சிகளை நாம் தெட்டத் தெளிவாக அறிந்துகொள்ளுகிறோம்.

வானவல்லிக் கொடியைப் போன்ற தன் மச்சாளின் அழகிலே மையல் கொண்டான் ஒரு கிழமையான். அவன் நெஞ்சம் துடியாய்த் துடித்தது. அவளைச் சந்தித்து தன் எண்ணத்தைச் சொல்லிவிட அந்த இளைஞன் நினைத்தான். ஆனால், அவளைச் சந்திக்கும் வாய்ப்பு அவனுக்கு கிட்டவில்லை. அவளை வீட்டில் போய்ப் பார்ப்பதற்கும் அவனுக்கு இயலவில்லை. அவளைப் பார்ப்பதில் அவ்வளவு கடினம். மச்சாளின் அழகை நினைந்து நினைந்து தனியே பாடுகிறான்:

அன்ன நடையும்,
அலங்கார கை வீச்சும்,
வண்ண முலையழகும்,—நான்
வையகத்தில்
காண்பதெப்போ?

ஒரு நாள்! தன் மச்சாளைச் சந்திக்கும் வாய்ப்பு அவனுக்குக் கிடைத்தது. அவன் உள்ளம் இன்பத்தால் துள்ளியது. அவன் கூறுகிறான்:

வானத்து அம்புளியோ,
வையகத்துச் சூரியனே
காட்டு மரக் கொழுந்தோ—
மச்சி
உங்களைக் கண்டு வெகு
நாளாச்சு!

எத்தனையோ நாட்களுக்குப் பின்னர் காணும் தன் மச்சாளைப் பார்த்துப் பார்த்து அவன் அகம் மகிழ்கிறது. ஆனால் முன்னர் அவளிடம் காணப்பட்ட எழில் இப்போது இல்லாமைக்கு உரிய காரணத்தைத் தெரிந்து கொள்வதற்கு அவன் விரும்புகிறான்:

**கிராமிய இலக்கியம்**

பூவரசம் பூவே,
பொழுது இருக்கப் பூத்த
ஐந்து மணிப் பூவே,
உன் அழகு குறைந்த
தென்ன?

தன் மச்சாளின் மனத்தில் என்னைப் பற்றிய நினைவு இருப்பின், எந்த விதமான தடைகள் ஏற்படினும், என்னைப் பார்ப்பதற்கு வந்திருப்பாளே! என்னைப் பற்றிய நினைவே அவள் மனத்தில் இல்லைப் போலும், என்று அந்த இளைஞனின் இளம் உள்ளத்தில் ஓர் எண்ணம் எழுகிறது. அதனால் அவன் மனம் பெரிதும் வருந்தியது. அவன் கூறுகிறான்:

சரீரம் பருத்த கிளி,
தங்க நிறமான கிளி,
உன் இதயக் கிணற்றில்
எப்போ விளையாடுவேனோ?

ஆண்களின் மனம் குரங்கு மனம் தானே! அடு[illegible]டுப் பெண்ணின் மீதும் அந்த இளைஞன் ஒரு கண் வைத்திருந்தான். அந்தச் செய்தியை அவள் எப்படியோ தெரிந்து கொண்டாள். தன் காதலன் இன்னொருத்தி மீது ஆசை வைத்திருப்பது அவளுக்குத் தெரிந்தால் அவள் மனம் எந்த நிலையில் இருக்கும்? அவன் அவளைச் சந்திக்க விரும்பாத காரணத்தைக் கூறுகிறாள்:


மாதளம் பழம் போல
மாமன் வீட்டில்
பெண்ணிருக்க
அடுத்த வீட்டுப் பெண்ணுக்கு
ஆசை வைத்துப்
போகலாமா?

## கரவெட்டியில் கண்டனம்

"நடுவு நிலைமை என்ற போர்வைக்குள் மறைந்து கொண்டு இலங்கை ஆக்கிரமிப்பு நோக்கங் கொண்ட சீனாவுக்கு ஆதரவு காட்டி வருவது கவலைக்கிடமானது" என்று கரவெட்டி கலா படிப்பகம் நடத்திய கண்டனக் கூட்டத்தின்போது திரு. எஸ். விநாயகமூர்த்தி கூறினார்.

திரு. கு. சுவாமிநாதன் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார். திரு. ஜே. ஜெயகுமார் பேசுகையில் தமிழரசுக்கட்சி சீனாவின் ஆக்கிரமிப்பைக் கண்டிக்க முன் வந்ததையிட்டுப் பாராட்டினார்.

திரு. க. ஞானம் அல்போன்ஸ், திரு. சக்திவேல், திரு. [illegible], திரு. [illegible] பேசினார்கள்.


ராஜ பீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும்
எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்

ராஜ பீடி ஸ்பெஷல்
ஒன்றே தான்

புகைத்து பலனடையுங்கள்

ராஜா பீடி கம்பனி

கொழும்பு-14.

டெலிபோன் : 2739


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1962 டிசம்பர் மாதம் 23-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183

# தோட்டப் பிள்ளைகளுக்கு கல்வி வசதி

உலகில் எந்த உரிமையுமின்றி வாழும் மனிதர் கூட்டம்தான் மலையகத் தமிழ் பேசும் மக்கள். பறிபோனது அவர்களின் உரிமைகள் மட்டுமல்ல; அவர்களது பிள்ளைகளின் உரிமையும் கூட.

பிள்ளைகளின் பிறப்புரிமை தான் கல்வி பயிலும் உரிமை இன்று தோட்டப் பிள்ளைகளுக்கு அந்த உரிமையும் கிடையாது. ஐ. நா. சபையின் குழந்தைகளின் உரிமைச் சாசனமெங்கே? அது இலங்கைக்குப் பொருந்தாதா? இலங்கையும் அச் சபையின் ஓர் அங்கத்தவ நாடு தானே! வெளி உலகத்தில் ஜனநாயகப் பேச்சு — உள்நாட்டில் இன ஒதுக்கல். அரசாங்கத்தின் கொள்கை இது.

"நாடற்றவர்கள்" என்ற நாமத்தைச் சூட்டி மலையக மக்களின் உரிமைகளைப் பறித்தனர். அடுத்து அவர்களது பிள்ளைகளின் வருங்காலத்தையும் நாசமாக்கியுள்ளனர். கல்வி அறிவூட்டுவதில் பாகுபாடு காட்டுவது மாபெரும் துரோகம் — மன்னிக்க முடியாத குற்றம்.

இதர மக்களுக்குள்ள கல்வி வசதிகள் மலையகத் தமிழ் மக்களுக்குக் கிடையா. அவர்கள் குடியுரிமை இல்லாதிருப்பது தான் காரணமாம். இன, மத, மொழி, குடியுரிமை அடிப்படையில் குழந்தைகளைப் பிரித்தல் பாஸிஸத்தை விடக் கொடியது. கல்வித் துறையிலே ஒரு பகுதி மக்களை ஒதுக்கி வைக்க யாருக்கும் உரிமை கிடையாது.

தோட்டத் தமிழ்ப் பிள்ளைகளுக்கு உயர் தரக் கல்வி பெற இடமில்லை. விஞ்ஞானக் கல்வி பெற அனுமதியில்லை. தொழில் கல்வி பெற வசதியில்லை. அவர்களின் ஆரம்பக் கல்வி மட்டுமென்ன? அதுவும் பெயரளவில்தான். தோட்டங்களில் ஆரம்பக் கல்வி என்பதே ஒருமோசடி — ஏமாற்றம்.

ஆரம்பக் கல்வி தான் ஒரு பிள்ளையின் உள்ளத்தைச் சரியான பாதையில் திருப்பும். பிஞ்சு மனதைச் சிறந்த முறையில் பண்படுத்த வேண்டும். இன்றேல் உயர்தக் கல்வி பாதிக்கும். எதிர்கால வாழ்வே இருண்டு விடும்; எனவே ஆரம்பக் கல்விக் கூடம் பிள்ளையின் உள்ளத்தைக் கவரும் வகையில் அமைய வேண்டும். அதன் சுற்றுச் சார்பும் மாணவனின் மனதுக்கு மகிழ்ச்சியூட்ட வேண்டும். இன்று ஆரம்பக் கல்வி போதிக்கும் தோட்டப் பாடசாலைகளோ இதற்கு நேர்மாறானவை. பாடசாலைக் கட்டிடங்கள் மிக மிக மோசம். மாட்டுக் கொட்டில்கள் போன்றவை.

ஆரம்பக் கல்வி போதிப்பதற்கு திறமை மிகுந்த பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் அவசியமாகும். தோட்டப் பாடசாலைகளில் அம்மாதிரி ஆசிரியர்கள் மிகக் குறைவு. இதனால் பிள்ளைகளின் படிப்பு கடுமையாகப் பாதிக்கப் படுகிறது.

ஆரம்ப வகுப்புகளில் குறைந்த பட்சம் 35 பிள்ளைகளுக்கு ஓர் ஆசிரியராவது வேண்டும். தோட்டப் பாடசாலைகளின் நிலைமையோ இந்த விதிக்கு முற்றிலும் மாறுகும் சில பாடசாலைகளில் 100 பிள்ளைகளுக்கு ஒரேயொரு ஆசிரியர் தான் இருப்பார். இதனால் கல்வித் தரம் படுமோசமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

இவ்வாரம் மலையகப் பகுதியில் வெளியாகியுள்ள ஒரு கட்டுரை இதனைத் தெளிவு படுத்துகிறது. தோட்டப் பாடசாலை பற்றி தோட்ட நிர்வாகத்துக்கு அக்கறையே கிடையாது. கல்வி இலாகாவும் அதைப்பற்றிக் கவலைப் படுவதேயில்லை

கல்வி ஒருபுறமிருக்க, மற்றொரு சேவையைச் செய்கிறது இப் பாடசாலை. பெற்றோர்கள் வேலைக்குச் சென்ற பின் பிள்ளைகள் தேயிலைக் கொழுந்தைப் பிடுங்கி விடுமாம், தேயிலைச் செடிகளை ஒடித்து விடுமாம். அதைத் தடுக்க அவர்களைத் தனியாக அடைத்து வைக்க வேண்டுமாம் அதற்காக அமைக்கப்பட்டவை தான் இக் கொட்டில்கள் —தோட்டப் பாடசாலைகள். இன்றும் அதைத்தான் செய்கின்றன இப் பாடசாலைகள்.

தோட்டப் பிள்ளைகளுக்கு உயர்தரக் கல்விபெற வசதிகள் கிடையாது. ஆரம்பக் கல்வியோ அரைகுறை. அதற்கு மேல் பயில அனுமதியில்லை. நகர்ப்புற கல்விக் கூடங்களில் இடமில்லை. இந் நிலையில் தோட்டப் பிள்ளைகளின் எதிர்கால நிலை என்ன?

நாடற்றவர்களின் பிள்ளைகளும் நாடற்றவர்களாம். அவர்கள் சந்ததியும் நாடற்றதாம். ஆகவே அவர்களுக்கு அரசாங்கப் பாடசாலைகளில் இடம் கிடையாதாம். ஆரம்பப் படிப்போடு அவர்களின் கல்வி முற்றுப் பெறவேண்டுமா? ஐந்தாம் படிவத்துக்கு மேல் படிக்க அவர்கள் தகுதியற்றவர்களா? விஞ்ஞானக் கல்வி, தொழிற் கல்வி அவர்கள் தீண்டத் தகாதவைகளா? என்ன கொடுமை இது?

தோட்டப் பிள்ளைகளை 5ம் வகுப்பு வரை நகரப் பள்ளிக் கூடங்களில் சேர்க்கக் கூடாது இது பகிரங்க உத்தரவு. 6ம் வகுப்பில் சேர்க்க பிரஜாவுரிமையை நிரூபிக்க வேண்டும். இது நடைமுறைத் திட்டம். இந்தப் பிள்ளைகள் கல்வி பயிலுவதுதான் எப்படி?

குடியுரிமையற்ற தோட்டப் பிள்ளைகளை 6ம் படிவத்தில் சேர்க்க வேண்டாம் என்பது ஊவா மாகாண கல்வி அதிகாரியின் கட்டளையாம்.

"கல்வி விஷயத்தில் பாகுபாடு கிடையாது. நாடற்றவர்கள் என்று பாரபட்சம் காட்டமாட்டோம். எல்லோருக்கும் சமகல்வி வழங்குவது தான் எங்கள் கொள்கை" என்று மந்திரிகள் பிரசாரம் செய்யலாம். ஆனால் அவர்களின் செயலோ அதற்கு நேர் முரண். எல்லாம் கண்ணில் மண்ணைத் தூவும் பித்தலாட்டப் பிரசாரம்.

"இரண்டு மைல் சட்டம்" வேறு தோட்டப் பிள்ளைகளைப் பாதிக்கிறது. நகரப் புற பாடசாலைகளிலிருந்து சிறித் தொலையில் வசிக்கும் தோட்டப் பிள்ளைகள் படிக்க எங்கே போவது? இக் காரணத்தாலும் ஏராளமான தமிழ்ப் பிள்ளைகளுக்குப் பாடசாலைகளில் இடம் கிடைப்பதில்லை. இது அவர்களுக்காகவே இயற்றப்பட்ட சட்டமா?

தோட்டப் பிள்ளைகளைக் கல்வி பயிலுவதினின்று தடுக்க எத்தனையோ தந்திரங்கள் சூழ்ச்சிகள் கையாளப் படுகின்றன. இதனை அரசாங்கம் திட்டமிட்டு நிறைவேற்றுகிறது.

எனவே மலையகத் தமிழ்ப் பெருங்குடி மக்களே!

இச் சதித் திட்டத்தை நீங்கள் முறியடிக்க வேண்டும். வாளாவிருத்தல் உங்கள் குழந்தைகளின் வருங்காலத்தைப் பாழாக்கி விடும். தொழிலாளி மகன் தொழிலாளியாகவே இருக்க வேண்டுமென்ற நியதி கிடையாது. உங்கள் பிள்ளைகள் வாயில்லாப் பூச்சிகளாக வாழ நீங்கள் அனுமதிக்க முடியுமா? அவர்களுக்கு எவ்வகையிலும் கல்வி அறிவூட்ட வேண்டும். உயர்தரக் கல்வியுடன் விஞ்ஞானக் கல்வியும் தொழில் கல்வியும் பெற்றுக் கொடுக்க வேண்டும். அதற்காக ஒரு பெரும் போராட்டம் நடத்தவும் நீங்கள் தயாராக இருக்க வேண்டும்.

இதோ உங்களுக்கென தனியொரு தமிழரசுத்தொழிற் சங்கம்தோன்றியுள்ளது. இழந்த உரிமைகளைப் பெற வழி காட்டும் பொருட்டு சிறந்த அரசியற் தலைமையும் உங்களுக்குக் கிடைத்துள்ளது.

ஆகவே கல்வியுரிமை உட்பட எல்லா உரிமைகளையும் பெற இலட்சக் கணக்கில் இத் தொழிற்சங்கக் கொடியின் கீழ் திரளுங்கள்! எதிரிகளின் பொய்ப் பிரசாரங்களை முறியடியுங்கள்! மலையகமெங்கும் தமிழரசுச் செய்தியைப் பரப்புங்கள். ஒவ்வொரு தோட்டத்திலும் தமிழரசுத் தொழிற் சங்கத் தோட்டக் கமிட்டிகளை அமைத்து உரிமை பெற உறுதி பூணுங்கள்.

# சீனுவில் கோர உணவுப் பஞ்சம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

120 லட்சம் தொன் தானியம் பெற்றதன் மூலம், சீனுவின் வர்த்தகத் தூதுவர் 210,000,000 பவுன் வாரி இறைத்துள்ளனர்.

ஆபிரிக்காவில், ரொடீஷியாவிலுள்ள வெலன்ஸ்கி அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்து, சோளம் வாங்க ஏற்பாடு செய்துள்ளது சீனு. ஜூன் மாதத்தில் 58,000 தொன் சோளத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இன்னும் 22,500 தொன்னுக்குப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

அவுஸ்திரேலியாவிலும் பேச்சு வார்த்தைகள் நடைபெறுகின்றன. 1963லும், 1964லிலும் விநியோகம் செய்வதற்கென38,500,000 பவுன் பெறுமதியான கோதுமை வாங்குவதற்கே இப் பேச்சு வார்த்தைகளைச் சீன வர்த்தகர்கள் நடாத்துவதாகத தெரிகிறது. 1961ம் ஆண்டில் சீனுவுக்கு 4,260,000 பவுன் பெறுமதியான கோதுமையும், ரவையும் விற்ற பிரான்ஸ், 1962--64 வருடங்களில் விநியோகிப்பதற்கென மேலும் 700,000 தொன் கோதுமையும், ரவையும் அனுப்பச்சம்மதித்துள்ளது.

இவ்விதம் பெரும்தொகையில் தானியம் இறக்குமதி செய்வதற்கு வேண்டிய ஆரம்ப பணத்தைப் பெறுவதற்கு பீக்கிங்கின் வெளிநாட்டு வியாபாரம், வர்த்தகம் இவற்றை நிர்வகிக்கும் உத்தியோகத்தர்கள் வெற்றிகரமாக இயங்கியுள்ளனர்.

## முதல் நடவடிக்கை

அவர்களது முதல் நடவடிக்கை என்னவெனில், உணவு தானியத்தைத்தவிர, மேல்நாடுகளிலிருந்து மற்ற எல்லா இறக்குமதிகளையும் தடைசெய்ததே. இது. பெரியவொரு பொருளாதார ரணசிகிச்சைக்கு இடமளித்தது. ஏனெனில், சீனுவில் பரிசோதிக்கப்பட்ட புதிய 'தொகுதி' விவசாயத் திட்டத்தின் தோல்வி, வெளிநாடுகளிலிருந்து உணவு தானியங்களின் அவசர இறக்குமதித் தேவையை உண்டாக்கியது மாத்திரமல்ல, வெளிநாடுகளுக்கு பீக்கிங் விற்கவிருந்த பொருட்களின் தொகையையும் பெருமளவில் குறைத்தும் விட்டது. 1961ல் கொம்யூனிஸ்ட் அல்லாத நாடுகளுக்குச் சீனுவின் ஏற்றுமதி 530 லட்சம் பவுனளவில் விழுந்துள்ளது. அதற்கேற்ப, இந் நாடுகளிலிருந்து வழக்கமாக வாங்கும் பொருட்களின் இறக்குமதியில் பீக்கிங் வர்த்தகநிபுணர் 1070 லட்சம் பவுனளக்கு வெட்டி விட்டனர் இந்த நடவடிக்கை, சீனுவுக்கு 540 லட்சம் பவுனைத தந்து, உணவு தானியம் வாங்க உதவியது.

இத்துடன், பீக்கிங் வர்த்தகாகள், தமது நாட்டின் வெள்ளிச் சேமிப்பிலிருந்து 110 லட்சம் பெறுமதியான வெள்ளியை லண்டனுக்கு விற்றதுடன், வெளியூரிலுள்ள சீனரிடமும், வேறு விதமாகவும் இன்னுமோர் 70லட்சம் பவுன் சேர்த்தனர். 1961ல் இவ்விதமாகக் கிடைத்த முழுத் தொகையான 720 லட்சம் பவுனையும், உடனடியாகப் பணம் கொடுக்க வேண்டியதும், 1150 லட்சம் பெறுமதியுமான தானியத்துக்கான செலவுக்கு ஈடாகவே கொடுக்கவேண்டியிருந்தது.

ஆனால், இவ்வருடம், கஷ்டமான சூழ்நிலையிலேயே இச் சீன வர்த்தகத் தூதுவர்கள் கடமையாற்ற வேண்டியிருக்கிறது. கடந்த வருடத்தை விட, இவ்வருடம் அவர்கள் பொருளாதாரம் இன்னும் மோசமான நிலையையடைந்துள்ள நிலையில், இன்னும் 900 பவுன் பெறுமதியான தானிய இறக்குமதிக்கு வெளிநாடுகளுடன் ஒழுங்கு செய்துள்ளனர்.

செலவுப் பணத்தில் பெருமளவு தொகையைக் கொம்யூனிஸ்டு அல்லாத நாடுகளையே கொண்டு பொறுப்பேற்கச் செய்து, மேலதிகமாக உணவுத்தானியங்கள் பெறுவதில், பீக்கிங்கின் வர்த்தக நிபுணர்கள், திறம்படவே செயற்பட்டிருக்கின்றனர். இந்த நாடுகளுக்குப் பீக்கிங் இப்பொழுது 800 லட்சம் பவுன் கடன்பட்டுள்ளது. சீனுவிலுள்ள மக்களுக்கு மேலும் உணவுத் தானியம் அனுப்பி வைத்தால், 1963லும் 1964லிலும் பீக்கிங் மிகுதிப்பணமெல்லாம் அடைத்துவிடுமென்று, வெளிநாட்டு விற்பனையாளர்களை நம்ப வைக்கச் சீன வர்த்தகர்கள் கடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

ஆனல், சீன வர்த்தகர்கள் இவ்வளவு சிறப்பாக மாஸ்கோவில் கடமையாற்றியிருப்பதாகத் தெரியவில்லை. 1950ம் ஆண்டு ஆரம்ப கட்டங்களிலேயே, சோவியத் அரசாங்கத்திடம் சீனு பெருமளவுக்குக் கடன்பட்டிருக்கிறது. கொரியா போரின் மூலம் பீக்கிங்க்கு ஏற்பட்ட சில கடன்களை குருசேவ் அரசாங்கம் தவிர்த்துவிட்ட போதிலும், வழக்கத்துக்கு இயைந்த சில கோட்பாடுகளையாவது சீனு பூர்த்தி பண்ணி வைப்பதற்கு, சீனுவைக் குருசேவ் அரசாங்கம் வற்புறுத்தி வருகிறதாகத் தெரிகிறது.



கனடாவில் தானியம் வாங்கி வரப் புறப்பட்ட கொம்யூனிஸ்ட் சீனத் தூதுக் குழுப் பிரதிநிதிகள் ஹொங்கொங் விமானநிலையத்திற்கு வந்திருந்த வேளையில் பிடிக்கப்பட்ட மற்றுமொரு படம்.

இரு நாடுகளுக்குமிடையில் வர்த்தகம் மொத்தத்தில் விழுந்துள்ளது. கொம்யூனிஸ்டு சீனுவுக்கு அனுப்பும் ஏற்றுமதிகளை வெட்டுவதன் மூலமே, கொடுத்ததிலும் பார்க்க அதிகம் பெறுவதற்கு ருஷ்யாவினுல் முடிந்தது.

தமது நிதிநிலைமை அபாயகரமானதாகவிருப்பதையும், கொடுக்க வேண்டிய கடன் தொகைகளைக் காலவரையறையின்றிக்கடத்த முடியாதென்பதையும் உணர்ந்துள்ள பீக்கிங் வர்த்தகர்கள், தரகவேலையில் இறங்கி, வழக்கமான சீனத் தொழிலான 'சந்தைத் தரகர்' வேலையைச் செய்து, கொஞ்சம் மேலதிகமான அந்நியச் செலாவணி பெற்றுள்ளனர். உதாரணமாக, அண்மையில், பர்மாவிலிருந்து பெரும் தொகையாக அரிசி கடனுக்கு வாங்கி, உடனேயேஅதை இந்தோனேஷியாவுக்கு 400,000 பவுன் லாபத்தில் விற்றுவிட்டனர்.

ஆனல், சீனுவின் பொருளாதாரநோய்களுக்கு இவை சில்லறை மருந்துகளே. அண்மையில் ஜெனீவாவில், சீன வெளிவிவகார மந்திரி சென்-யி, நிலைமை மிக மோசமாகவிருக்கிறதெனவும், வெளிநாடுகளிலிருந்து கணிசமான அளவு பொருளாதார உதவியைப் பீக்கிங் அரசாங்கம் பெறுமென்பதில் சிறு நம்பிக்கையேயுள்ளதென்றும் சுட்டிக் காட்டினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகுபாடு வேண்டாமென திடமான கட்டளை பிறப்பிக்கப்படுமா?

## இரத்மலானை இந்துக் கல்லூரிக்கு ஆபத்து!

### சிங்களமும் 2-மைல் சட்டமும் தமிழ் வகுப்பை ஒழித்துவிடும்

வடக்குக் கிழக்கு மாகாணங்களைத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் தமிழ் பேசும் மக்கள் சொத்துரிமை கொண்டாட முடியாத ஒரு சூழல் உருவாகி வருவதை அவதானிக்க முடிகிறது.

இரத்மலானை இந்துக் கல்லூரியில் புதுவருட ஆரம்பத்திலிருந்து சிங்கள—ஆங்கிலப் பாடசாலை ஒன்றினையும் இயங்குவதற்கு கல்வி இலாகா முடிவு செய்துள்ளது, மேற்குறிப்பிட்ட செய்திக்கு எடுத்துக்காட்டாகவிருக்கிறது.

கொழும்பிலே வசிக்கும் தமிழ் பேசும் பிள்ளைகளின் கல்வி வசதிகளுக்காக ஒரு சிறந்த கல்லூரியினை நிறுவவேண்டுமென்ற எண்ணத்துடன் பல வருடங்களுக்கு முன்னர் ஒரு சபையை நிறுவினர், கொழும்பிலிருந்து வசதி பெற்ற தமிழ் பேசும் பெரியோர்கள். இந்த எண்ணத்தைச் செயல் படுத்துவதற்காக பல இடையூறுகளுக்கு மத்தியில் பெருந்தொகையான பணம் வசூலிக்கப்பட்டது.

தமிழகத்தில் தலை சிறந்த தமிழ் நாடகக் கழகமான டி. கே. எஸ். சகோதரர்களை இங்கு தருவித்து நாடக விழா ஒன்றினை ஏற்பாடு செய்து பொருள் சேர்த்தனர். வேறு பல பெரியார்கள் இக் கல்விப் பணிக்கு ஏராளமான பணம் கொடுத்துதவினர்.

பல லட்சரூபாய் செலவில் கொழும்பு நகரத்துக்கண்மையிலுள்ள இரத்மலானையில் பெரியவளவில் காணி ஒன்று வாங்கப்பட்டது. கல்லூரிக்கான நிலத்தை விட மேலதிகமாகவும் நிலம் கொள்ளப்பட்டு, அப் பிரதேசத்தில் ஒரு தமிழ் பேசும் மக்களுக்கான குடியேற்றத் திட்டமும் ஏற்படுத்தப்பட்டது. குறிப்பிடத்தக்க அளவு தமிழ் பேசும் மக்கள் இந்தக் குடியேற்றத் திட்டத்தில் சென்று குடியேறினார்கள்.

இந்த நாட்டிற்குச் சுதந்திரம் வழங்கப்பட்டதும், பெரும்பான்மையான சிங்களவர்கள் மத்தியில் இலங்கை நாடு பௌத்த சிங்களவர்களுக்கு மட்டுமே சொந்தம் என்ற நச்சு எண்ணம் பரப்பப்பட்டது. அதைத் தொடர்ந்து சூறாவளி வேகத்தில் வகுப்புத் துவேஷம் பரவ ஆரம்பித்தது. நாட்டில் ஒற்றுமையுடன் ஒன்றாகக் கை கோர்த்துப் பவனி வந்த மக்கள் மத்தியில் மொழியினாலும், மதத்தினாலும் பேதங்கள் கற்பிக்கப்பட்டு ஐக்கியம் குலைந்து போக ஏதுவானது.

#### தீர்க்கதரிசனம்

இந்நாட்டில் வதியும் சிங்களவர்களல்லாதோரின் எதிர்காலம் இருண்டதாகிவிடும் என்பதை ஏற்கனவே தீர்க்கமாகக் கண்டு கொண்டிருந்தவர்கள் பலர், தமிழ்பேசும் மக்களுக்கான கல்விக் கூடம் அமைக்க முன்வந்தவர்களிடம்,இம்முயற்சி வருங்காலத்தில் எவ்வளவு பலனையும் அளிக்கப் போவதில்லை. தமிழ் பேசும் மக்கள் தங்கள் தாயகமாகிய வடக்கு கிழக்கு மாகாணங்களைத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் சொத்து உரிமை கொண்டாட விழைவது ஆபத்தில் முடியும்' என்றெல்லாம் தடுத்துப் பார்த்தனர். தீர்க்கதரிசனத்துடன் கூறப்பட்ட வார்த்தைகள், செவிடன் காதில் ஊதிய சங்குக்கு நிகராக்கப்பட்டன.

இரத்மலானையிலுள்ள குடியேற்றத்திட்டத்தில் வசித்தவர்களில் பலர் 1956ம் 58ம் ஆண்டுக் கலவரங்களின் போது நிலைபெயர்ந்து சிதறியோட வேண்டியிருந்தது.

இங்குள்ள இந்துக் கல்லூரி என்னவோ பெயரளவில் இயங்கிக் கொண்டு வந்தது. அரசினர் பள்ளிக் கூடங்களை அரசாங்க உடைமையாக்கியதும் இக் கல்லூரியும் அரசினர் கல்லூரியாக மாற்றப்பட்டது.

#### புதிய திட்டம்

'1963ம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து இரத்மலானை இந்துக் கல்லூரியில் சிங்கள—ஆங்கிலப் பாடசாலை ஒன்றும் இயங்கும்' என்று கல்விஅமைச்சு முடிவு செய்துள்ளதாக அறியப்படுகிறது. இந்தச் செய்தி தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு பேரதிர்ச்சியை அளிப்பதாகும்.

கல்வி அமைச்சின் புதிய உத்தரவொன்றின்படி ஒரு வட்டாரத்திலுள்ள பிள்ளைகள் அதே வட்டாரத்திலுள்ள பள்ளிக்கூடத்தில்தான் கல்வி பயில வேண்டும். இரண்டு மைல் சுற்றளவு கொண்ட ஒரு பகுதிதான் ஒரு பள்ளிக்கூடத்துக்கான வட்டாரமாகும்.

இரத்மலானை இந்துக் கல்லூரியில் பயிலும் மாணவர்கள் அனைவரும் கொழும்பின் பல பாகங்களிலுமிருந்து செல்லுபவர்கள். புதிய திட்டத்தின்படி அவர்கள் தங்கள் தங்கள் இருப்பிடங்களுக்கு அண்மையிலுள்ள பாடசாலைகளுக்கு மட்டுமே செல்லமுடியும்.

எனவே, ஏற்கனவே குறைந்துள்ள மாணவர்களின் தொகை மேலும் குறைந்துவிடும். இரத்மலானை வட்டாரத்தில் குடியிருக்கும் பெருவாரியான சிங்கள மாணவர்களுக்கு மட்டும் இக்கல்லூரி விரைவில் சொந்தமாகிவிடும் என்பதில் சந்தேகமில்லை.

## தோட்டப் பிள்ளைகள் கல்வி பற்றி மந்திரிக்கு எஸ். ஜே. வி. கடிதம்

தோட்டத் தொழிலாளிகளின் பிள்ளைகளுக்குக் கல்வி வசதிகளை மறுப்பதற்கான மறைமுக நடவடிக்கைகளில் கல்வி இலாகா ஈடுபட்டுள்ளதென்றே, கீழ்க்கண்ட சம்பவங்களிலிருந்து விளங்கக் கூடியதாக விருக்கிறது. இவ்விஷயத்தில்நான் தவறாக இருக்க வேண்டுமென்றே விரும்புகிறேன். ஆகவே தான், பள்ளிக்கூடங்களுக்குப் பிள்ளைகளை அனுமதிப்பதில் எந்த விதமான பாரபட்சமும் காட்டப்படக் கூடாதென்று திட்டவட்டமான கட்டளைகள் பிறப்பிக்கப்படுமென்ற திடமான வாக்குறுதியை உங்களிடமிருந்து பெற விரும்புகிறேன்.

இவ்வாறு கல்வி மந்திரிக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் குறிப்பிட்டுள்ளார் அவர் மேலும் அக் கடிதத்தில் கூறுவதாவது:

"14-12-62ல் வெளியாகிய 'டெயிலி நியூஸ்' பத்திரிகையில் காணப்படும் ஒருசெய்தியின்படி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தூதுகோஷ்டி ஒன்று 13-12-62ல் தங்களைப்பேட்டி கண்டபோது, பிள்ளைகளின் இனத்தைப் பார்க்காது பள்ளிகளில் அனுமதி அளிக்கப்பட வேண்டுமெனக் கேட்டதாகவும், தாங்கள் பிள்ளைகளின் பள்ளி அனுமதிப்பில் எவ்வித பாரபட்சமும் காட்டப்படவில்லையென்று பதிலளித்ததாகவும் தெரிகிறது.

நீங்கள் கூறியிருப்பதாகச் சொல்லப்படும் இந்த வாக்குறுதியைப் பார்த்த பின்னரும், உங்களுடைய கல்வி இலாகா உங்கள் கொள்கையைக் கடைப்பிடிக்கின்றதா, இல்லையா என்பது பற்றி எனக்கு இன்னும் சந்தேகமே. இந்தச் சந்தேகத்தை நான் வெளிப்படையாக ஏன் கூறுகிறேனென்றால், எனது கவனத்துக்கு ஒரு சில உண்மைகள் கொண்டுவரப்பட்டுள்ள காரணத்தினாலேயே. தற்போதைக்கு இரண்டு உதாரணங்களை இங்கு குறிப்பிடுகிறேன்.

முதலாவதாக, ஊவாப் பகுதியின் உதவிக்கல்வி வித்தியாதிபதி, 3-12-62 தேதியிடப்பட்ட, இல. யூபீபி/7098 கொண்ட கடிதம் மூலம், (i) ஆறும் வகுப்புக்குக்கீழ், தோட்டத்துப் பள்ளிகளிலிருந்து வரும் பிள்ளைகளுக்கும் (ii) ஆறும் வகுப்பிலும், அதற்கு மேற்பட்ட வகுப்புகளிலும், இலங்கைப் பிரஜைகளல்லாத பிள்ளைகளுக்கும் அனுமதி அளிக்கக் கூடாதென பஸ்ஸர தமிழ்க் கலவன் பாடசாலைத்தலைமை ஆசிரியருக்கு அறிவித்துள்ளார். இதற்குக் காரணமாக, பள்ளிக்கூடத்தில் இட நெருக்கடியே காரணமெனச் சாட்டுக் கூறப்பட்டுள்ளது. உதவி வித்தியாதிபதி இக் கடிதத்தின் பிரதிகளை எல்லாத் தமிழ்ப் பாடசாலைகள், தமிழ் மொழிவழிக் கல்வியுடைய சிங்களப் பாடசாலைகள், மற்றும் கல்லூரிகள் இவற்றின் தலைமை ஆசிரியருக்கு அனுப்பி வைத்து, விளக்கமும் நடவடிக்கையும் கேட்டு எழுதியிருக்காமல் விட்டிருந்தால், இந்தச் சாட்டு ஒருவருக்கும் எவ்வித தீங்குமில்லாத சாட்டாக விளங்கியிருக்கக் கூடும்.

இரண்டாவதாக, கொழும்பு 5 லுள்ள இசிப்பத்தன பள்ளிக்கூடத்தின் பாலர் பிரிவில், திரு. எம். ஐ. இராமன் என்பவரின் மகன், திரு. இராமன் இலங்கைப் பிரஜை அல்ல என்ற காரணம் காட்டி, அனுமதிக்கப்படவில்லை—அதுவும், திரு. இராமனின் மூன்று மகன்கள் ஏற்கனவே அப்பள்ளிக்கூடத்தில் படித்த வந்த பொழுதிலும். இந்த ஒன்றின் பலத்திலேயே திரு. இராமனுடைய மகனுக்கு அனுமதி அளிப்பதில் முதலிடம் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

## தோ. தொழிலாளர் உரிமை காக்க தொழிற் சங்கம்

### டாக்டர் நாகநாதன் வேண்டுகோள்

ஒரு காலத்தில் மலைநாட்டுத் தமிழ் மக்களுக்கிருந்தது ஒரேயொரு இயக்கம், ஆனால் இன்றோ தோட்டத் தொழிலாளரின் உரிமைகளைப் பறித்த ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுங்கூட அதே தொழிலாளருக்கெனத் தொழிற் சங்கங்களை நிறுவியிருக்கின்றன. இந் நிலையில் தோட்டத் தொழிலாளரின் உரிமைகளுக்காகப் போராடுவதற்கு ஒரு தொழிற் சங்கத்தை நாம் அமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.

இவ்வாறு தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளர் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் மலையக மக்களுக்கென விடுத்த விசேட வேண்டுகோள் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தமது வேண்டுகோளில் மேலும் கூறுவதாவது:

பத்து லட்சத்திற்கு மேற்பட்ட தோட்டத் தொழிலாளர்கள், இலங்கையின் பொருளாதாரத்தின் வாழ்வும், தாழ்வும் தமது கைகளுக்குள் வைத்திருப்பவர்கள், இருந்தும் குடியுரிமை, வாக்குரிமை, மொழியுரிமையற்ற அவல நிலை. இது போதாதென்று தொழிலுரிமைக்கே உலைவைக்கப் பார்க்கிறது இன்றைய அரசாங்கம். இந்த நிலை மாறியாக வேண்டும். இதற்கு முதலாவதாகத் தேவையானது இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களின் ஒற்றுமை ஸ்தாபன ரீதியாக மட்டுமல்லாது, இருந்து வரும் வேற்றுமைகளகன்று ஒரு இனம் என்ற நிலை உருவாகியே தீரவேண்டும்.


காணி விற்பனைக்கு

பிரயோசனமும், கிணறுமுள்ள ஆறுபரப்பு, முழுதும் விலை பத்தாயிரம்.

நடராஜா—ஒன்று,அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

ஆங்கிலம்
ENGLISH
ஆங்கிலப் பாஷையைச்
சிறப்பாக
* பேச
* வாசிக்க
* எழுத
மிகக் குறுகிய காலத்துள் கற்றுக்கொள்ள இலவச விபரங்கட்கு எழுதுங்கள்.
அற்லஸ் ஹோல்,
723, மருதானை றேட்,
கொழும்பு-10.

நத்தார் பண்டிகையை
நன்று கொண்டாட நங்கையர்க்கு வேண்டியவை
லதா மணிப்புரி சாரிகளே!!



லதா
மணிப்புரி
சாரிகள்;
முற்றிலும் புதிய பிளேன்;அன் ஷொட் நிறங்களில்; அழகிய தங்க நூலிழையிலான கீழைத்தேய டிசைன்களாலும் 3" போடர் நெடுகிலும் தங்க நூலால் இழைக்கப் பட்ட டிசைன்களாலும் அலங்கரிக்கப் பட்டுள்ளன.
45" X 6 யார்
சாரிகளுக்கேற்ற பிளவுஸ் புடவைத் துண்டுகளும் உண்டு.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை நாலு நாற்பதைந்திலிருந்து ஐந்து மணி வரை இலங்கை வானொலி வர்த்தக ஒலி பரப்பில் குண்டன் மால்ஸ் ஸ்தாபனத்தார் அளிக்கும் "லண்டன் கந்தையா" நிகழ்ச்சியைக் கேட்டு மகிழுங்கள்.

எலைட் சுப்பர்லோன்
வியாபாரிகள் எல்லோரிடமும் கிடைக்கும்.
ஏக விநியோகஸ்தர்கள்:-
குண்டன்மால்ஸ் லிமிட்டெட்,
மொத்த விற்பனைப் பகுதி: 26, கெய்ஸர் வீதி,
சில்லறை விற்பனைப் பகுதி, 110&114, மெயின் வீதி:
கொழும்பு.
—Myleads/KL. 365/62—


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"இந்தாப்பா, இப்பிடி ஒருக்கா வந்திட்டுப் போ"

புல்வெட்டிக் கொண்டிருந்த சுந்தரம், கத்தியும் கையுமாக 'கேட்டு'க்குவெளியில் நின்று கொண்டிருந்த தியாகராஜனுக்குக் கிட்டச் செல்கிறுன்.

"இந்த மடத்திலை 'சிவராணி' என்ருெரு அம்மா இருக்கிருதானே?"

"பேரைப்பாத்தா சைவப் பேர் மாதிரி இருக்கே ஐயா, சைவ அம்மாமார் ஒருத்தரும் இந்த மடத்திலை இல்லையே!"

"இல்லையில்லை, அந்த அம்மா இங்கையிருக்கிருவென்று நிச்சயமாகத் தெரிஞ்சுதான் வந்திருக்கிறேன்........"

"என்ன ஐயா, அப்பிடி எனக்குத் தெரியாமல் ஒரு சிவராணியம்மா இஞ்சை இருக்கிறதாவது".

"நீயொருக்காப் போய் விசாரித்துக் கொண்டுவாவன்".

"சரி ஐயா நீங்க தேடிற அம்மா எப்பிடியிருப்பாங்க?"

"உன்னுடைய உயரமிருக்கும், மாநிறம், வயது 28, கொஞ்சம் மொத்தமாயிருப்பா, கீழ்ச் சொண்டுக்கும் தாடிக்குமிடையில் ஒரு கறுப்பு மச்சமிருக்கும்".

"ஒஹோ அந்தம்மாவா?, மடத்திலை சேந்து இரண்டு வருஷமிருக்கும்".

"ஓ, ஓ அவதான்".

"அவவின்ரை பேர் மேரியம்மாவாச்சே! நீங்க என்ன சொல்றீங்க" என்று கூறிய வண்ணம் சந்தேகக் கண்களால் நோக்கினுன் சுந்தரம்.

சுந்தரத்தைக் கெஞ்சும் விழிகளால் நோக்கிய தியாகராஜன், "அவவை ஒருக்கா கூட்டி வந்திட்டியெண்டா, எல்லாம் தீர்ந்திடுமே, ஒருக்கா அவவைக் கூட்டிவா" என்கிறுன்.

சுந்தரம் மடத்தை நோக்கிச் செல்கிறுன்.

சிறிது நேரத்தால் மேரி 'கேட்'டை நோக்கி வந்து கொண்டிருக்கிருள். அவள் 'கேட்'டை அணுகிக்கொண்டிருக்கும்போது, தன்னைக் காண வந்த ஆள் யாரென்று குறிப்புத் தெரிந்தவுடன், அதிர்ச்சியுற்று ஒரு கணம் அசைவற்று நின்றுவிட்டு வந்த வழியே திரும்புகிருள்.

"ராணி. உனக்கு ஒருவித சிரமமும் கொடுக்கமாட்டேன், நான் சொல்வதைக் கேட்டுக் கொண்டுபோ, ராணி! ராணி!!" என்று சிறிது உரக்கவே கூறிவிட்டான் தியாகராஜன்.

சிறிது தூரம் சென்ற மேரி திரும்பவும் அசைவற்று நிற்கிருள். திடீரென ஒரு முடிவுக்கு வந்தவளாகத் திரும்பவும் 'கேட்'டை நோக்கி நடக்கிருள்.

இரும்புக் 'கேட்'டுக்கு ஒரு புறத்தில் மேரி, மறுபுறத்தில் தியாகராஜன். இருவருக்குமிடையிலுள்ள தூரம் இரண்டு அடிகளுமில்லை. ஆனல், இருவரின் இலட்சியங்களோ, ஒன்றிலிருந்து மற்றது எத்தனையோ மைல்களுக்கப்பால் நின்றன!

"ராணி என்னை மன்னித்து விடு!" தியாகராஜன் கெஞ்சினுன்.

"மன்னிக்கவேண்டும். எனது பெயர் இப்போது மேரி!"

தியாகராஜனின் இதயம் சுக்குநூருகப் பிளக்கிறது!

"ராணி நீ மதம் மாறிவிட்டாயா?"

"மதம் மட்டும் மாறவில்லை, மறுபிறப்புமெடுத்திருக்கிறேன்!"

"ராணி என்னைக் கொல்லாதே, என்னை மன்னித்து என்னுடன் வந்துவிடு. நான் இறக்கும் வரைக்கும் இனிமேல் உன்னைப் பிரியமாட்டேன், இது சத்தியம்!"

"எனக்கு நிறைய அலுவல் இருக்கு. என்னை ஏன் அழைத்தீர்கள்?"

"ராணி, என் இதயராணி, என்னை மன்னித்துவிடு ராணி!"

"நான் மன்னிப்பதற்கு, நீங்கள் ஒருகுற்றமும் செய்யவில்லையே!" என்று கூறிய வண்ணம் தனது இடத்தை நோக்கி நடக்கலாயினுள் மேரி.

சூத்திரப்பாவை போல் தன்னையே மறந்த நிலையில் வீதியில் நடந்து கொண்டிருந்தான் தியாகராஜன்.

(2)

அன்று தியாகராஜன் ஆபிசால் வீடு திரும்பிய போது வழமைபோல் மனைவியை வாசலில் காணவில்லை. தேடிக் கொண்டு சென்ற போது, அவள் குசினி சன்னலுக்கூடாக வானத்தை வெறிச்சுப்பார்த்துக்கொண்டிருந்தாள்!

பின்புறமாகச் சென்ற தியாகராஜன் மனைவியின் தோளில் தனது வலது கரத்தைப் போட்டபடி—

"ராணி என்ன யோசனை பலமாயிருக்கு......" என்ருன்.

கணவனின் கையைத் தட்டிவிட்டபடி, "விடுங்கோ என்னைத் தொட வேண்டாம்" என்று சீறினுள்.

ஒழுக்கமுள்ள பெண்கள் தங்கள் வசமுள்ள எதையும் பிற பெண்கள் விரும்புவதையோ, உரிமை கோருவதையோ சகித்துக் கொண்டாலும் தனது கணவனை மட்டும்......!

உண்மை அழிவதில்லை. தூய்மையான அன்பும் அதே போன்றது தான்.

"கோபதி"



கண்களிலிருந்து ஊற்றெடுத்த நீர் கண்ணுடிக் கன்னத்தால் வழிந்து மார்பகச் சேலையை நனைத்துக் கொண்டிருந்தது! இதழ்கள் வார்த்தைகளை விளக்கத் துடித்துக் கொண்டிருந்தன!

தியாகராஜன், மனைவியின் முகத்தை நிதானமாகப் பார்த்தவாறு,

"ராணி, இதன் அர்த்தம் என்ன?" என்ருன்.

அடக்கமுடியாத அழுகையின் மத்தியில் சிவராணி கூறுகிருள்.

"ஊர் பேசுவது உண்மையா?"

"என்னத்தைப் பேசுது?"

"உங்களையும் கமலாவையும் பற்றி"

"எப்பிடிப் பேசிது?"

"கமலா உங்களுக்கு கர்ப்பம்......"

"தரித்திருக்கிருள் தான் அதற்கென்ன? உன்னேடு ஏழுவருடங்கள் வாழ்ந்து என்ன சுகத்தை நான் கண்டுவிட்டேன்! காலமெல்லாம் உன்னை நம்பி ஒரு அடிச்சுவடு இல்லாமல் அழிந்து போகச் சொல்விறியா?" என்று பொங்கினுன் தியாகராஜன்.

கணவனின் வார்த்தைப் பாணங்களின் வெம்மை தாங்க மாட்டாதவளாய், சிவராணி அந்தக் கணமே வீட்டைவிட்டு வெளியேறிவிட்டாள்.

(3)

கமலா, தியாகராஜன் வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் குடியிருந்த வயித்தியலிங்கத்தின் ஏக புதல்வி. தியாகராஜன் ஒரு கணிதப் புலி! சிரேஷ்ட தராதரப் பத்திர வகுப்பில் படித்துக்கொண்டிருந்த கமலாவுக்குக் கணிதப் பாடம் சொல்லிக் கொடுக்கத் தனது கணவனை சிவராணி ஒழுங்கு செய்யும் போது, கமலா தன்னுடைய வாழ்க்கையை அபகரிப்பாளென்று கனவிலும் அவள் கருதவில்லை!

கமலாவுக்குக் கணிதப் பாடம் சொல்லிக் கொடுக்கத் தொடங்கிய தியாகராஜன் காலக் கிரமத்தில் காதற் பாடமே அவளுக்குச் சொல்லி கொடுத்துவிட்டான்!

சிவராணி வீட்டைவிட்டு வெளியேறிய இரண்டாவது மாதம் கமலா சிவராணியின் ஸ்தானத்தைக் கைப்பற்றிக் கொண்டாள், தியாகராஜன்—கமலா தம்பதிகளின் வாழ்க்கை இன்பகரமாக ஓடிக்கொண்டிருந்தது. கமலா தியாகராஜன் வீட்டுக்கு வந்த ஆரும் மாதம் ஒரு ஆண் மகவைப் பெற்றெடுத்தாள்.

தியாகராஜன் இப்பொழுது வானத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தான். கமலாவின் மருட்டும் விழிகளும் மயக்கும் மொழியும் தியாகராஜனுக்கு, அவனைச் சட்டப்படி கைப்பிடித்த மனைவியின் எண்ணத்தையே மறக்கச் செய்துவிட்டன.

(4)

சிவராணியின் வாழ்க்கையில் சகல சௌகரியங்களிருந்த போதிலும், குழந்தையில்லாத ஒரு குறையால், மற்ற எந்தச் சௌகரியங்களுமிருப்பதாக அவளுக்குத் தோன்றவில்லை!

குழந்தைகளின் மீது அலாதி பிரியமுள்ள தனது கணவனுடைய ஆசைக்குஒரு மகவைப் பெற்றளிக்க அவள் துடியாய்த் துடித்தாள்!

எதிர் வீட்டில் பிள்ளைத் தொட்டில் ஆடுவது கண்ணில் பட்டால் அவளது இதயம் ஆட்டமெடுக்கும்! பக்கத்து வீட்டில் பச்சிளங் குழந்தையின் அழுகைக் குரல் கேட்டால் அவளுடைய நெஞ்சு நினைவையிழக்கும்! பசு, கன்றுக்குப் பால் கொடுக்கும் காட்சியைக் கண்டால் அவளுடைய உள்ளம் பாகாய் உருகும்.

"எனக்கு ஒரு குழந்தையைக் கொடுத்தபின், வேண்டுமானுல் என் உயிரையே எடுத்துக்கொள்!" என்று அவள் வேண்டாத தெய்வமில்லை. இந்த நிலையில் கணவனே கதியென்றிருந்த அவள் கணவனின் கொடூரமான வார்த்தைகளைக் கேட்டு புழுவாய்த் துடித்தாள்!

வீட்டை விட்டு வெளியேறிய சிவராணி, பெரும்பாலான பெண்களைப்போல் கணவனுற் புறக்கணிக்கப்பட்டதுடன் வாழ்க்கையில் வெறுப்புற்று தற்கொலை செய்ய அவள் முற்படவில்லை. தான் பிறவியெடுத்தது, வாழ்ந்து, மணமுடித்து மக்களைப் பெறுவதற்கு மட்டுமல்ல, அதிலும் உன்னத சேவைக்குத் தன்னைப் பயன்படுத்தலாம் என்ற பரந்த நோக்கதைப் பெற்றிருந்தபடியால், அவள் ஒரு கிறிஸ்தவ கன்னியாஸ்ரி மடத்தில் சேர்ந்து, அனுதைப் பிள்ளைகளுக்குச் சேவை செயயும் வாய்ப்பைப் பெற்றுக் கொண்டாள்.

(2)

தியாகராஜனும், கமலாவும் தம்பதிகளாகி இரண்டு வருடங்கள் உருண்டு விட்டன. இதுகாறும் அவர்களுடைய வாழ்க்கை ஒரே 'குஷி'யாகவேயிருந்தது! அவர்களுடைய ஆனந்த வாழ்க்கைக்கு மெருகூட்ட அவர்களின் செல்வக் குமாரன் மோகன் வேறிருந்தான்!

ஒருமுறை தியாகராஜனுக்கெட்டிய வதந்தியொன்றை ஆரம்பத்தில் அவன் நம்பவேயில்லை, நாட்கள் செல்லச் செல்ல அவ்வதந்தி அவனதுஉள்ளத்தில் விசுவரூபமெடுத்தது!

ஒரு நாள் கமலாவை அது பற்றி நாசுக்காக அவள் கேட்டபோது, கமலா தேள் கொட்டியவள் போலத் துடித்தெழுந்தாள்!

"என்ன அத்தான், என் மேல் சந்தேகமா உங்களுக்கு? நாங்கள் சந்தோசமாக வாழப் பொறுக்காத கயவரின் கட்டுக் கதையை நம்பிவிட்டீர்களா?"— விசித்து விசித்து அழத் தொடங்கிவிட்டாள் கமலா!

அவளின் அழுகையைத் தேற்றுவதே பெரும் சிரமமாய்ப் போய்விட்டது தியாகராஜனுக்கு! அன்றிலிருந்து அக்கதையை எடுக்கவே அவனுக்குப் பயமாயிருந்தது! ஆனல் அவனுடைய நெஞ்சில் முளையிட்ட சந்தேகம் மட்டும் கருகிவிடவில்லை.

ஒரு நாள் தியாகராஜன் கமலாவுக்குத் தெரியாமல் காரியாலயத்தில் அரைநாள் லீவு எடுத்துக் கொண்டு வீட்டிற்கு வருகிறுன்.

வீட்டுக் கதவு உட்புறத் தாழ்ப்பாள் போடப்பட்டிருக்கிறது.

"டொக்...டொக் டொக்"

"..............."

"டொக்...டொக்... டொக் ...டொக்..."

"............"

(13-ம் பக்கம் பார்க்க)


# ரிஷி
## அஜமாமிச லேகியம்

ஆட்டிறைச்சியின் சுத்தமான சத்துக்களோடு பல விலை உயர்ந்த மூலிகைகளையும் சேர்த்து தயாரிக்கப்பட்ட சிறந்த லேகியம். இதை பாவித்து வந்தால் தேக புஷ்டியும், வீரியமும், திடகாத்திரமும், கெம்பீர தோற்றமும் உண்டாகி சரீரத்தில் உள்ள சகல வியாதிகளையும் சூரியனைக் கண்ட பனிபோல மறைத்துவிடும். ஆண், பெண் இருபாலரும் சாப்பிட உகந்தது. இல்லற வாழ்க்கைக்கு இன்றியமையாதது. பத்தியமில்லை.

விலை 1 ருத்தல் ரூபா 35/00
" ½ " ரூபா 22/50

[தபாற் செலவு 95 சதம்]

ஆயுர்வேத டாக்டர்:
T. H. மதுரநாயகம் வைத்தியராஜ்

ஞானசுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தடுப்புக் காவலில் நாம்' 20.



## அன்பு மகள் அன்பரசிக்கு,

தடுப்புக் காவல் நிலையம்,
பனுகொடை,
ஹோமகம.
29-5-61

மகளே அன்பரசி!

நேற்று உனது அம்மாவின் மடல் கிடைத்தது.

"—நாற்பது நாட்கள் ஹோமகம மேன் மாடியில் இருக்கின்றீர்கள். 'நல்ல ஒரு காரணமே என்னைச் சிறைக்கு அழைக்கின்றது மணி' என, பொலிசார் கைது செய்யும்போது கூறிச் சென்றீர்கள். அக்கூற்றை என்னால் மறக்க முடியவில்லை. எனினும் ஒவ்வொரு நாட்களும், ஒவ்வொரு நிமிடமும் உங்கள் எண்ணத்திரள்களைஏந்தி. இதயபாரத்தையேற்படுத்தி விடுகின்றனவே. அப்பா! அப்பா!! எனச் செல்லமாக, எங்கள் செல்வமகள் அன்பரசி கூப்பிடும்போது, அவ்வொலி உங்களையடையவில்லையா? நீங்கள் போகும் போது இருந்த தோற்றத்தில் எங்கள் மகன் அன்பழகன் இன்றில்லை. பொக்கைவாய் திறந்து சிரிக்கிறான்; காலையசைத்து ஒலி எழுப்புகிறான். அன்பழகனின் ஆரம்ப வளர்ச்சி நேரத்தில் தாங்கள் பக்கமில்லையே என்பதை எண்ண, வேதனைதானே உண்டாகும். 'சிலர் விடுதலை பெறுகின்றனர்' என வானொலியும் பத்திரிகையும் கூறின. சிலவேளை தாங்களும் வரலாமெனக் கற்பனை செய்தேன். கற்பனை கற்பனையாகவே உள்ளது. பிரதமர் சிறிமாவுக்கும் மூன்று குழந்தைகளுண்டே, தாய்மையுணர்ச்சி இருக்க வேண்டுமே! உரிமையையும் பறித்து, எத்தனை குடும்பங்களைப்பிரித்து வைத்து மகிழ்கின்றார். ஒரு பெண்ணுக்கு இது தெரியவில்லையா? ஈழ நாட்டின் சாபக்கேடுதான். போகட்டும், இந்த அநியாய ஆட்சிபீடம் இன்னும் எத்தனை நாட்கள், மேன்மாடியில் அடைத்து வைப்பார் எனவும் பார்த்து விடுவோமே......—" இந்தக் கருத்துப்பட உன் அம்மா எழுதியிருந்தார். இம்மடலை இரகசிய பொலிஸ் பகுதி எப்படி அனுமதித்தது என்பது புதுமை. இம்மடலைப் படித்து அனுமதி கொடுப்பவரும் யாரோ ஒரு தமிழராகத்தானேயிருக்க வேண்டும். தமிழனிடம் தமிழன் என்ற உணர்ச்சி இல்லாமலா போக முடியும்!

இம்மடல் என் உடலை மேன்மாடியிலிருத்தி, உள்ளத்தை உங்கள் அருகே கொண்டு வந்துவிட்டது.

பின்பு...... எண்ணம்......... எண்ணம் ......எண்ணம்! உன் அம்மா, நீ, உன் தம்பி அன்பழகன்...... யாவரும் வந்தீர்கள்...... பின்பு, பெருமூச்சு மட்டுமே பறந்தது.

மகளே! எதையும் தாங்கும் இதயம் வேண்டுமாமே! .........மகிழ்வாக இருங்கள், ஓடிவரும் நாள் வராமல் போகாதடா.

**புதுமை லோலன்**

### கொழும்புக்குச் சென்றேன்

சென்றமடலில் கொழும்பு அழைத்துப் போவர் என எழுதினேனல்லவா?

உன் அப்பா ஓர் ஆசிரியர் அல்லவா? ஆகவே, பாடசாலைக்குப் போக விடாது தடுத்து வைத்திருப்பதால் —இந்த நாட்கள் எந்த லீவாகக் கருதப்படும்;—என்பதே தெரியவில்லை. 'ஏன் பாடசாலைக்குப்போகவில்லை' என்பதை அறியத் தரவேண்டியது எங்கள் கடமைதானே! இங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆசிரியர்கள் அனைவரும், பாடசாலைக்குப் போக முடியாமையை அறிவித்தோம்.

அந்த அறிவித்தலின் படி எம்மை அழைத்திருக்கின்றனர் இன்று.

இன்று என்னையும் திருமலையைச் சேர்ந்த ஆசிரியர் சிவகுரு அவர்களையும் அழைத்தனர்.

காலை எட்டு மணியளவில் என்னையும், ஆசிரியர் சிவகுரு அவர்களையும் பொலிஸ் ஜீப்பில் ஏற்றினர். ஜீப்பின் முன் ஒரு உதவிப் பொலிஸ் அதிகாரி, ஜீப்பில் எங்கள் அருகே துப்பாக்கியுடன் ஒரு பொலிஸ்.

ஜீப் எங்கள் முகாமை விட்டுப் புறப்பட்டது. இராணுவ வீரருக்குக் கட்டும் புதிய பெரிய கட்டிடங்கள் இரு மருங்கும் காணப்பட்டன. ஆட்சியினர் இராணுவத்திற்குச் செய்யும் செலவை அறிய முடிகின்றது. எங்கும் ஒரே கட்டிடமயம். இடைக்கிடை இராணுவ காவலிடங்கள். அக்காவலிடங்களில் ஜீப் நிற்கும், பொலிஸ் அதிகாரி கைச்சாத்திட்டே சென்றார்.

### விடுதலை வேட்கை

பனுகொடை ஊடாக ஜீப் ஓடுகின்றது. இருபுறமும் ஆவலுடன் கடைகளை, வீடுகளைப் பார்த்தோம். சுதந்திரமாகச் செல்லும் மக்களைக் காணக் கொஞ்சம் பொறுமை உண்டாகத்தான் செய்தது.

அதோ ஒருவர் சைக்கிளில் உல்லாசமாகச் செல்கின்றார். அதே போன்று யாழ்ப்பாணத் தெருவில் யானும் போன எண்ணங்கள் முட்டுகின்றன.

அதோ ஓர் மோட்டார் வண்டி வேகமாகப் பறக்கின்றது. அதே போன்று யானும் போன சிந்தனை உடைப்பெடுக்கின்றது.

அதோ ஒரு தந்தை. அவர் கரத்திலே ஒரு குழந்தை, பக்கத்தே நடந்தபடி இன்னேர் பிள்ளை. அத் தந்தை யானுகின்றேன்...... 'கரத்தில் அன்பழகன், பக்கத்தே நடந்தபடி நீ......' இப்படியான எண்ணச் சிலம்பம். கோமகம ஊடாக ஜீப் ஓடுகின்றது. அவிசாவலையிலிருந்து கொழும்பு செல்லும் பெரிய தெரு இது. வண்டிகள் போவதும் வருவதுமாயுள்ளன.

ஒரே சன நெரிசல். வண்டிகளின் கும்பல். வந்து விட்டோம் கொழும்பு மாநகரம். எத்தனை நாட்களுக்குப் பிறகு,பல மனித முகங்களைப் பார்க்கின்றோம். வாகனங்களை, அவை செல்லும் அழகை, கடைகளை, அங்குள்ள பொருட்களை எல்லாம் பார்க்கின்றோம். பொலிசாரின் பாதுகாப்பில் போகும் எங்களையும் சில கண்கள் பார்க்கின்றன. ஏதோ குற்றம் செய்ததமைக்காகப் பொலிசார் பிடித்துப் போகிறார்கள்ாக்கும் என அக்கண்களின் சொந்தக்காரர்கள் எண்ணியிருப்பர். காலை பத்து மணிக்கு பதினைந்து நிமிடம்வரையுண்டு.

### சொலிஸிற்றர்-ஜெனரலுடன் சம்பாஷணை

கொழும்பு சொலிஸிற்றர்-ஜெனரல் கந்தோர் அருகே ஜீப் வந்து நின்றது.

முன்னே பொலிஸ் அதிகாரி, இடையே யானும் சிவகுருவும் [illegible] பின்னே, துவக்கை நீட்டியபடி பொலிஸ் காவலர். கந்தோருள் நுழைந்தோமா? கந்தோரில் வேலை செய்வோர் கண்கள், ஆவலுடன் இந்தக் காட்சியைக் காண்கின்றன.

அக்கண்களிலே சில தமிழ்க் கண்கள். தமிழ்க் கண்களிலும் இரண்டு கண்கள் என் கண்களைப் பார்க்கின்றன. என்ன ஆச்சரியம்! எனது ஊர்த் தோழன் ஒருவனின் கண்களல்லவா? அக்கண்களின் சொந்தக்காரனைப் பார்த்தேன். யான் எண்ணிய அதே அவர், பேச வருகின்றார்...... பொலிஸ் அதிகாரி விடுவாரா என்ன? நாம் தடுப்புக்காவல் கைதிகளல்லவா?

கண்கள் பேசுகின்றன; கலங்கிவிட்ட கண்கள்ஆகின்றன. சீ! இதற்கெல்லாம் கண்ணீர் விடுவதா? என்னால் சிரிக்கவே முடிந்தது.

'லிவ்ற்'றில் ஏற்றுகின்றனர். பக்கத்தே அப்போதும் பொலிஸ் அதிகாரியும் பொலிசும்.

சொலிசிற்றர்- ஜெனரல் அலுவலகம்.

முதல் ஆசிரியர் சிவகுருவை அழைத்தனர். அறையுள் பொலிஸ் அதிகாரியுடன் போனார். எனக்குக் காவலாகப் பொலிஸ் நின்றார். இருபது இருபத்தைந்து நிமிடங்களின் பின்பு ஆசிரியர் சிவகுரு முறுவலுடன் வந்தார்.

அடுத்து என்னை அழைத்தனர். சொலிசிற்றர்-ஜெனரல் சிறிமானே நடுவே உட்கார்ந்திருக்கச் சூழ வர இருவர் உட்கார்ந்திருந்தார்கள். எமது விசாரணையைப் பதிவு செய்ய ஓர் பெண் லிகிதரும் இருந்தார்.

சிறிமானே அவர்களே யாவற்றையும் கேட்டார். அவற்றுக்கெல்லாம் பதில் கூறினேன். உள்ளதை உள்ளபடி கூறினேன்.

சொலிஸிற்றர் ஜெனரல்: புதுமை லோலன் என்று சொல்லப்படுகின்ற கந்தையா கந்தசாமி நீங்கள் தானே.

நான்: ஆம்.

சொ. ஜெ: நீங்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சியில், செயற்குழு அங்கத்தவர் அல்லவா?

நான்: ஆமாம்.

சொ. ஜெ: நீங்கள் கட்சியில் நிரந்தரமாக உள்ள அங்கத்தவரா?

நான்: உண்மை.

சொ. ஜெ: கட்சிக்கு வருடா வருடம் சந்தா கட்டும் அங்கத்தவர் தானே!

நான்: அப்படியிருக்காது விட்டால் செயற்குழுவில் அங்கம் வகிக்க முடியாதே!

சொ. ஜெ: நீங்கள் கட்சியின் பிரதான பேச்சாளருள் ஒருவர் அல்லவா?

நான்: கட்சிக் கொள்கையில் நம்பிக்கையுண்டு. அதை மக்களுக்கு விளங்கப் பேசி வருபவன்.

சொ. ஜெ: சத்தியாக்கிரகத்தின்போது, வகுப்புத் துவேசமுடன் சில மேடைகளில் பேசி மக்களைச் சத்தியாக்கிரகம் செய்யத் தூண்டியுள்ளீர்? மெய்தானே! உங்களது பேச்சுக்கள் யாவும் பதிவு செய்யப்பட்டு-அதாவது 'ரேப் றெக்கோடிங்' மூலம்—பிரதமர் அலுவலகத்துக்கு வந்துள்ளன.

நான்: பேசியது உண்மை. உணர்ச்சியுடன் பேசியிருப்பேன் என்பதையும் ஒப்புக்கொள்கின்றேன். ஆனால் வகுப்புத் துவேசம் உண்டாகக் கூடியதாகப் பேசினேன் என்பதை மறுக்கிறேன். பிரதமர் அலுவலகத்தில் உள்ள என் பேச்சுப் பதிவைப் போட்டுப் பார்த்தால் உண்மை தெரியும்.

சொ. ஜெ: என்ன சாரப்பட மேடைகளில் பேசியிருப்பீர்?

நான்: சிங்கள மக்களும் தமிழ் மக்களும் நெடுங்காலம், இந் நாட்டில் சகோதரராக வாழ்ந்தவர்கள். அதே போன்று அவர்களது மொழிகளாய சிங்களமும், தமிழும் கைகோர்த்தபடி வாழ்ந்தவை. ஆங்கிலம் அரசோச்சிய காலத்திலும், இம் மொழிகள் தகுந்த இடத்திலே வைக்கப்பட்டு இருந்தவை. இப்போது ஒரு மொழி அரசுகட்டிலிலும், இன்னேர் மொழி குப்பைத் தொட்டியிலுமா? இது நியாயமா? இரண்டு மொழிகளும் ஈழ மாதாவின் இரு கண்களும் போல ஏன் அமையக் கூடாது! ஒற்றுமையாக இரண்டு இனம்—தமது சுயநிர்ணய உரிமை மாசுறாது—பெருமையுடன் வாழ கூட்டாட்சியே (Federalism) மார்க்கம். ஜனநாயக வழியில் ஆண்டாண்டாக ஆட்சி பீடத்தைத் தமிழ் பேசுமினம் கேட்டாயிற்று.

கடைசி மார்க்கம் போராட்டம். சனநாயக நாட்டில் அடக்கப்பட்ட இனம் செய்யக் கூடிய பண்புடையபோராட்டம் தானே சத்தியாக்கிரகம். அதைத்தான் நாமும் செய்ய வேண்டும். பண்புடன், எங்கள் உரிமை கோரிச் செய்வோம்...... இப்படியான சாரப்படவே பேசுவேன். சிங்களவரையோ, சிங்கள மொழியையோ எங்கள் கட்சிப் பேச்சாளர் தூசிப்பது கிடையவே கிடையாது.

(மிக ஆவலுடன் சொலிசிற்றர்-ஜெனரல் கேட்டபடியிருக்கிறார்)

சொ.. ஜெ: நீங்கள் பாடசாலைக்குப் போக விரும்பவில்லையா?

நான்: யான் போகத்தான் விரும்புகின்றேன். அரசாங்கம் அல்லவா தடுத்து வைத்துள்ளது.

சொ. ஜெ: (சிரித்து விட்டு) கடைசியாக என்ன கூற விரும்புகின்றீர்.

நான்: கடைசியாக நான் கூறக் கூடியது, யான் ஒரு தனிப்பட்ட முகாமையின் கீழ் உள்ள பாடசாலை ஆசிரியன். ஆகவே அரசியல் உரிமை இருக்கின்றது. ஜனநாயக உரித்துக் கருதி ஒரு பிரஜை தன்னாலானதைச் செய்ய முடியும். இது ஜனநாயக உரிமை, அதையே யானும் செய்தேன்.

சொ. ஜெ: (பக்கத்தே இருந்த பெண் லிகிதரைப் பார்க்கிறார். நாங்கள் பேசியவை யாவும் பதிவு செய்தாயிற்ற என்கிறார். அப்பெண் ஆம் என்கிறாள்) போகலாம்.

நான்: வணக்கம்.

அறைக்கு வெளியே வருகிறேன். ஆசிரியர் எதிர்பார்த்தபடியுள்ளார்.

ஜீப்பில் ஏறினோம். ஜீப் புறப்பட்டு விட்டது. கொழும்பைப் பார்த்தபடியிருக்கிறோம்.

ஆசிரியர் சிவகுருவை என்ன கேட்டனர் எனக் கேட்டேன். அவர் கூறினார்: "கட்சியின் செயற் குழு உறுப்பினர். கட்சியின் பிரயான உறுப்பினன். சத்திதாக்கிரகத்தின் போது முழு மூச்சாக நின்று நடாத்தியவர்" என்பதாகக் கேட்டார்களாம். அதைத்தான் ஒப்புக் கொண்டதாகவும் கூறினார் ஆசிரியர்.

(13-ம் பக்கம் பார்க்க)

# அன்பின் திருவுருவம் இயேசு நாதர்

—மட்டுநகர் முத்தழகு—

உலக நாடுகளெல்லாம் அன்பைத் தேடித் தவிக்கும் இந்த நேரத்தில், அன்பாலே உலகையாள அவதரித்த திவ்விய பால இயேசுவின் பிறந்த நாளான நத்தார் திருநாளான இந் நாளில், உலகெலாம் அவரை நினைவு கொண்டு "நடுச்சாமப்பூசைப் பலி" காணுவது குறிப்பாக கிறிஸ்தவர்களின் முக்கிய கடன்.

"பிறப்பிலும் புதுமை தான்! இறப்பிலும் புதுமை தான்! தந்தவர் இயேசு தான்!" மாட்டுக் கொட்டிலை மாளிகையாக அமைத்து; நாட்டு மக்களாகப் பாவினங்கள் பக்கத்தில் அமர்ந்திருக்க, கொட்டும் கடும் குளிரைத் தடுப்பதற்குப் பட்டாடைக்குப்பதில் 'வைக்கோல்' போர்வையில் படுத்துறங்கினார்! யூதேயாவிலுள்ள பெத்லகேமில் இயேசு பிறந்த பொழுது, கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் எருசலேமுக்கு வந்து "யூதருக்கு இராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு, அவரைப் பணிந்து கொள்ளவே வந்தோம்! என்றார்கள். ஏரோது இராஜாவும் அவரது அமைச்சர் அவையும் அதுகேட்டுக்கலங்கினர்; பட்டமும் பதவியும், பறிமுதலாகுமுன் பிறந்த பாலகனைக் கொல்லத் திட்டங்கள் தீட்டினான்! அதற்கு சாஸ்திரிகளைச் சாதகமாக அழைத்தான்! நீங்கள் போய் பிறந்த பாலகனைக் குறித்து திட்டமாய் விசாரித்துகண்டு பணிந்த பின்புநானும் வந்து பணிந்து கொள்ள எனக்கும் அறிவியுங்கள், என்று சொல்லி அவர்களை அனுப்பி வைத்தான். சாஸ்திரிகளுக்கு வழிகாட்ட வந்த 'நட்சத்திரம்' பாலனின் குடிசைக்கு மேலே வந்து நிற்கும்வரை அவர்களுக்கு வழிகாட்டியாகவே அமைந்தது. அந்தக் குடிசைக்குள் பாலகனையும், பாலகனின் தாயாகிய மரியாளையும் கண்டு விழுந்து, பணிந்து, பொன்னையும் தூபவர்க்கத்தையும், வெள்ளைப் போளத்தையும் காணிக்கையாக வைத்தார்கள். பின்பு, ஏரோதினிடத்திற்குச் செல்ல வேண்டாம் என்று தேவனால் எச்சரிக்கப்பட்டு வேறு வழியாகத் தங்கள் தேசத்துக்குப் போனார்கள்.

தீய எண்ணம் கொண்ட ஏரோது ஏடுகளாலும் மறைக்கப்பட்டான். அன்பு உள்ளம் கொண்ட இயேசு, அன்பர்கள் உள்ளங்களில் அன்றும், இன்றும், என்றும் அழியாத ஓவியமாகத் திகழ்வதும் காலம் சொல்லும் கதைகளில் அன்பிற்கே முதலிடம் கொடுப்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது விமர்சனம்

கோடி கோடி இன்பம் தரவே

# ஆடவந்த தெய்வம்

ஆனந்தன் ஒரு பணக்கார இளங் கலைஞன். அவனுடைய முறைப் பெண்ணான கல்யாணி கலைவாணியாக அவன் வீட்டை வந்தடைகிறாள். தெருக்களில் நடனமாடி நாணயமாகப் பிழைக்கும் தங்கை பைரவிக்கும், ஆனந்தனுக்கும் ஏற்கனவே காதல் பிறந்திருந்தது. கல்யாணி இதை அறியாது ஆனந்தனை மனதார நேசிக்கிறாள். ஆனந்தன், கல்யாணி ஆகிய இருவருக்கும் கலைத்துறையில் ஏற்பட்ட தொடர்புடன் வாழ்க்கைத் தொடர்பையும் ஏற்படுத்தி விட ஆனந்தனின் தாயார் முயலுகிறாள்.

கலை விழாவில் நடைபெற்ற ஒரு அசம்பாவித நிகழ்ச்சி ஆனந்தனை புத்தி சுவாதீனமற்றவனுக்கிறது. அவனைக் குணப்படுத்தும் பொறுப்பு பைரவிக்குக் கிடைக்கிறது. கலையால் பிடித்த பைத்தியம், கலையாலேயே நீங்குகிறது. பைரவியும் கல்யாணியும் ஒருவர் காதலை மற்றவருக்காகத் தியாகம் செய்ய முற்படுகின்றனர்.

இத்தகைய முக்கோணக் காதலை மையமாக வைத்து இதுவரை பல திரைப்படங்கள் உருவாகியிருக்கின்றன. ஆடவந்த தெய்வமோ கலையை ஆதாரமாகக் கொண்டு எழுந்த கற்பனை. இயக்குநர் ப. நீலகண்டனின் திறமையினலும் வேறுபல கலை அம்சங்களினலும் படம் சிறப்புப் பெற்றுள்ளது.

ஒரு வாரப் பத்திரிகையில் 'எல்லார்வி' 'கலீர் கலீர்' என்ற பெயரில் இக்கதையை எழுதியிருந்தார். அநேக வாசகர்களின் கவனத்தைக் கவர்ந்தது இக் கதை. இந்திரா பிலிம் சார் 'கலீர் கலீ'ரை சிறப்பான திரைக் காவியமாக்கித் தந்துள்ளனர்.

ஆடவந்த தெய்வமாக கல்யாணியாக வந்து நம் உள்ளத்துமேடைகளில் ஆட்டம் போடுகிறார் அஞ்சலி தேவி. கலைஞன் ஆனந்தனாக, கர்ணமிர்த இசைவாணனாக வந்து தன்னிசையால் நம்மை மெய் மறக்க வைக்கிறார் மகாலிங்கம். 'ஆசை கொண்டேன் அமுதமே', 'கோடி கோடி இன்பம் தரவே', 'சொட்டு சொட்டு சொட்டுன்னு' ஆகிய பாடல்கள் மகாதேவனின் இசையில் மூழ்கி நம்மை மெய் மறக்க வைக்கின்றன.

பைரவியாகத் தோன்றி தனது துள்ளல்களாலும், துடிப்பான நடிப்பாலும் குறும்புகளாலும் நமக்கு இன்பமூட்டுகிறார் ஈ. வி. சரோஜா.

ஆனந்தனின் சித்தப்பாவாக எம். ஆர். ராதா வருகிறார். அடக்கமாக நடிக்கிறார். அளவான வசனங்கள் கொடுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. ஏ. கருணாநிதி, பக்கிரிசாமி ஆகியோரும் தொடர்பு கொண்டு சிரிப்பூட்டுகின்றனர்.

கணக்கப்பிள்ளையாக வரும் தட்சணாமூர்த்தியின் இராமாயண கதாகாலட்சேபம் மணிப்பிரவாள நடையில் அமைந்து நம்மைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைக்கிறது.


மற்றும் சிதாலட்சுமி, லட்சுமி பிரபா, மனோரமா ஆகியோரின் நடிப்பு, சோபையூட்டுகின்றது.

இன்னிசை, நடனம் முதலியவை மலிந்து விளங்கும் 'ஆடவந்த தெய்வம்' ரசிகர்களின் உள்ளங்களை நன்ருக ஆட்டி வைக்கும் என்பதில் ஐயமில்லை.

-நாதன்-



பட்ட அடி பலமானதுதான்... ஆனால் பட்டிக்கைகள் பட்டவுடன் பறந்தோடிவிட்டதே வேதனை......இதன் இரகசியத்தை அறிய வேண்டுமா?... 'ஆடவந்த தெய்வ'த்தைப் பார்த்தால் தெரிந்து விடும். (ஈ. வி. சரோஜா, மகாலிங்கம்)



மனிதா!
நீ செய்த பாவங்களை நான் ஏற்றேன்...உன்னை வாழ வைக்க சிலுவையிலே என்னுயிரையே அர்ப்பணித்தேன்...ஆனால் நீ திருந்தவேயில்லையே...உன் வாழ்வை இன்னும் நீ மாற்றவில்லையே! என்று யேசு பெருமான் இக்கிறிஸ்தோதயத்தில் நம்மை [illegible] கொழும்பு [illegible] ராஜன் (King of Kings) ஆங்கிலப் படத்தில் இயேசு பெருமானாகத் தோன்றும் ஜிப்றி ஹண்டர்.

### நாடகப் பரிசளிப்பு விழா

'பதிவுத் திருமணம்' நாடகத்தில் நடித்தவர்களுக்கான போட்டியில் பரிசு பெற்றவர்களுக்குப் பரிசளிக்கப்பட்டது. பரிசளிப்பு விழா கோலபேஸ் ஹோட்டலில் கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

நாடகத்தில் சிறந்த நடிகராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. இராஜேஸ்வரனுச்கு திரு. சிவாஜி துரை வெற்றி விருதுவழங்கினர்.

மற்றும் சிறந்த நடிகர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கு திரு. சிவாஜி துரையே பரிசு வழங்கினர்.

போட்டியில் கலந்து கொள்ளாதவர்களான நாடக ஆசிரியர் திரு. ரொஸாரியோ பீரிஸ், திரு. சண்முகநாதன் ஆகியோரும் மலர் மாலைகள் அணிவித்து கௌரவிக்கப்பட்டனர்.

லடிஸ் வீரமணிக்கும் பெண் பாகத்தில் தோன்றிய நடிகை செல்வி வேலாயுதம் அவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

### ராதாவுக்குத் தண்டனை

'தூக்கு மேடை' என்ற நாடகத்தை மேடையேற்றக்கூடாது என்று சென்னை அரசு தடை விதித்திருந்தது. அதே நாடகத்தை 'காதல் பலி' என்ற பெயர் மாற்றத்துடன் நடிகவேள் எம். ஆர். ராதா மேடையேற்றினர். தடை செய்யப்பட்ட நாடகத்தை வேறு பெயரில் மேடை ஏற்றியமைக்காக ராதாவின் பேரில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கை விசாரித்த சென்னை 4வது மாகாண மெஜிஸ்டிரேட் ராதாவுக்கு ரூபாய் 200 அபராதம் விதித்தார். அபராதம் கட்டத் தவறினல் 3 வார சிறைத் தண்டனை என்றும் தீர்ப்பு வழங்கப்பட்டது.

## கலைப்பூஞ்சோலை



சோறு சாப்பிடக்கூட விடமாட்டேங்கிறானுகளே இந்த சோதாக்கள்...அண்ணே!...என்னண்ணே நீயும் பேசாமப் பாத்திண்டிருக்கே...விடண்ணே ஒண்ணு... என்று தங்கவேல் எம். ஜி. ஆரைக் கேட்கிறார் போலிருக்கிறது...விக்கிரமாதித்தனில். விரைவில் என்டர்டெயின்மென்ட் திரைகளுக்கு விக்கிரமாதித்தன் வருகிறான்.

# நவீன வசதிகள் கொண்ட புதிய தியேட்டர்

மேலை நாடுகளில் படத் தயாரிப்பில், பல புதிய மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. 'சினிமாஸ்கோப்' முறை புகுத்தப்பட்டு பல வருடங்களாகி விட்டன. கண்களுக்கு அடங்கக்கூடிய அத்தனை காட்சிகளையும் திரையில் ஒரே சமயத்தில் பார்த்து அனுபவிக்கவல்ல அகன்ற திரைப்படங்கள் பல தயாரிக்கப்பட்டன.

அவைகள் பல இலங்கையில் திரையிடப்பட்டு வருகின்றன. இப்பொழுது மேலை நாடுகளில் தயாராகும் படங்கள் பெரிய அளவினதாகவுள்ளன. சாதாரண படங்கள் 35 மிலிமீட்டரில்தான் தயாரிக்கப்படுகின்றன. ஆனால் அதைவிட இரண்டு மடங்கு பெரியதான-70 மிலிமீட்டர் படங்கள் இப்பொழுது உலகத்தின் பல பாகங்களிலும் திரையிடப்படுகின்றன. அப்படங்களை இலங்கை ரசிகர்கள் தத்ரூபமாக அனுபவிக்க முடியாத நிலை இருந்து வருகிறது.

'பென்-ஹர்', 'ஸ்பார்ட்டகஸ்', 'கிங் ஒவ் கிங்ஸ்' ஆகியவை 70 மிலிமீட்டர் பிலிமில் தயாரிக்கப்பட்டவை. ஆனால் நமது உள்ளூர் திரைகளுக்கு ஏற்றவகையில் அவை 35 மிலிமீட்டரில் பிரதிபண்ணப்பட்டு அனுப்பி வைக்கப்படுகின்றன.

சிறந்த, உயர்ந்த மேலை நாட்டுப் படங்களை இலங்கையில் திரையிட்டு வரும் சிலோன் தியேட்டர்ஸ் ஸ்தாபனத்தார், மிக விரைவில் இக்குறையை நீக்கப் போகின்றனர் என்று தெரிகிறது.

நவீன வசதிகளுடன் கூடிய பெரிய தியேட்டர் ஒன்றினை கொள்ளுப்பிட்டியில் நிர்மாணிக்கத் திட்டமிட்டிருக்கின்றனர். விரைவில் இத் திட்டம் செயற்பட வேண்டும் என்று ரசிகர்கள் எதிர்பார்க்கின்றனர்.

### நட்சத்திரங்களின் ஹொக்கிப் போட்டி

தமிழ் சினிமா உலக நட்சத்திரங்கள் சென்னையில் ஹொக்கி விளையாடப் போகின்றனர். நாட்டில நெருக்கடி ஏற்படும் வேளைகளில் சினிமா நட்சத்திரங்கள் போதுமான பணம் சேகரித்து அளிப்பது வழக்கம். அந்த போல் இந்திய தேசிய பாதுகாப்பு நிதிக்காக ஹொக்கி விளையாட்டின் மூலம் பணம் சேகரிக்க முடிவு செய்துள்ளனர்.

இம்மாதம் 22ம் தேதி சென்னை மாநகர சபை விளையாட்டு மைதானத்தில் இந்த ஹொக்கி விளையாட்டுப் போட்டி நடைபெறுகிறது. இப்போட்டியில் சிவாஜி கணேசன், ஜெமினிகணேசன், சாவித்திரி, தேவிகா, சரோஜாதேவி உட்பட பல முன்னணி நட்சத்திரங்களும் கலந்து கொள்வார்கள் என்று தெரிகிறது.

தென்னிந்திய பிலிம் வர்த்தக சபை இந்த விளையாட்டுப் போட்டியை ஏற்பாடு செய்துள்ளது.

### நல்லதும் கெட்டதும்

ஓரியன்ற் விளையாட்டு வளர்ச்சி நுண்கலைச் சங்கத்தினரின் 'நல்லதும் கெட்டதும்' என்னும் நாடகம் 23-12-62 அன்று அரங்கேற்றப்பட இருக்கிறது.

இந் நாடகம் வடமாகாண உதவிக் கல்வி அதிகாரி ஞலைமையில் சுழிபுரம் அரசினர் விக்டோறியா கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

### யாழ் கலை அரங்கப் பரிசுத் திட்டம்

நாடகத்துறையில் ரசிகர்களும் நெருங்கிய தொடர்பு கொள்ளுவதற்கு ஒரு புதிய முறைப் பரிசுத் திட்டத்தை கொழும்பு யாழ் கலை அரங்கத்தினர் வெளியிட்டுள்ளார்கள்.

யாழ் கலை அரங்கத்தினரின் சமூக நாடகமான 'ஒன்றே குலம்' அரங்கேற்றத்தை யொட்டி இப்பரிசுத் திட்டத்தை வெளியிட்டுள்ளனர்.

இப் பரிசுப் போட்டியில் ஐந்து கேள்விகள் உள்ளன. அனைத்தும் நாடகம் சம்பந்தமானதாகவே உள்ளன. இப் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு தங்க மோதிரம் ஒன்றும் உட்பட ஐந்து பரிசில்கள் வழங்க முடிவு செய்துள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளூராட்சி மன்றங்களில்

# தமிழ் மொழியில் செயல்பட தாமதமேன்?

## ஊர்காவற்றுறை ஊராட்சித் தலைவர் விடுத்துள்ள அறிக்கை

சிங்களம் மட்டும் சட்டம் அதிவேகமாக அமுல் நடத்தப்படும் இவ்வேளையில், தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள பெரும் தொகையான உள்ளூராட்சி மன்றங்கள் இன்றும் ஆங்கிலத்தில் தங்கள் கருமங்களை நடாத்துவது மிகவும் வெட்கப்படவேண்டிய, வேதனைக்குரிய செயலாகும். நாட்டின் தென் பகுதியிலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் தங்கள் கருமங்களைச் சிங்கள மொழியில் நடாத்தும்பொழுது, நாம் ஏன் தமிழ் மொழியில் செய்யக் கூடாது?

இவ்வாறு ஊர்காவற்றுறைப் பட்டின சபைத் தலைவர் திரு. பி. இம்மனவல் அவர்கள் தமிழ்ப்பிரதேசங்களிலுள்ள உள்ளூராட்சி மன்றத் தலைவர்களுக்குப் பத்திரிகை மூலம் விடுத்த வேண்டுகோளில் கூறியுள்ளார்.

மேலும் அந்த அறிக்கை கூறுவதாவது:

நூற்றுக்கு நூறு வீதம் தமிழ் பேசும் மக்களே வரி செலுத்தும் பெரும்பான்மை உள்ளூராட்சி மன்றங்கள் இன்றும் ஆங்கிலத்திலேயே தங்கள் கருமங்களைச் செய்கின்றன. வரி செலுத்துபவர்களுடனும் ஆட்சியினருடனும் நடாத்தும் கடிதத் தொடர்புகள் அனைத்தையும் ஏன் தமிழ் மொழியில் நடத்தக் கூடாது?



திரு. பி. இம்மனவல்

### தமிழ் ஒழிப்புக்கு நாமே காரணம்

சில உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் அரை குறை ஆங்கில அறிவுடையவர்களாக இருந்தும், கருமங்களைத் தமிழ்மூலம் நடத்தாதது வேடிக்கை நிறைந்ததாக உள்ளது. நாம் தமிழ் மொழி மூலம் கருமங்களைச் செய்யாத காரணத்தால் உள்ளூராட்சி மேல் அதிகாரியின் அலுவலகத்திலுள்ள தமிழ் ஊழியர்களும், தமிழ்ப்பகுதியும் படிப்படியாகக் குறைக்கப்படுகின்றன. அண்மையில் நான் கொழும்பிலுள்ள உள்ளூராட்சி மேலதிகாரியின் காரியாலயத்திற்குச் சென்ற பொழுது, தமிழ்ப் பகுதிகள் சில இல்லாமல் போவதைக் காண முடிந்தது. நாம் தமிழ் மொழியில் நமது கருமங்களைச் செய்தால் இவை இல்லாது போக முடியுமா?


### ஆங்கில மோகம்

சில உள்ளூராட்சி மன்றங்களில் உள்ள குமாஸ்தாக்கள் ஆங்கில மோகம் கொண்டவர்களாக, தமிழில் கருமம் ஆற்றப் பின் நிற்கிறார்கள். இவர்கள் ஆங்கில மோகமுடையவர்களாக இருந்தால் இவர்கள் இடத்தைத் தமிழ்மொழி தெரியாதவர்களாலேயே நிரப்பலாம். இதை உணர்ந்து தமிழ் மொழியில் கருமம் ஆற்ற முற்படும்படி இவர்களை வேண்டுகிறோம்.

வரி செலுத்துவோர் தங்கள் தங்கள் வட்டார அங்கத்தவர்களை இம்முயற்சிக்கு ஊக்கமளிக்கும் வண்ணம் வற்புறுத்த வேண்டும். கணக்குப் புத்தகம், மற்றும் முக்கிய அலுவலகக் குறிப்புப் புத்தகங்களை வரிசெலுத்துவோர் பார்வையிடக்கூடிய முறையில் வைக்கவேண்டும். அப்பொழுதுதான் வரியிறுப்போர் தங்கள் சபை எம்மொழியில் கருமமாற்றுகிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

### சிங்களம் கற்க கடமை விடுமுறையா?

முல்லைத்தீவு பட்டினசபை ஊழியர்களுக்கு கடமை நேரத்தில் சிங்களம் கற்க விடுமுறை வழங்க வேண்டுமென்று உள்ளூராட்சி இலாகாவினால் அனுப்பப்பட்ட சுற்று நிருபத்திற்குப் பதிலளிக்கையில், ஊழியர்களுக்கு வேலை நேரத்தில் சிங்களம் படிக்க விடுமுறை வழங்கப்பட மாட்டாதெனவும், நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள சிங்கள ஊழியர்கள் தமிழ் கற்க முன்வந்தால், மீண்டும் இவ்விடயம் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மட்டக்களப்புத் தமிழ் எழுத்தாளர் சங்க இரண்டாவது மகாநாட்டில், சங்கச் செயலாளர் திரு. இரா. நாகலிங்கம் வரவேற்புரை நிகழ்த்துவதையும், தலைவர் திரு. ரீ. பாக்கியநாயகம் தலைமையுரை நிகழ்த்துவதையும், கூட்டத்திற்குச் சமூகம் கொடுத்திருந்த எழுத்தாளருள் ஒரு பகுதியினரையும் காண்க.

—படம்: "இதயம்"

# அன்பு மகள் அன்பரசிக்கு

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

### நாம் வேடதாரிகள் அல்ல

பொய்யுரைத்திருந்தால், இனிமேல் நாங்கள் கட்சியில் ஒத்துழைக்க மாட்டோம் என்று ஒரு வார்த்தை கூறி இருந்தால், இரண்டு மூன்று நாட்களில் விடுதலையாக முடியும்.

நாங்கள் தமிழரசுக் கட்சி உறுப்பினர். அப்படி போலி வேடமிட முடியாது, மகளே.

நுகேகொடையில் ஜீப்பை மறித்து, எமது தடுப்புக் காவல் குடும்பத்தவர் சொல்லிவிட்ட சில சாமான் வாங்க இறங்கினேன்.

யான் முன்னே, என் பின்னே துப்பாக்கியுடன் ஒரு பொலீஸ். எங்கே யான் போனாலும், எந்தக் கடையில் யான் நின்றாலும் என் பின்னே அப் பொலீஸ். நுகேகொடைக் கடைக்காரர்கள் ஆவலுடன் இக் காட்சியைப் பார்க்காது விட முடியுமா? எல்லாக் கண்களும் எம்மையே மொய்க்கின்றன.

ஒரு கடை, தமிழ்க்கடையது அதுவும் தமிழரசு அனுதாபக் கடை. என்னை அவர்களுக்கு முன்பே தெரிந்திருக்க வேண்டும்.

கடைக்காரர்: நீங்கள் தானே புதுமை லோலன்.

நான்: ஆமாம்.

கடைக்காரர்: உங்களை மேடையிலே பல முறை கண்டிருக்கிறேன். தடுப்புக் காவலிலிருப்பதாகவும் கேள்விப் பட்டோம். செல்வநாயகம் முதலியோர் சுகமாயுள்ளனரோ? நானும் விபரங்களைக் கூறினேன். என்னமோ தெரியாது பொலிசார் அனுமதித்தனர். தமிழ் முகத்தைப் பார்த்து, அனுதாபமுடன் பேசக் கிடைத்த வாய்ப்பை மறக்க முடியவில்லை. பல தமிழ் முகங்கள் கூடி விடை தந்தன.

ஜீப் எங்கள் தடுப்புக் காவலிடத்தை அடைந்தது. என்ன கேட்டனர்? என்ன கூறினீர்கள்? என எம் தடுப்புக் காவல் குடும்பத்தவர்கள் கேட்க நாம் பதில் கூற இன்று கழிகின்றது.

நாற்பத்திரண்டு நாட்களுக்குப் பின்பு வெளியே போய் வந்தது கொஞ்சம் அமைதியாயுள்ளது போல எண்ணுகின்றேன். நாளை வேறு சிலர் விசாரணைக்குப் போகவுள்ளனர்.

வேறென்ன. மற்ற விபரங்களை அடுத்த மடலில் வரைவேன்.

உனது அன்பு அப்பா,

புதுமைலோலன்.

(தொடரும்)

# உணவு இலாகாவின் அசிரத்தை

## ஆயிரக்கணக்கில் அரிசி மூட்டைகள் புதைக்கப்படுகின்றன

உணவு இலாகாவின் கவனக் குறைவினால் ஆயிரக் கணக்கான அரிசி மூடைகள் மனித உபயோகத்துக்கு உகந்ததல்ல என்று புதைக்கப்படும் அவல நிலை பற்றிய செய்தி கிடைத்துள்ளது. நாட்டில் உணவு நெருக்கடியும், நிதி நெருக்கடியும், ஏற்பட்டுள்ள இக் காலத்தில் உணவு இலாகாவின் கவனக் குறைவு குறித்து வருந்தாமலிருக்க முடியாது.

பங்கீட்டு அரிசியின் அளவைக் குறைத்து நாட்டின் நிதி நெருக்கடியைச் சரிக்கட்டிவிடலாம் என்று ஆட்சியாளர் தெரிவித்த தீர்மானத்துக்கு நாடு பூராவும் எதிர்ப்பு ஏற்பட்டது யாவருக்கும் தெரிந்த விடயமே. வெளி நாடுகளிலிருந்து அதிக விலை கொடுத்து வாங்கப்படும் அரிசியைப் பத்திரமாகப் பாதுகாத்து மக்களுக்கு விநியோகிக்க முடியாத நிலையில் உணவு இலாகா உள்ளதை அறியும் போது உண்மையில் வருந்தாமலிருக்க முடியாது.

உணவு இலாகாவின் தானிய சேமிப்பு நிலையங்களில் ஏற்பட்ட [illegible] யின் காரணமாக சேமிப்பில் இருந்த 1000க்கு மேற்பட்ட அரிசி மூடைகள் மனித உபயோகத்துக்கு உகந்தவையல்ல என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆயிரக்கணக்கான மூட்டை அரிசியும் கொழும்பு கிரிலப்பனையிலுள்ள அழுக்குக் குதத்தில் கொண்டு போய் அமிழ்த்தப்படுகின்றன. அரிசியை விலை கொடுத்து வாங்குவதற்கு உள்ள கஷ்டங்கள் போக, அந்த அரிசியைத் தக்க வழியில் பாதுகாக்க முடியாத மையினால், அவற்றை அப்புறப்படுத்தி, அழுக்குகளுடன் சேர்த்து அமிழ்த்துவதிலும் ஆயிரக் கணக்கான [illegible] செலவழிக்கப்படுகிறதாம்.

# தியாகமே...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கள்' நமது நாட்டிலும் இன்று எத்தனையோ பேர்.

மனிதன் ஒரு சிறு அளவில் தனக்குரிய சிறந்த ஆற்றல்களையும், ஈவுகளையும், ஏன் தனது உயிரையும், ஏதோ தான் பெரிதென்று கருதிக் கணிக்கும் உண்மைக்காகப் பலி செலுத்தும்போது கூட தாழ்மையோ, தியாக சிந்தையோ சற்றேனுமின்றி தான் செய்வதையும் கொடுப்பதையுமிட்டு எத்தனையோ வகையில் பெருமை அடைந்து, தன்னையறியாமலே அதைப் போற்றிப் புகழ்ந்து தன்னையே வாழ்த்துகிறான். ஆனால், கிறிஸ்தவில் தாமே முற்று மாய் உறைந்து அவர் மூலம் தம்மை வெளிப்படுத்தியதில் தமது மகிமையைத் துறந்து தம்மைத் தாழ்த்தி, தமது ஒரே பேறான குமாரனையே உயிர்ப் பலியாக ஈந்த கடவுளுடைய தியாகத்துக்கு முன்னின்று மனிதன் தன்னையும், தனது தாழ்மையையும், சேவையையும், தியாகத்தையும் பார்க்குமிடத்து இவையெல்லாம் எம்மாத்திரம்.

கிறிஸ்துவில் துலங்கும் கடவுளுடைய பணியையும், சேவையையும், தியாகத்தையும் நாவினாற் கூறப்புகின் வார்த்தைகள் மனிதனுடைய புல்லிய நாவில் அமையா.

# உரிமைகள்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கள். "நீங்கள் மிருகமாக வாழ்கிறீர்கள். படித்து முன்னேறுங்கள்"—இப்படி அவர்களின் தலைவர்களே அவர்கள் மேடையில் முழங்குவதை ஒதுக்கி விட்டுப் பயன் தரும் செயல் வீரர்களாக மாறட்டும்.

ஒரு சேர் பொன். இராமநாதன், இராசா அண்ணாமலைச் செட்டியார், அழகப்பா, பச்சையப்பா போன்று பணம் படைத்தவர்கள் மலையகத்தில் கல்விக் கழகங்களை உருவாக்கட்டும். அந்த அரும் பணியைத் தொண்டமான், அசீஸ் போன்றோரும் புரிந்துகொள்ளட்டும்.

தங்களால் பல்கலைக் கழகங்களை எழுப்பாவிடினும், கடைசி ஒவ்வொரு கைத்தொழிற்கல்லூரிகளையாவது தங்கள் பெயரால் அமைக்கட்டும். அப்போது மலையக மக்களும் களிப்புடன் வாழ்வர். மலையகத்தின் கல்வியறிவு வளரும். வருங்காலமும் சிறக்கும்.

# தவறு....

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

"கமலா, கமலா".

"இதோ வந்திட்டேன்" குசினிப் புறத்திலிருந்து வந்தது கமலாவின் குரல்.

கதவு திறக்கப்படுகிறது.

"அத்தான்,— நான்-முன்பு-உங்களுக்குச் சொன்னேனே —ச-த்-தி-ய-சீ-ல-ன்— என்னோடு கூடப்படித்தவர்—"

"ஆ, அதற்கென்ன இப்ப..."

"அவர் ஏதோ அலுவலாக டவுனுக்கு வந்தவராம். நான் இங்கையிருக்கிறதென்று கேள்விப்பட்டாற் போல் பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்திருக்கிறார்!" என்றாள் குழைவாக.

கண்கள் கனலைக்கக்க, மனைவியையும் இடறிக் கொண்டு பின் விறாந்தைக்குச் சென்றான் தியாகராஜன்.

சத்தியசீலன், மோகனைமார்போடு அணைத்துக் கொண்டு நிற்பதைக் கண்ட தியாகராஜன், சிலையாக நிலைத்து சத்தியசீலனின் முகத்தையும் மோகனின் முகத்தையும் மாறி மாறிப் பார்க்கிறான்!

பெரும் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த விஞ்ஞானிக்கு அவன் தேடிய உண்மை திடீரெனப் புலப்படும்போது அவனுடைய முகத்தில் ஏற்படக்கூடிய ஒளி தியாகராஜனின் முகத்திலும் தென்பட்டது!

ஒரு வார்த்தையும் பேசாது வீட்டை விட்டு வெளியேறி விடுகிறான் தியாகராஜன்.

(6)

தியாகராஜன் மேரியுடன் கதைத்து விட்டுத் திரும்பிய சிறிது நேரத்தால் கடையில் பீடி வாங்கச் சென்ற சுந்தரம், பீடியும் வாங்காது இரைக்க இரைக்க ஓடிவந்து—"மேரியம்மா! மேரியம்மா! உங்களைக் கண்டு கொண்டு போன ஆளை கார் அடிச்சுப் போட்டுது! இரத்த வெள்ளத்திலே கிடக்கிறார்" என்றதும், "ஓ"வென்று அலறிக் கொண்டு நொடிப் பொழுதில் தியாகராஜன் இரத்த வெள்ளத்தில் கிடக்கும் இடத்துக்குப் பறந்து வந்த சிவராணி, தியாகராஜனின் தலையைத் தூக்கி தனது மடியில் வைத்து......

"அத்தான்! விழித்துப் பாருங்கள் அத்தான்! நான் வந்திருக்கிறேன்!" என்று ஓலமிடுகிறாள்! கூட்டத்திலிருந்த ஒருவர் தண்ணீர் கொண்டு வந்து முகத்தில் தெளித்ததும், முனகிக் கொண்டு அரை விழிகளால் சிவராணியின் முகத்தை நோக்கிய தியாகராஜனின் முகத்தில் ஒரு ஒளி பிறந்து மறைகிறது!

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இறைவா! அவர்கள் தாம் என்ன செய்வதென்பதையே விளங்காது செய்கின்றார்கள். அவர்களை மன்னித்துவிடு-சிலுவையில் அறையப் பட்டபொழுது இயேசு நாதர்**




# அமெரிக்காவில் கிறிஸ்துமஸ்

ஆண்டு தோறும் டிசம்பர் மாதம் 25-ம் நாள் கிறிஸ்துமஸ் நன்னாள். "பூமியில் சமாதானமும் மக்களுக்கு நல் மனமும்" என்னும் வேதவாக்கு அமெரிக்காவில் உண்மையாக ஒலிக்கும் பொன்னாள்.

முந்திய நாள் மாலை வேளை ஜனாதிபதி மாளிகையில் சுருக்கமாக ஒரு சிறு விழா நடக்கும். நாட்டின் தலைநகரில் அதிபர் மாளிகை முன், புல் வெளியில் உயர்ந்தோங்கி நிற்கும் ஒரு மரம் விழாக் கோலம் பூண்டு விளங்கும். ஜனாதிபதி உலக மக்கள் அனைவருக்கும் சமாதானமும் நல்லெண்ணமும் கூறும் வாழ்த்துச் செய்தி ஒன்றை விடுப்பார். மின் விசை ஒன்றை அழுத்துவார்; விழா மரம் முழுதும் மின் விளக்கெரிய ஜ்வலிக்கும்.

### கிறிஸ்துமஸ் முத்திரை விற்பனை

கிறிஸ்துமஸ் காலம், கொடுக்கும் காலம், வழங்கும் காலம். அமெரிக்கர் தம் நாட்டில் இருந்தாலும் வேற்று நாட்டில் இருந்தாலும் நண்பர்களையும், ஏனையோர்களையும் தம் இல்லத்திற்கு அழைத்து மகிழ்விப்பார்கள். கிறிஸ்துமஸ் காலத்தின் பண்பைக் "கிறிஸ்துமஸ் முத்திரை"யின் விற்பனை எடுத்துக் காட்டும். தேசிய க்ஷயரோகச் சங்கம் என்பது இம் முத்திரைகளை வெளியிடுகிறது. முத்திரை ஒன்று ஒரு பென்னி (சென்ட்) விலை. மக்கள் இம் முத்திரைகளை மனமுவந்து வாங்கி, கடிதங்களிலும் ஒட்டி அனுப்புகிறார்கள். இப் பணமெல்லாம் க்ஷயரோகத்தை ஒழிப்பதற்குரிய ஆராய்ச்சித் திட்டங்களுக்கு உதவுகிறது. க்ஷயம் இன்னும் வைத்தியத்திற்கு மடங்காத பிணியாக இருப்பது தெரிந்ததே.

வெளி நாட்டவர்களிடம் தங்களுக்குள்ள நல்லெண்ணத்தைக் காட்டி அன்பளிப்புகள் வழங்கும் மக்கள் பலர்; சங்கங்கள் பல். மதச் சபைகளும், தொண்டுச் சங்கங்களும், பள்ளிக்கூடங்களும், மாதர் சங்கங்களும், உலகமெங்கும் அமெரிக்கப் பொருளுதவியை அனுப்பி வைக்கும் "கேர்" என்னும் கூட்டுறவுச் சங்கமும் அந்த அந்த அன்பளிப்புகளை வெளி நாட்டு மக்களிடம் கொண்டு சேர்க்கின்றன.

### மக்கள் மகிழ்ச்சி

கிறிஸ்துமஸ், மக்கள் பெரிதும் விரும்பி எதிர்பார்க்கும் ஒன்று. அதற்காக அவர்கள் செய்யும் முன்னேற்பாடுகளைப் பார்த்தால் இதை உணரலாம். பனி படிந்த வெளிகளையுடைய டக்கோட்டா ராஜ்யங்களிலும் வெயிலடிக்கும் கலிபோர்னியாவிலும், மாநகர்கள், நாட்டுப்புறத்துச் சிற்றூர்களிலும் மக்களுடைய இந்த மனப்பாங்கை அறியலாம். கடைகளின் காட்சிச் சன்னல்களில் வாங்கத் தூண்டும் பரிசுப் பண்டங்கள் பளபளப்புடன் கண்ணைப் பறிக்கும். கை நிறையப் பல பண்டங்களை அடுக்கிக் கொண்டு மக்கள் கடைக்குக் கடை செல்வதைக் காணலாம். வீதிகள் தோறும் தோரணங்கள் விளங்கும். கிறிஸ்துமஸ் காலத்துக்கே உரிய "சாந்தா கிளாஸ்" உருவம்தெரு முனைகளில் பொருளுதவி கேட்டு மணி அடித்து நிற்பதையும் காணலாம். இப் பொருளுதவி, எளியவர்களுக்கு வழங்குவதற்காகும்.

### "கிறிஸ்துமஸ் மரம்"

ஆண்டு தோறும் கிறிஸ்துமஸ் காலத்தில் 2 கோடி 10 லட்சம் "கிறிஸ்துமஸ் மரங்கள்" விற்பனையாகின்றன. "கிறிஸ்துமஸ் மரம்" நடுவது ஒரு வழக்கம். அழகழகான பிளாஸ்டிக் பொருள்களாலும், பளபளப்பான சரிகைகளாலும், செவ்வரைகள் மிளிரும் குச்சி மிட்டாய்களாலும், பல வர்ண விளக்குகளாலும் ஒளி வீசிக் கொண்டிருக்கும் "கிறிஸ்துமஸ் மர"த்தின் அடியில் இனிமையான பல பரிசுப் பொட்டலங்கள் இருக்கும்; இவை கிறிஸ்துமஸ் காலையில் பிரித்துப் பார்த்து எடுத்துக் கொள்ளப்படும்.



அமெரிக்க ஜனாதிபதி[illegible] மாளிகை[illegible] ஓங்கி, உயர்ந்து நிற்கும் அழகான 'கிறிஸ்துமஸ் மரம்'.

### உலகம் முழுவதும் கிறிஸ்துமஸ் ஒலி

கிறிஸ்துமஸ் விழாக்காலத்தில் நாடக, இசை அரங்குகள் முதலியன நிரம்பி வழியும். கிறிஸ்துமஸின் உலகப் பொதுத் தன்மை, கிறிஸ்து பிறப்பு, ஞானிகள் கிறிஸ்துவைக்கண்டு வணங்கிய வரலாறு முதலியவற்றை விளக்கிக்காட்டும் நாடகங்களும், காட்சிகளும் பள்ளிக்கூடங்களிலும் நடக்கும். வீடுகளிலும், ரயிலடிகளிலும், கடைகளிலும், உணவு விடுதிகளிலும், வானொலியில் கிறிஸ்துமஸ் இன்னிசை மிதந்து வரும்.

விதம்விதமான கிறிஸ்துமஸ், புத்தாண்டு வாழ்த்து மடல்கள் கோடி கோடியாகத் தபால்களில் செல்லும்.

சமாதானமும் நல்லெண்ணமும் வழங்கும் கிறிஸ்துமஸ் செய்தியை இவ்வண்ணம் பற்பல வழிகளில் நாடு நெடுகிலும் உலக முழுவதும் ஒலிக்கச் செய்கிறார்கள்.

## ஆண்டவன் ஒருவன்

—"அக்கரை மாணிக்கம்"—

அண்ணா உலகில் கடவுள்கள்
ஒன்று இரண்டா ஒருநூறு......?
எண்ண முடியாக் கடவுள்கள்
இருக்கும் காரணம் கூறுயா......?

கடவுள் ஒருவன் உலகுக்கு
கற்பதன் பயனே அவனுக்கு
மடைமையாலே சில பேர்கள்
மண்ணில் கடவுள் நூறென்றால்......

ஆண்டவன் ஒருவன் எல்லோர்க்கும்
அவனை அடையும் வழிகள் பல
வேண்டுதல் வேண்டாமை இல்லாதான்
வேண்டார் மனதில் நில்லாதான்......

ஆறுகள் நூறு ஆனாலும்
அவைகள் அடையும் கடலொன்று
கூறும் மார்க்கம் பலவெனினும்
கொள்ளும் கடவுள் ஒன்றேதான்......

இவ்வார இதழில் வெளியாகவிருந்த
ஜீ. அன்றனி ராசையாவின்
**சிறுவர் கதை**
**அடுத்த வாரம் இடம் பெறும்**

## அப்பாவும் மகனும்

மகன்: அப்பா! உலகமே நாடகமேடை, நாமெல்லோரும் அதில் நடிகர்கள் என்று ஷேக்ஸ்பியர் கூறியிருக்கிறாரே?

அப்பா: ஆமாம்! அதில் என்ன சந்தேகம்?

மகன்: அப்படியானால் ரசிகர்கள் யாரப்பா?

அப்பா: ? ! ?

அன்புள்ள மருமக்களே!

நீண்ட நாட்களுக்குப் பின் உங்களை மீண்டும் சந்திக்கிறேன்.

அனைவருக்கும் எனது உளமார்ந்த 'கிறிஸ்துமஸ்' வாழ்த்துக்கள்.

உங்கள் வகுப்பு இறுதிப் பரீட்சையில் நன்றாக எழுதியிருப்பீர்களென நம்புகிறேன்.

பரீட்சையில் தேர்வுற்றோருக்கு எனது வாழ்த்துக்கள். தேர்வு பெறத் தவறியவர்களுக்கு—புன்சிரிப்புடன் தோல்வியை ஏற்று, புது உறுதியுடன் முயலுங்கள் என்றே சொல்ல விரும்புகிறேன். அடுத்தமுறை கட்டாயம் வெற்றி!

விடுமுறை நாட்களில் உங்கள் பூரண ஒத்துழைப்பை 'வளர்மதி' மகிழ்வுடன் வரவேற்று நிற்கின்றது.

வணக்கம்.

உங்கள் அன்பின்,

வளர்மதி [signature]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## சமாதானத்துக்கு உழைத்த நேருவுக்கு எம்மவர் உபதேசம் செய்யும் விந்தை

### இணுவில் தமிழ் மன்றக் கூட்டத்தில் தலைவரின் பேச்சு

உலக நாடுகளுக்கெல்லாம் சமாதானம் பேசி, ஊருக்கு உபதேசம் செய்த நேரு அவர்களுக்கு இன்று தம் நாட்டுப் பிரச்சினையைத் தீர்க்கத் தெரியாதவர்கள் சமாதானம் புகட்ட முற்பட்டிருப்பது வேடிக்கையிலும் வேடிக்கை தான். வேண்டாத பெண்டாட்டி கைபட்டால் தோஷம் கால் பட்டால் தோஷம் என்பது போல நாடு பிடிக்கும் ஆசை கொண்ட சீனருக்கு எல்லைப் பிரச்சினை ஒரு தோஷமாகத் தென்படுகிறது. கொம்யூனிஸ்ட் நாடுகள் என்று கூறும் பல நாடுகளே சீனக் கொம்யூனிட்டுக்களைக் கண்டிக்கும் போது, இலங்கைக் கொம்யூனிஸ்டுகள் சீனரின் அடிவருடிகளாக இருப்பது வருந்த வேண்டிய தொன்றாகும். அதுவும் தவிர, பொய்யையே வாய்மையாகப் பறைசாற்றும் பீக்கிங் ரேடியோவுக்கு தமிழ் அறிவிப்பாளராக ஒரு யாழ்பாணத் தமிழனை அனுப்பி வைத்ததே இலங்கைப் பிற்போக்காளர்களான கொம்யூனிஸ்ட் கட்சியினர் என்பதை நினைக்கும் போது கண்ணீர் விட்டுக் கதற வேண்டும் போலிருக்கின்றது. முற்போக்கு என்ற பெயரில் விழித்தபடியே பள்ளத்தை நாடி ஓடும் முற்போக்காளர்களுக்குப் புத்தி கூறப் போனால் நாம் பிற்போக்காளர்களாகி விடுவோம். ஆனால் இதற்காக, இவர்களைக் கண்டிப்பதுடன் நின்று விடாது எமது ஆதரவையும், அனுதாபத்தையும் பாரத நாட்டிற்கே உதவ வேண்டும்.

இவ்வாறு இணுவில் தமிழ் மன்றத்தின் பொதுக் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசிய மன்றத் தலைவர் திரு. கே. ●ஸ். ஆனந்தன் குறிப்பிட்டார்.

இணுவில் இளந்தாரி கோவில் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் இணுவில் தமிழ் சினிமா ரசிகர் சங்கத் தலைவர் திரு. பெ. சு. பதி பேசும்போது "நான் பௌத்தன், பௌத்த மதமே எனது உயிர், எனப் பறை அறைந்த ராஜரத்தினா இன்று பீக்கிங் புகழ் பாடும் பிற்போக்குக் கூட்டத்தில் ஒருவராகி விட்டார். பௌத்த மதத்தின் உருவான கௌதம புத்தர் பிறந்த நாட்டை, டாங்கிகளும், பீரங்கிகளும் கொண்டு, சுடுகாடாக்கும் சீனர்களின் புகழ் பாடுகின்றார். பௌத்தமத குருமார் எல்லோரும் கூட பாரதத்திற்கே எமது ஆதரவு எனக் கூறும் போது 'பௌத்தன்' என்று தன்னைக் கூறிக்கொள்ளும் ராஜரத்தினா போன்றோர் பற்றி நாம் பேசுவதே அருவருக்கத் தக்கதாகும்" என்று குறிப்பிட்டார்.

மன்றத்தின் பொருளாளரான திரு கா. நடராசா நன்றியுரை கூற, கூட்டம் முடிவெய்தியது.

### கலாபிவிருத்திக் கழகம் சம்மாந்துறை

சம்மாந்துறை கலாபிவிருத்திக் கழக வருடாந்தப் பொதுக் கூட்டம் 9-12-62ல் சம்மாந்துறை மேற்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. 'ஈழமேகம்' எம். ஐ. எம். எல். பக்கீர்தம்பி, ஜனாப்களான எஸ். ஏ. றுசீக், யூ. செயின், பஸீல் காரியப்பர், கே. எம். காரியப்பர் ஆகியோர் பேசினர்.

தீர்மானங்களாக கழகத்தின் கையெழுத்தேடான "கலைக்குர"லை அச்சுவாகன மேற்றுவதும், கழகத்தின் மாதர்கிளை அமைப்பைத் தீவிரமாக்குவதும், சமூக நாடக மொன்றை அரங்கேற்றுவதும் நிறைவேற்றப் பட்டன.

நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: ஜனாப் ஏ. எச். எம். அப்துல்லா, துணைத் தலைவர்: ஜனாப் கே. எம். காரியப்பர் செயலாளர்: யூ. எம். முஸ்தபா, துணைச் செயலாளர்: ஜனாப் எம். ஐ. எம். அலியார், பொருளாளர்: ஜனாப் ஐ. உதுமாலெவ்வை ஆகியோராவர். செயற்குழு உறுப்பினர்கள்: ஜனாப்கள் எம். வை. எம். உசைன், எம். அமானுல்லா, ஏ. எல். எம். யாசீன், எம். எம். இஸ்மாயில்.

### திருக்கேதீச்சரத்தில் திருவாசக விழா

எதிர்வரும் திங்கட்கிழமை (31-12-62) முதல் 9-1-63 வரையுள்ள திருவெம்பாவைத் திருநாட்களில் திருக்கேதிச்சரத்திலுள்ள திருவாசக மடத்தில் திருவாசக விழாவும் சாதனையும் நடைபெறும்.

இந்நிகழ்ச்சிகளில் சென்னை 'கலைமகள்' ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன், திருவாசக மணி கே. எம். பாலசுப்பிரமணியன், திரு. பி. ஏ. எஸ். இராஜசேகரன் ஆகியோரும் ஈழத்துப் பேரறிஞர் பலரும் பங்கு பற்றுவர்.

வண்ணை சி. எஸ். எஸ். மணி பாகவதர், கொக்குவில் திரு. த. குமாரசாமிப்பிள்ளை, திரு. வ. க. ஆறுமுகம், திரு. த. இராசலிங்கம், திரு. சி. விஞசித்தம்பி ஆகியோரின் கதாப்பிரசங்கங்களும், இசை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

தினமும் திருவாசக இன்னிசை மணிகளின் திருவெம்பாவையும், திருவாசக பாராயணமும் நடைபெறும். தாய் நாட்டிலிருந்து வரும் பெருமக்கள் (ஜனவரி மாதம் 4, 5, 6ம் நாட்களில்) வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் கலந்து கொள்வர்.

சாதனையில் கலந்து கொள்ள விரும்புவோருக்கு வேண்டிய வசதிகள் யாவும் திருவாசக மடத்தில் செய்து கொடுக்கப்படுமென ஈழத்துச் சிவனடியார் திருக் கூட்டச் செயலாளர் திரு. சி. சரவணமுத்து தெரிவிக்கிறார்.

### பிரிவுபசாரக் கூட்டம்

'ஆசிரியர்கள் எல்லோரும் இலங்கையின் பல பாகங்களிலும் சேவை செய்ய முன்வர வேண்டும். ஆசிரியர்களின் சேவை மகத்தானது. பெற்றோர்களுடன் ஆசிரியர்கள் தொடர்பு கொள்வதன் மூலமாக மாணவர்களுக்குச் சிறந்த கல்வியைப் புகட்ட முடியும். வருங்காலச் சிறார்களுக்கு முன்மாதிரியாகவே ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். எனவே நீங்கள் மரியாதையுடனும், கடமையில் கண்ணும் கருத்துமாக இருந்து உங்களது கடமையைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்'. இவ்வாறு கடந்த 3-12-62ல் கண்டி முஸ்லிம் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இரண்டு வருடப் பயிற்சியை முடித்து வெளியேறும் அறுபது ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்ட பிரிவுபசாரக் கூட்டத்தில் அதிபர் ஜனாப். ஏ. எம். ஏ. கபூர் கூறினார்.

மேலும் போதனாசிரியர்களான ஜனாப், எச். எம். தையிப், அல்ஹாஜ் ஏ. எம். எம். கவுஸ் மௌலவி, திருவாளர்கள் கே. சிவானந்த நாயகம், கோ. கோணசப் பிள்ளை, குணசேகரா, ஆகியோரும் பேசினர். ஆசிரிய மாணவர்களான மௌலவி றூஹல்ஹக், சாஜஹான், சலீம் ஆகியோர்களும் பேசினர். ஐ. ஏ. றஸ்ஸாக் என்பவரால் பிரிவுபசார வாழ்த்து வாசிக்கப்பட்டது.

### நாவலர் நினைவுப் போட்டிகள்

கொழும்பு விவேகானந்த சபையார் இவ்வருடம் நடத்திய நாவலர் நினைவு கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டிகளில் பின்வருவோர் பரிசு பெறுகின்றனர். மேற்படி சபை மண்டபத்தில் நடைபெற்ற நாவலர் குருபூசை விழாவின் போது இவர்களுக்குரிய பரிசுகள் வழங்கப்பட்டன.

#### கட்டுரைப் போட்டி

முதற் பரிசு: எம். வாமதேவன், ஹற்றன் உயர்கல்லூரி. இரண்டாம் பரிசு: மு. நல்லுசாமி, நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரி. மூன்றும் பரிசு: வே. ஏரம்பமூர்த்தி, சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாசாலை.

#### பேச்சுப் போட்டி

கீழ்ப்பிரிவு:

முதற்பரிசு: வே. கௌரி மனோகரி, நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரி. இரண்டாம் பரிசு: கி. கலைவதனி, கொழும்பு விவேகானந்த வித்தியாலயம். மூன்றும் பரிசு: சொ. சண்முகம், கொழும்பு விவேகானந்த வித்தியாலயம்.

மேற்பிரிவு:

முதற் பரிசு: ச. சந்திரா [illegible] தய கல்லூரி. இரண்டாம் பரிசு: இ. துரைசிங்கம், மூலைத்தீவு சைவ வித்தியாசாலை. மூன்றும் பரிசு: அ. தேவராஜ், நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரி.

1961ம் வருடத்துக்கான அகில இலங்கைச் சைவசமய பாடப் பரீட்சையில் அகில இலங்கை பரிசிற்குரிய தங்கப் பதக்கங்களும் பின்வருவோர்களுக்கு வழங்கப்பட்டன.

மேற்பிரிவு- 1

முதலாம் பரிசு: மு. சிவானந்தன், அனலைதீவு சதாசிவ ஆங்கில பாடசாலை. இரண்டாம் பரிசு: செ. முருகானந்தம், புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி.

மேற்பிரிவு- 2

முதலாம் பரிசு: மு. வேற்பிள்ளை, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி. இரண்டாம் பரிசு: த. சச்சிதானந்தம், மட். இ. கி. ச. தமிழ் ஆண்கள் பாடசாலை, காரைதீவு.

மத்தியபிரிவு:

முதலாம் பரிசு செல்வி. பொ. நாகேஸ்வரி, இளவாலை தென். வடமேற்கு மெய்கண்டான் பாடசாலை,

### இருபாலை சைவபரிபாலன சங்க பத்தாவது ஆண்டு விழா

சனிக்கிழமை (22-12-62) அன்று மாலை உயர்திரு. சேர். கந்தையா வைத்தியநாதன் தலைமையில் இருபாலை சைவ பரிபாலன சங்கத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு விழா நடைபெறும்.

அன்றைய தினம் சங்க வளர்ச்சிக்கு அயராது உழைத்து வருபவராகிய திரு. நா. சின்னத்துரைசாமியார் அவர்களின் சேவையைப் பாராட்டிப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படும்.

அன்றைய நிகழ்ச்சியில் திரு. க. கந்தையா, திருமதி அமிர்தாம்பிகை சதாசிவம். திரு. சி. சிவானந்தன், திரு. கே. பி. ஹரன், திருமதி சத்தியதேவி துரைசிங்கம், திரு. க. நா. வேலன் முதலியோர் உரை நிகழ்த்த உள்ளனர். அத்துடன் திரு. ப. தியாகராசாவின் நூதன இசைக் கச்சேரியும் நடைபெறும்.

### நத்தார் புதுவருட நிகழ்ச்சி

மாதகல் சென் தோமாஸ் சனசமூக நிலையத்தினரால், நத்தார், புது வருட தினத்தையொட்டி இம் மாதம் 30-ம் திகதி மாலை 7-30 மணியளவில் சென் தோமாஸ் ஆலய முன்றலில், சிறந்த நடனங்களும், கண்ணைக் கவரும் ஓவியங்களும், உணர்ச்சியூட்டும் கட்டங்களும் ஒருங்கே அமையப்பட்ட 'வாழ்க்கைப் புயல்' என்னும் சமூக நாடகம் நடித்துக் காண்பிக்கப்படும். அன்பர்கள் அனைவரும் அழைக்கப்படுகிறார்கள்.

### ஐக்கிய முன்னேற்றச் சபை

தாவடியிலும் இன்னும் பல ஊர்களிலுமுள்ள ஆறு சங்கங்களின் பெரு முயற்சியால் இச்சங்கம் சென்ற வாரம், தொடக்கப்பட்டது. இளைஞர்களிடையே சமயம், சமூகம், கல்வி, விளையாட்டு முதலிய துறைகளில பல சீர்திருத்தங்களைச் செய்வதே இதன் அடிப்படைநோக்கம்.

சென்ற வாரம் நடைபெற்ற கூட்டத்தில் ஒவ்வொரு சங்கத்திலுமிருந்து இருஅங்கத்துவர் சமுகமளித்திருந்தனர். இச் சபைக்கென ஏற்படுத்தப்பட்ட விதிகளையும்பிரமாணங்களையும் இவர்கள் ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர். ஓர் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நடத்துவதாக ஏகமனதாக ஏற்கப்பட்டு டிசம்பர் 22ம் திகதி முதலாவதாக போட்டி நடைபெறுமெனவும் முடிவு செய்யப்பட்டது. முதலாவது பிரிவு, இரண்டாவது பிரிவு என வகுக்கப்பட்டு போட்டி நடைபெறுமெனவும் முடிவு செய்யப் பட்டது. பின் வருவோர் சபையின் உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப் பட்டனர்.

தலைவர் பொ. இராமநாதன், செயளாளர் க. சிவானந்தன், பொருளாளர் ச. திருநாவுக்கரசு, பொ. நடராசா, வை. விஞயகமூர்த்தி. இ. கந்தசாமி, எஸ். சுப்பிரமணியம், ஆர். பரமேஸ்வரலிங்கம், எஸ். மகாதேவா, ரீ. ஸ்ரீஸ்கந்தா ஆகியோர் நிர்வாகக்குழு அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப் பட்டனர்.

நிர்வாகக் குழுக் கூட்டங்கள் தாவடி கணேசா வாசிகசாலையில் நடைபெறும்.

### காலத்தை...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டதா? அல்லது பலரால் பாடப்பட்டதா என்ற ஐயம் எழுகிறது.

அன்று வாழ்ந்த ஐந்து பெரும் புலவர்களால் பாடப்பட்ட, கலிப் பாக்களின் தொகுப்பே இந்நூல். இது வரலாற்று ஆசிரியர்களின் முடிபு.

நெய்தற் கலியைப் பாடிய நல்லந்துவனாரே இதைத் தொகுத்துள்ளார் என்பது நமக்குக்கிடைத்த ஒரு தனிச் செய்யுள் மூலம் அறிய முடிகிறது.

"நாடும் பொருள் சான்ற
நல்லந்துவனான்
கூடு பிறைச் சொக்கன்
துணைப் புலவோர்-தேடுவார்
கூட்டுறவே, வாழ்த்தோடு,
கொங்காங் கலியினையே
கூட்டினன்
ஞாலத்தோர்க்கு"

எனவே புலவர்கள் காலத்திலேயே தொகுப்பு நிகழ்ந்துள்ளது என்பதை மேலே உள்ள செய்யுள் மூலம் அறிய முடிகிறது.

(தொடரும்)

### இன்னல்படும்..

(2-ம் பக்கத் தொடர்ச்சி

கிறிஸ்தவர்களான தமிழர்களும், கிறிஸ்தவரல்லாத தமிழர்களும் கிறிஸ்துவின் வாக்குகளில் ஆறுதலைக் காணலாம். "நீதியின் நிமித்தம் உபத்திரவப் படுகிறவர்கள் பாக்கியவான்கள்" என்பது கிறிஸ்து பெருமானின் அருள் வாக்குகளில் ஒன்று. ஈழத்தில் வாழும் தமிழ் பேசும் மக்களாகிய நாம் இன்னல் பல படுகிறோம். எங்கள் சத்துருக்களை எதிர்க்க எம்மிடம் ஆயுதபலமில்லை. ஆனால் கிறிஸ்து காட்டிய, காந்தி காட்டிய சத்தியாக்கிரக வழி எங்களுக்கு வெற்றியை அளிக்கும். சுதந்திரன் வாசகர்கட்கு நத்தார் வாழ்த்துக்கள் உரியன.

### மாணவ மன்ற ஆண்டு விழா

வவுனியா பூந்தோட்டம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவ மன்ற ஆண்டு விழா, தலைமையாசிரியர் திரு. நீ. அந்தோனிப் பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

தலைவர் தமது தலைமையுரையில் இப்படியான மன்றங்கள் மாணவரிடையே ஒற்றுமையையும் உணர்ச்சியையும் ஊட்டி வளர்க்கத் தக்கன எனக் கூறினார்.

மாணவர் மன்றத்தினால் 'உண்மையின் உயர்வு' என்ற நாடகமும் நடன நிகழ்ச்சிகளும் நடத்திக் காண்பிக்கப் பட்டன.

ஆசிரியை செல்வி சு. தவமணி தேவியின் இன்னிசைக் கச்சேரியும் நடைபெற்றது. கூட்டத்திற்குப் பெருந்திரளான பெற்றோர்கள் சமுகம் அளித்திருந்தனர்.

காரியதரிசியின் நன்றியுரையுடன் கூட்டம் முடிவடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3-வது வாரம்!

மருதானை
செ ன் ட் ர லி ல்



# காணத்தவறுதீர்கள்!

கதையாலும், இன்னிசையாலும் இதயத்தைக் கவர்ந்திழுக்கும் உணர்ச்சிமிக்க ஒப்பற்ற ஓவியம்!

## தூல்-கா-பூல்

காதிற்கினிய பாடல்கள்:
லதா மங்கேஷ்கர் — மொகமட் ரபி

ராஜேந்திர குமார் *மாலா சின்ஹா * நந்தா அஷோக்குமார்
ஆகியோர் நடித்த இவ் ஹிந்திப் படம்
பம்பாயில் மட்டும் 25 வாரங்களுக்கு மேல் ஓடியது !!

எதிர்பாருங்கள் ! பத்மினி பிக்சர்ஸ்

## குழந்தைகள் கண்ட குடியரசு

---

குளிர்சாதனம் பொருத்தப்பட்ட மெஜஸ்டிக் திரையில்
இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

## கிங் ஒப் கிங்க்ஸ்

டெக்னிக் கலர்
டெக்னிராமா

## (ராஜாதி ராஜன்)

அதிக பணச் செலவில் உருவாக்கப்பட்ட உயர்தரமானதும்,
இதுவரை தயாரிக்கப்படாததுமான கிறிஸ்துவின் சரிதம்.

எல்பின்ஸ்டன் (மருதானை) ரீகல் (வெள்ளவத்தை)

மகத்தான நான்காவது வாரம்!

எஸ். எஸ். ராஜேந்திரன்—விஜயகுமாரி—எம். ஆர். ராதா—எஸ். வி. ரங்கராவ்
நடித்த

## சாரதா

சிலோன் தியேட்டர்ஸ் திரைகளுக்கு விரைவில் வருகிறது !

திலிப்குமார்
மதுபாலா
பிருதிவிராஜ்
நடிக்கும்


## அக்பர்

(பம்பாயில் 2 வருடங்கள் தொடர்ந்து ஓடிய மொகல் இ அஸாம் என்ற உன்னத ஹிந்திப் படத்தின் தமிழ்ப் பிரதி)

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

செல்லமஹால் (கொட்டாஞ்சேனை) ரீகல் (நுவரெலியா)
ரீகல் (கம்பளை) குமரன் (மன்னார்)

எம். ஆர். ராதா — எஸ். எஸ். ராஜேந்திரன் — விஜயகுமாரி
பி. எஸ். சரோஜா—சந்திரகாந்தா—கே. ஆர். ராமசாமி
ஓ. ஏ. கே. தேவர்—மனோரமா நடிக்கும்



## எதையும் தாங்கும் இதயம்

சங்கீதம்:
டி. ஆர். பாப்பா

பின்னணி : பி. லீலா, பி. சுசீலா, டி. எம். சௌந்தரராஜன், ஜானகி, ராகவன்

---

# வெற்றிகரமாக இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) வெம்பிளி (கண்டி) ராஜ் (நீர்கொழும்பு) விஜயா (மட்டக்களப்பு) மொடேர்ன் (பண்டாரவளை)



காமினி திரையில்
வார நாட்களில் தினசரி பிற்பகல் 2-00 மணிக்கும்

கர்ணாமிர்தமான இசையும், ஆனந்தமூட்டும் நடனங்களும் ஒருங்கே அமைந்த ஒப்பற்ற கலைப் படைப்பு!

இந்திரா பிலிம்ஸ் அளிக்கும்

## ஆட வந்த தெய்வம்

'கல்லார்வி'யின் 'கலீர் கலீர்' கதையைத் தழுவியது

இப் படத்தில்
இராமாயண கதாகாலட்சேபம்
ஓர் தனிச் சிறப்பான அம்சம்.

பின்னணி : சீர்காழி கோவிந்தராஜன்—பி. லீலா—பி. சுசீலா
ஏ. எல். ராகவன்—ஜமுனாராணி.

இசை:
கே. வி. மகாதேவன்

டைரக்ஷன்:
ப. நீலகண்டன்

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் [illegible] கொழும்பு, பண்டாரநாயக்க மாவத்த, 194ஏ, இலக்கத்தில் 1962-ம் வருடம் டிசம்பர் [illegible] அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org